



# மொழிபெயர்ப்பாளர்




கவிஞர் த. கோவேந்தன் (1932) வட ஆர்க்காடு வேலூரில் பிறந்து—படித்து வளர்ந்தவர். பாவேந்தரோடு நெருங்கிப் பழகியவர். தமிழகத்தின் பல்வேறு துறைப் பேரறிஞர்களின் நட்பில் இணைந்தவர். 1972இல் சோவியத்து நாடு நேரு பரிசினைப் பெற்றவர். 'வானம்பாடி', 'கவிஞன்' என்ற கவிதை ஏடுகளை நடத்தியவர். தமிழில் ஆழங்கால் பட்டவர். உலகமொழிக் கவிதைகளைத் தமிழில் தரும் ஆற்றலும் ஆர்வமும் மிக்கவர். இருபதுக்கு மேற்பட்ட கவிதை—உரைநடை நூல்களை எழுதி உள்ளவர். உலகப் பல்கலைக் கழகம் இவர்க்கு டாக்டர் பட்டம் வழங்கி உள்ளது. அரிய நண்பர்களையும் நூல்களையும் வாழ்வின் துணையாகக் கொண்டவர்.

CLS

MAMALLAN SIMSON
by T. KOVENDAN

விலை ரூ. 18·00 (இந்தியாவில் மட்டும்)



மில்ட்டன்

# மாமல்லன் சிம்சோன்

தமிழாக்கம்

த. கோவேந்தன்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX 501, PARK TOWN, MADRAS-600 003

Prose translation of Milton's Samson Agonistes

*First Published* : 1990

முகப்போவியம் : வீர. சந்தானம்

விலை ரூ. 18.00

Printed at The Diocesan Press, Madras-600 007. B1277

# அணிந்துரை

உலகப் பெருங் கவிஞர் மில்ட்டன் படைத்துள்ள சிம்சோன் பற்றிய காவியம் பயில்தொறும் இலக்கிய—இறையியல் எழுச்சிநிலைகளை ஏற்படுத்தவல்லது. கிறிஸ்தவத் திருமறையாகிய விவிலிய நூலில் அடங்கும் கதை நிகழ்ச்சிகள் அத்தனையும் மணியானவை. அவற்றின் முதற் சூழலில் மட்டுமின்றி, வாசிப்போரின் வாழ்க்கை, சமுதாய அமைப்பு ஆகிய பின்னணிகளோடும் ஊன்றிப் பார்த்திட முயன்றவர்கள் இலக்கியச் செல்வங்களைப் படைத்து உலகிற்கு வழங்கியுள்ளார்கள். அத்தகு சிறப்புடையதாகத் திகழ்கிறது மில்ட்டனின் காவியம். ஏமாற்றங்கள், தோல்விகள் ஆகியவற்றோடு பார்வை இழப்பையும் அடைந்த அப்பெருங்கவிஞர் சிம்சோனின் நிலையில் தம்மைக் காண முற்படுகின்றார். 'என் பார்வையின்மை, என் விலங்கைவிட, இவ் இருட் குகையைவிட, வறுமையைவிடக் கொடியது. கடவுளின் முதற் படைப்பாம் ஒளியினை என்னால் நுகரமுடியாது. என்னைச் சற்று மகிழ்விக்கும் மற்றெல்லாம் இப் பேரிழப்பால் நிலையாய் மறைக்கப் பட்டிருக்கின்றன' (பக். 47).

சிம்சோனை அவன் தந்தை மனோவாவும், காதலி தெலீலாளும் சந்தித்திருந்தால் எத்தகு உரையாடல்கள் எழுந்திருக்க முடியும் என்பதைத் தம்முடைய சொந்த வாழ்க்கைப் பின்னணியோடு எண்ணிப் பார்க்கிறார் கவிஞர். படிப்போருக்கு தெலீலாள்மீது இரக்கம் ஏற்படத் தோன்றும் வகையில் அவளுடைய பேச்சு அமையவே செய்கின்றது. 'உங்கள் உடல் வலிமை உங்களிடமிருந்து எடுக்கப்பட்டு விட்டால், மறச் செயல்களை நோக்கி வெளியே செல்ல மாட்டீர்கள் என்று எண்ணினேன். உங்கள் அன்பை அதன்

மூலம் இரவும் பகலும் துய்க்கலாம் என்று நினைத்தேன். அதன்பின் நீங்கள் என் அடிமையாய், நீங்கள் வெறுக்கின்ற பெலித்தியர்களின் அடிமையாய் இல்லாமல், எனது அன்பின் அடிமையாய் வாழ்வீர்கள் என்று நினைத்தேன். நீங்கள் என் விலைமதியா உடைமை. தொலைவிடங்களுக்குச் சென்று தொல்லையான பணிகளில் உங்களைத் தோயச் செய்து உங்களை நான் இழக்க விரும்பவில்லை. வீட்டிலேயே உங்களை வைத்துக் கொள்வதின்மூலம் நான் பிரிவுத் துன்பமோ அச்சமோ இன்றி இருக்கலாம் என்று எண்ணினேன்' (பக். 76). ஆனால் சிம்சோனின் வைரம்பாய்ந்த நெஞ்சில் நிறைந்து நின்ற குறிக்கோள் அவனை எங்ஙனம் நிலைபிறழா வண்ணம் நிற்கச் செய்கிறது என்பதனை அழகுற எடுத்துக்காட்டுகிறார் கவியரசர் மில்ட்டன்: 'அரேபியக் காடுகளிலே தங்களையே எரித்துக்கொண்டு சாம்பலாகிவிடுகின்ற தீப் பறவைகள் (போனிக்சு), சாம்பலிலிருந்து மீண்டும் இளமையோடு உயிர்த் தெழுவதைப்போன்று மறைந்த சிம்சோனின் வலிமை மீண்டும் புத்தம் புதிய பொலிவுடனும் வலிவுடனும் வெளிப் பட்டுள்ளது' (பக். 112).

தன் மைந்தன் தனக்காற்றிய நன்றி எத்தகையது என் பதை உணர்ந்துகொண்ட நிலையில் மனோவா, 'அவன் எதைச் செய்தாலும், செம்மையாகச் செய்தான். நல் நோக்கத்திற் காய்ச் செய்தான். இதைவிடச் சிறந்த இறப்பு வேறு ஏதுவு மில்லை. எனவே அவன் மறைவுக்காய் நாம் வருந்தத் தேவை யில்லை. மாறாக மகிழ்ச்சியும், மனநிறைவும் கொள்வோம்' (பக். 113) என்று உள்ளம் திறந்து பேசுகிறார். குழு ஆட்கள் எழுப்பும் தங்கள் இறுதிப் பாடலில்: 'சில நேரங்களில் கடவுள் நம்மை வெறுப்பதுபோல் தோன்றும். ஆனால் அவர் மீண்டும் எதிர்பாராத வகையில் நமக்கு நன்மை செய்வார்' (பக். 114) என்று இறையாற்றலின் திறத்தை வியந்து போற்றி மகிழ்கிறார்கள்.

இச்சிறந்த காவியத்தைத் தமக்கே உரித்தான எளிய, இனிய தமிழ் நடையில் வழங்கும் கவிஞர் த. கோவேந்தன் அவர்கள் தமிழகம் நன்கறிந்த தனிப்பெரும் கவிஞர்களுள்

ஒருவர் ஆவார். 'தமிழ்பா நிலவு' என போற்றப்பெறும் நண்பர் கோவேந்தன் உரைநடையிலும் கவிதைப் படைப்புக்கு ஈடான ஆற்றலும், திறனும் கைவரப் பெற்றவர் என்பது இந்நூலைப் படிக்கும்போது தெளிவாகின்றது. 'ஏன் மில்ட்டனின் இந்தக் காவியத்தைக் கவிதை வடிவில் மொழி பெயர்க்கவில்லை?' என்று நான் அவரிடம் கேட்டபோது, 'நீங்கள் என் எழுத்துப்படியைப் படித்துப் பார்க்கும்போது அதற்கு விடையைத் தெரிந்துகொள்வீர்கள்' என்று கூறினர். மூலக் காவியத்தின் சுவை குன்ருமல் வழங்குவதற்கும்—வாசகர்கள் எளிதில் புரிந்துகொள்வதற்கும் தகுந்த உரை நடையை அவர் தேர்ந்துள்ளார். பல ஆங்கிலக் கவிஞர் களின் பாடல்களை அவ்வப்போது மொழிபெயர்த்துள்ள நண்பர் கோவேந்தன் அவர்களின் இந்த உரைநடை ஆக்கத் தைப் படிக்கும்போது கலில் கிப்ரான், தாகூர், பாரதி, பாரதிதாசன் ஆகியோரின் உரைநடைச் செல்வங்களை நினைந்து பார்க்காமல் இருக்க முடியவில்லை. பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய 'மில்ட்டன் வரலாறு' இந்நூலுக்கு அணி செய்யும் வகையில் சேர்க்கப்பட்டுள்ளது. சிம்சோன் வரலாற்றைக் கூறும் திருமறைப் பகுதியையும் வாசகர்களுக்கு மூலக் கதையின் வடிவத்தைத் தெளிவுபடுத்துவதற்காக இணைத்துள்ளோம். வரலாற்றுப் பின்னணியில் மில்ட்டனின் படைப்புகளை ஆய்வு செய்திடும் அரிய கட்டுரையைத் திரு. ஆ. இரா. வேங்கடாசலபதி எழுதி வழங்கியுள்ளார். இந்தப் பின்னணிகளோடு மாமல்லன் சிம்சோனின் நெஞ்சுரத்தைக் காட்டும் காவியத்தின் உரைநடை ஆக்கத்தைப் பயில்வோர் பெருதற்கரிய இறையியல் சார்ந்த இலக்கிய அனுபவத்தைப் பெற்றிடுவர் என்பதில் ஐயம் இல்லை.

இந்நூலைப்போன்ற தமிழாக்கச் செல்வங்கள் பலவற்றை வழங்கும் பணியைத் தம்முடைய பல்திறப்பட்ட தமிழ்ப் பணிகளோடு இணைத்துக்கொண்டு தம் எழுத்துப் பணியைக் கவிஞர் கோவேந்தன் அவர்கள் தொடரவேண்டும் என்பது

என் இறை வேண்டல். கிறிஸ்தவ இலக்கியச் செல்வங்களைப் பல்லாண்டுக் காலமாகப் பல வடிவங்களில் வெளியிட்டுவரும் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் மாமல்லன் சிம்சோன் எனும் நூலை வெளிக்கொணர்வதில் பெருமைகொள்கிறது. முன்பு சாமுவேல் வேதநாயகம் தாமஸ் அவர்களும் பேராசிரியர் அருணாசலக் கவுண்டரும் பதிப்பித்துதவிய பூங்காவனப் பிரளயம் (Paradise Lost—Books I&II) என்னும் நூலை வெளியிட்டதன் பின்னர் இக்காவியத் தமிழாக்கத்தையும் வெளியிடுவதில் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் ஒரு நிறைவினைக் காண்கிறது.

சென்னை
6–3–1990

அன்பன்
தி. தயானந்தன் பிரான்சிஸ்

# நுழைவாயில்

1948ஆம் ஆண்டு நான் ஒன்பதாம் வகுப்பில் நுழைந்த காலம். ஆங்கில நெடுங்கணக்கைக் கற்பித்த ஆசிரியரே எனக்கு ஆங்கிலப் பாட ஆசிரியர். தமிழ்ப் பாடல்களை நன்கு மனத்தில் பதியும்படி செய்யும் நல்லாசிரியரைப் போலவே வல்லமைமிக்கவர் இசரவேல் என்ற கிருத்துவப் பெருந்தகை. நாற்பதாண்டுகளுக்கு மேலாகியும் அவர் நடத்திய ஆங்கிலப் பகுதிகள் அனைத்தும் இன்றும் எனக்கு மனப்பாடம். என் ஒருசாலை மாணாக்கர்களை இன்று கண்டாலும் நாங்கள் அன்று பெற்ற ஆங்கில அறிவுக்கு அவரையும் எங்கள் தலைமை யாசிரியரையும் நினைவுகூர்வோம்.

காப்பியக் கவிஞர் மில்ட்டனைப்பற்றிக் கவிஞர் வேர்ட்சு வொர்த்து எழுதிய பதினான்கு அடிப் பாடல் ஒன்று தொடர்ந்து நான்கு வகுப்புகளில் நடத்தி முடித்தார். ஆசிரியர் பாடல் நெஞ்சில் கல்மேல் எழுத்தாயிற்று. ஆங்கில நாட்டு வரலாறும் தெரிந்தது. அதே காலத்தில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட 'ஆங்கிலப் புலவர் வரலாறு' எங்கட்குத் துணைப்பாடம். அதில் மில்ட்டன் வரலாறு கா. அப்பாத்துரையாரால் வரையப்பட்டிருந்தது. வேர்ட்சுவொர்த்துப் பாடலும் அதில் தமிழாக்கப்பட்டிருந்தது. ஆனால் அப் பாடல் எங்கள் ஆங்கில வகுப்பாசிரியர் நடத்திய அளவு புரியவில்லை. அவ்வளவு கடினமாக அந் நாளில் பட்டது.

பாட்டெழுதும் பயிற்சியில் எனக்கு அந் நாள்கள் நடை வண்டிக் காலம். பாவேந்தரின் 'குயில்' மாத ஏட்டில் என் பாடல் ஒன்று இடம்பெற்று என் பாட்டூற்றுக்கு உந்தாற்ற லாக இருந்த காலம். எனவே வேர்ட்சுவொர்த்து மில்ட்டன் பற்றிப் பாடிய பாட்டினைத் தழுவி:

'திருவள்ளுவனே! திருவள்ளுவனே! திரும்ப வேண்டுகிறேன்
தென்னாட்டில் நீ பிறந்தாலன்றிச் செந்தமிழர் வாழார்.
பெருமை இழந்தார், உரிமை இழந்தார், வீரம் இழந்தாரே.
பீடுறும் வாழ்வும் இல்லை அடடே! பேடிகள் ஆனாரே;
ஒருவன் நீதான் உலகை உயர்த்தும் உரம்கொள் சிந்தனையின்
ஓர் வழிகாட்டி, ஒளிரும் ஞாயிறு; முழங்கு பேராழி.
திரும்ப வருக, திரும்பி வருக, தேவை நின் வருகை!
சீர்திருத்தம்மிகு பெரியார்க்குற்ற தோழனும் ஆனாயே;
கருவை அழித்து வந்தேறிகளின் காலடி இல்லாமல்
காப்பாய், நாட்டை; மீட்பாய் எங்களைக் கடிதில் வாராயோ.
உருவ வணக்கம், ஊழல் மதங்கள், ஓராயிரம் சாதி
உண்டாக்கியவரை ஒழித்திட வருக; உலகைக் காப்பாயே!
திருவிட நாட்டில் தேவை நின் ஆட்சி திருவள்ளுவனே வா!
செந்நாப் புலவா! புரட்சித் தீயில் புத்துல கமைப்பாயே!'
என்று எழுதினேன். இப் பாடலை அப்பொழுது பள்ளியில் நானும் என் நண்பர்களும் கூட்டாக இருந்து கையெழுத்து ஏடாக நடத்திய 'தமிழணங்கு' மாத ஏட்டிலும் வெளியிட்டோம். பாடலைப் படித்த என் தமிழாசிரியர் பாராட்டினார். ஆனால் யாப்பின் அளவைமீறிய அடிகளைக்கொண்ட பாட்டு என்றார் (இன்றாயிருந்தால் மூன்று தாழிசைகள் ஒரெதுகை கொண்ட பாட்டு என்றிருப்பேன்).

ஆங்கிலப் பாடல்களைத் தழுவி எழுதுவதும், எனக்குப் புரிந்த அளவு மொழிபெயர்ப்பதும் என் பள்ளிப் பருவத்திலேயே தொடங்கிவிட்டன.

உயர்நிலைப் பள்ளியோடு தடைபட்ட என் கல்வி தமிழின் திசை திரும்பியது. ஆங்கிலத்தை ஆசிரியரின்றியே கற்கத் தொடங்கினேன். ஐம்பதுகளில் வெளிவந்த பல நல்ல தமிழ் மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், கதைகள், புதினங்கள் எல்லாம் என்னை அந்தந்த மூல நூல்களைத் தேடிப் படிக்கத் தூண்டின. அவற்றில் பெரிதும் எனக்குத் துணைபுரிந்தவை பள்ளி—கல்லூரி ஆங்கிலத் துணைப்பாட நூல்கள். கல்லூரி இளங்கலை, முதுகலை பாட நூல்களும் பாட்டிலக்கியத்தில் பெரிதும் துணைபுரிந்தன. அந் நூல்களின் உரையாசிரியர்

களே என் ஆசிரியர்கள். என்னுடன் படித்துக் கல்லூரியில் பயின்ற உயர்நிலைப் பள்ளியின் ஒருசாலை மாணாக்கர்களும் என் ஆங்கில இலக்கியப் பயிற்சிக்கு உறுதுணையாளர்கள்.

1956-க்குப் பிறகு இருமொழி வல்லுநரான ம. இலெ. தங்கப்பாவின் உறவு, பாவேந்தரால் பண்பட்டுவந்த என்னை ஆங்கில இலக்கியத்தின்பால் மேலும் முனைப்பாக்கிற்று. அவருடைய தமிழாக்கங்களும் என்னை மேலும் உந்தித் தள்ளின; தமிழிலும் புதிய புதிய திருப்பங்கட்கு ஆளாக்கின.

முறைமன்ற நடுவராகவும், உயர் அறமன்ற நீதியரசராக வும் விளங்கிய திரு. சு. மகராசன் அவர்களால் சேக்சுபியரை நன்கறிந்தேன். அவரின் ஆர்வந்தரும் நல்லுணர்ச்சியும்; பொதுவுடைமை இயக்கத்தோடிருந்த நெருக்கமும் என்னை ஆங்கிலவழி சோவியத்துப் பாட்டிலக்கியத்தில் ஈடுபடுத்தின.

மொழிபெயர்ப்பின் பண்பும் பயனும் அறிந்த நான் உலகமொழிப் பாட்டிலக்கியங்களைக் கற்பதில் ஒரு தீராக் காதலனாகவே உள்ளேன்.

ஆங்கில இலக்கியத்தில் பலரையும் உலகறியச் செய்யும் எந்தப் பெயர்ப்பாளரும் 'தெய்வமாக்கவி' மில்ட்டனை ஏன் தமிழில் அறிமுகப்படுத்தவில்லை என்று நெடுநாளாக எண்ணிய துண்டு. துறக்க நீக்கத்தில் கைவைத்த பலரும் தோல்வி கண்டிருப்பதை அறிந்தேன். ஒப்பிலக்கியக்காரர்களும் தப்பி யோடியிருப்பதைக் கண்டேன்.

எட்டு ஆண்டுகட்குமுன் நடைபாதையில் 'மாமல்லன் சிம்சோன்' ஆங்கிலப் பதிப்பு—உரையுடன் கிடைத்தது. உரையைப் படித்து மூலத்தைப் படித்ததும் மில்ட்டனின் 'நுணங்கு நுண்பனுவற் புலமை' புரிந்தது. சங்கச் சான் றோரின் அருமையும் ஆழமும்கொண்ட பாங்கு தெரிந்தது. பன்மொழிப் புலமையால் பெற்ற செஞ்சொல்லின்பக் காட்சி கொங்குவேளிரின் பல்லலங்காரப் பாங்கு நடையில் விரிந்தது. எனவே கருத்தூற்று மலையூற்றாய்ப் பொங்கிப் பொலியும் இக் காப்பிய நாடகத்தைத் தமிழில் தர முந்தினேன்.

சிறந்த இலக்கியம் என்பது மிகுந்த பொருட்செறிவு மிளிரும் மொழியே என்பதற்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் இந் நாடகத்தைத் தமிழில் பெயர்க்கையில் மூலத்தின் சிக்க லற்ற எளிமை இருக்கவேண்டும்; கருத்துணர்ச்சி கமழ வேண்டும்; இவ்விரண்டும் கற்பவர் நெஞ்சில் நேரிடையாகப் பாயவேண்டும் என்ற நோக்கோடு யாப்பமைதியை விட்டு உரைநடையைக் கையாண்டேன் (யாப்புவழிப் பெயர்ப்பில் தான் மில்ட்டனின் உள்ளொளி பாய்ச்சும் உணர்ச்சி வெள்ளத்தைக் காட்ட முடியும். அவ் வழியிலும் நூல் வெளி வரும்). யாப்பொழுங்குபெற்ற பாட்டில் ஓசை இன்பம் மட்டும் இல்லை; உணர்ச்சி இருக்கிறது; ஓர் அழகிருக்கிறது; அதில் ஒரு புதை பொருள் இருக்கிறது. ஏன், வாழ்வின் எல்லா உயிர்ப்பாற்றலும் இருக்கிறது.

மில்ட்டனின் பாட்டாண்மையில் மூன்று வகையான குரல்களைக் கேட்கிறோம்; வீட்டு வாழ்க்கை, நாட்டு வாழ்க்கை, உலக வாழ்க்கை என்பன. முதலில் பாவலன் தனக்குள்ளேயே பேசிக்கொள்கிறான்; அடுத்து நாடக மாந்தர்வழித் தன் குரலை வெளிக்காட்டுகிறான்; பின்னர் உலகத்தைப் பார்த்து விளிக்கிறான்.

முழுமையின் அழகை, ஆழத்தை நாம் பார்ப்பதுதான் சிறந்த படைப்பின் இயல்பாகும். அவ் வகையில் ஆங்கில இலக்கியத்தில் ஆழங்கால்பட்ட தோழர் ம. இலெ. தங்கப்பா குற்றங்குறைகளை நீக்கி நாடகச் சிற்பத்தைச் செப்பம் செய்து தந்தார்.

நாடகக் காப்பியத்தின் பெயர்ப்பைக் கண்ட அளவில் மில்ட்டனின் இலக்கியப் பெருமையும் அருமையும் அதன் கருத்துச் செறிவில் மட்டுமில்லை, காலத்தின் பின்னணியி லும் உள்ளது; மக்கட் புலவன் அதனாலேயே சிறக்கிறான் என்பதை எடுத்துக்காட்டி மில்ட்டனின் வாழ்வுப் பின்னணி யினை அரும்பாடுபட்டுத் தமிழிலக்கிய வரலாற்று ஆசிரியர் கட்கு ஒரு முன்னோட்டத்தைக் காட்டினார் இளவல் ஆ. இரா. வேங்கடாசலபதி.

'தலைமகன் ஒருவனின் உயிர்க்குருதி போன்றது ஒரு நல்லேடு; அது நறுமணம் இட்டுப் பேணப்பட்டு வாழ்க்கை கடந்த பெருவாழ்வை எதிர்நோக்கிப் பதனம் செய்துவைக்கப் பட்டதாகும்' என்ற மில்ட்டனின் மொழிக்கேற்ற ஏடுகளை எழுதுவதையும், அத்தகைய அரிய நூல்களையே வெளியிடு வதையும் வாழ்வின் குறிக்கோளாகக்கொண்டியங்கும் இன்றைய திரு.வி.க. வாகவும் விளங்கும் அருள்திரு. டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ் இந் நூல் வெளிவருவதற்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்தார்கள்.

இம் மூவர்க்கும் மிக்க நன்றியுடையேன். வாழ்விலும் கலையிலும் மாந்தர் ஓர் உவகையைக் காணவேண்டும், ஓர் உந்தாற்றலைப் பெறவேண்டும் என்ற வேட்கையோடு மில்ட்டன் தீட்டிய 'மாமல்லன் சிம்சோன்' வாழ்க்கைப் புரட்சிக்கு வழிகோலட்டும்.

தோழன்
த. கோவேந்தன்

# மில்ட்டன் வரலாறு

## இறைபணிக்கே தம்மை ஆட்படுத்திய ஆங்கிலக் கவிஞர்

### இளமையும் கல்வியும்

ஆங்கில இலக்கிய உலகில் சேக்சுபியருக்கடுத்தவரும் சேக்சுபியருக்குக் கிட்டத்தட்ட ஒப்பானவரும் ஆன கவிஞர்பிரான் மில்ட்டனேயாவர்.

சேக்சுபியர் எழுதியவை முப்பது நாடகங்களும் ஒன்றிரண்டு சிறு காப்பியங்களுமே. அவற்றுள் இறவாச் சிறப்புப் பெற்றவை நாடகங்களுள் பத்து அல்லது பன்னிரெண்டு தலைசிறந்த நாடகங்களேயாகும். இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும் எழுதும் இறையருள் பெற்ற இக் கவிஞர்பிரான் தாம் எழுதியதை இரண்டாம் முறை பாராத அளவு விரைவில் எழுதியமையால் எழுதிய நூல்களின் பெருமையத்தனையும் அவர் இயற்கையறிவின் பெருமையேயாகும்.

ஆனால் மில்ட்டன் சிறு காப்பியங்களும் எழுதியுள்ளார்; பெருங் காப்பியங்களும் எழுதியுள்ளார்; இரங்கற்பாக்களும், நாடகங்களும் எழுதியுள்ளார். போக உரைநூல்களும் எண்ணில. அந் நாளைய பிற நாட்டுப் புலவர்களுடன் அந் நாளைய புலவர் பொது மொழியாகிய இலத்தீனத்தில் நூல் வெளியீட்டு மூலம் சொற்போர் புரிந்தும் உள்ளார். இவர் சேக்சுபியர் போன்றே அருட்கவி என்பதில் ஐயமில்லையாயினும், அருளுடன் அறிவையும் முயற்சியையும் ஒருங்கே பயன்படுத்தி அருளுக்கோர் அருந்திறன் தந்தவர் ஆவர். இவர் முதல் முதல் எழுதிய கவிதைகளில்கூட உயர்ந்த செம்மைப்பாடு உள்ளதென்பதில் ஐயமில்லை. ஆனால் பிற்காலக் கவிதையில் இதனோடுகூட

ஆழமும் பொருட்செறிவும் வினையாண்மையும் அகலமும் உள்ளன. இவர் எழுதிய ஒவ்வொரு வரியும் உணர்ச்சி வேகத்தில் உருவாக்கப் பெற்றுப் பின் அறிவாற்றல் கொண்டு நன்கு திருத்தமும் நயமும் பெற்று விளங்குவது. எனவே சேக்சுபியர் நூல்களில் காணப்படும் சிறு பிழைகளும், மட்ட உரைப்பகுதிகளும் இவரது கவிதையில் கிடையா.

இவர் எழுதிய நூல்கள் ஒவ்வொன்றும் அவற்றின் துறையில் ஆங்கில இலக்கிய உலகில் ஒப்புயர்வற்று விளங்குபவை ஆகும். நாடக உலகில் கூட, சேக்சுபியர் முயற்சிக்குப் புறம்பான ஓர் துறையில் இவர் எழுதியதனால் அதுவும் ஒப்புயர்வற்றதாகவே விளங்குகிறது.

சான் மில்ட்டனின் தந்தையாரும் சான் மில்ட்டன் என்ற பெயரையே உடையவர். இவர் பத்திர எழுத்தாளராயிருந்தார். இளமையிலேயே இவர் தம் தந்தையுடன் சமய வேறுபாட்டால் பிரிந்து தம் முயற்சியினால் தனிப்பட வாழ்ந்தவர். கொஞ்ச நாட்களுக்குள்ளாக இவர் கையில் சற்றுப் பொருள் ஏற்பட்டது. அதனையும் தொழிலில் ஈடுபடுத்தித் தம் கட்சிக்காரருக்கு அவ்வப்போது வட்டிக்குக் கடன் கொடுத்தும் வந்தார். இவருக்குத் தம் தொழிலைவிட நூல்களில்தான் ஆர்வம் மிகுதி. பாட்டுக்கள் எழுதுவதிலும் அப்படியே. உழைப்பின் கடுமையை நன்கறிந்தவராதலால் தம் பிள்ளை புலவராயிருக்க வேண்டும் என்று இவர் மிகுந்த முன் கருதலுடையவராயிருந்து வந்தார். ஆனால் அவர்கூடத் தம் மகனார் உலகின் முதற் பெரும் புலவர் வரிசையுள் ஒருவர் ஆவார் என்று நினைத்திருக்கமாட்டார்.

கவிஞர் சான் மில்ட்டன் 1608 திசம்பர் 9இல் பிறந்தவர். வல்லுநர் சான் காலெட்டு என்பவரால் நிறுவப்பெற்ற செயின்ட் பால் பள்ளிக்கூடத்தில் இவர் பயின்றார். அதன் தலைமை ஆசிரியர் அலெக்சாண்டர் கில் என்பவர் திறமை மிக்க ஆசிரியரேயாயினும், அத் திறமையால் அடைந்த புகழைப் போலவே பிரம்படிக்கும் புகழ் வாங்கியவர். சான் இத்தகையரது பள்ளியில் நன்கு உழைத்திருக்க வேண்டு மென்பதில் ஐயமில்லை. ஆனால் அது போதாமல் வீட்டிலும்

அவருக்கு வேறு ஆசிரியர்கள் வைத்துத் தந்தையார் நூல்றி வின் பல துறைகளையும் இவருக்குப் புகட்ட முனைந்தார். சான் மில்ட்டனுக்கும் நூல்களில் தந்தையைப் போன்றே விருப்பமும், தந்தையின் முற்போக்குவாய்ந்த சீர்திருத்த சமயத்தில் (Extreme Protestantism or Puritanism) பற்றும் இருந்தமையால் இவ் ஓயா முயற்சியிடையும் தளரா ஊக்க முடையவராயினர்.

''எனது இளமை முதற்கொண்டே தந்தையார் இடையறு ஊக்கத்துடன் எனக்கு மொழிகளின் அறிவையும் அறிவியல் துறைகளின் அறிவையும் புகட்டிவந்தார். பள்ளியி லும் வீட்டிலும் எனக்குப் பல ஆசிரியர்கள் பல துறைகளில் பயிற்சி தரும்படி அத் தந்தையார் (இறைவன் அவருக்கு இன்னருள் புரிக) அமர்த்தியிருந்தனர். உயர் தனிச் செம் மொழிகளில் வல்லவனுக வேண்டுமென்ற விருப்பம் எனக்கும் இருந்தமையினுல் நான் முயன்று உழைப்பைப் பன்மடங் காக்கினேன்' என்று அவரே கூறுகிறுர்.

பள்ளிப் பயிற்சி முடிந்தபின் மில்ட்டன் கேம்பிரிட்ச பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கிறித்து கல்லூரியில் பயிற்சி பெறச் சென்றுர். இக் காலத்தில் மில்ட்டன் இளமையும் வனப்பும் மிக்கவராயும், பொன்மைமிக்க நீண்ட முடி உடையவராயும் இருந்தனராம். அதனுடன் (இத்தகைய வெளியழகுடன் பொதுப்படையாகக் காணுதற்கரிதான) இறைவன் பற்றும் உடையவராயிருந்ததனுல் உடனொத்த மாணவரிடையே இவர் 'கிறித்து கல்லூரியின் இளம் கன்னி' என நகைத்திறம்பட அழைக்கப்பட்டார்.

இலக்கிய உலகில் பிறக்கும்பொழுதே அவர் இளங் குயிலாகப் பிறந்திருக்க வேண்டும். அதினும் பிற குயில் களைப் போன்ற குயில் அல்லர் இவர். இவர் வேறு இறைபணி யிலேயே நின்ற நேர்மையுடைய குயில் என்னல் வேண்டும். பொன்னை ஒத்த உயர் அறிவு புது மலரின் மணத்தை ஒத்த இனிமையுடன் கலந்து, இரண்டும் சேரப் பொன்மலர் நாற்ற முடையதாயிற்று. விவிலிய நூலின் அருட் பாட்டுப்பகுதி 136-க்கு அவர் செய்த மொழிபெயர்ப்பு, மொழிபெயர்ப்

பென்று சொல்ல முடியாதபடி தனி நயமுடையதாயிருப்பது காண்க:

'மன்னும் எம் இறை இன் அருள் மாறின்றிப்
பின்னி நின்றது பேசும் உயிர்களே;
அன்ன தாகலின் அன்னவன் வான்புகழ்
பன்னிப் பன்னிப் பராவுவம் வாரீரே'

Let us with a gladsome mind
Praise the Lord, for He is kind;
For His mercies aye endure,
Ever faithful, ever sure

என்றவாறு காண்க.

கேம்பிரிட்சு பல்கலைக் கழகத்தில் இளம் புலவர் (B.A.) பெரும்புலவர் (M,A.) என்ற பட்டங்களைப் பெற்றபின் மில்ட்டன் தம் தந்தையார் அப்போது குடிமாறிய இடமாகிய பக்கிங்ஆம்சயரிலுள்ள கார்ட்டனுக்கு வந்தார்.

கவிதையே தமது வாழ்க்கைப் பணி என்பதைக் கல்லூரியிலேயே இவர் உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். 'கிறித்து பிறந்த நாள் காலைக் கொண்டாட்டம்' (Ode on the morning of Christ's Nativity) என்னும் நடனப்பாட்டு அல்லது கும்மி அங்கே அவர் எழுதியது ஆகும். 'உமது வாழ்க்கையில் நீர் செய்யப்போவது யாது?' என உசாவிய நண்பர் ஒருவர்க்கு எழுதிய கடிதத்தில், 'என் நினைப்பா! அஃது இறவாப் புகழுடைய ஈசனைப்பற்றியது! இதை உன் காதில் மட்டுமே இப்போது கூறுகிறேன். இப் பெரும்பணிக்கென இப் பொழுதே என் இறகுகளை யான் கோதிக் கத்தரித்துக்கொள் கிறேன்' என்று அவர் கூறுகிறார்.

## 1. கவிதையின் செவ்வி

இக் காலத்தில் இவர் நாட்டுப்புறத்தில் வாழ்ந்தது இவரது கவிதையின் செவ்விக்கு ஒத்ததாகவே இருந்தது. அதற்கேற்ப அவரும் தமது உறைவிடத்தை அழகுபட அமைத்துக் கொண்டனர். இனிய காட்சிகளும் இன்னொலி

களும், இனிய மணமும், மெல்லிய தென்றலும், நறுங்கனிகளும் நிறைந்து அஃது அழகுத் தெய்வத்தின் உறைவிடமோ என்ன விளங்கிற்று.

இக் காலத்தில் இவர் எழுதிய கவிதைகளிலெல்லாம் இத் தென்றல் மணத்தையும் இவ் இன்னிசையையும் காணலாம். இவற்றுள் முதன்மையானது கோமஸ் (Comus) என்பது. இதில் யாழொலிக்கும் இனிமையூட்டும் பாட்டுக்கள் பல உள்ளன. இளைஞர் களியாட்ட உணர்ச்சியை இது நன்கு புலப்படுத்துகின்றது. களிமகன் (L'Aliegro) நிறைமகன் (Il Pensoroso) என்ற தலைப்புடைய இரு கவிதைகள் ஒன்றுக்கொன்று இணைப்புடைய இரு மணிகள். முதலது களிப்புடைய ஒருவன் ஒருநாட் பொழுதை எங்ஙனம் போக்கி எங்ஙனம் துய்க்கிறான் என்பதையும், பின்னது அதேபோல நிறைவும் அறிவும் உடைய ஒருவன் எங்ஙனம் அப்பொழுதைக் கழிக்கிறான் என்பதையும் காட்டுகின்றன. ஒவ்வொருவனது மனப்பான்மைக்கும் ஒத்தபடி காட்சிகள், கருத்துக்கள் இருவேறு வகையாகத் திரிக்கப்பட்டு இரு வேறு வகைத் தெய்வத் தொகுதிகளின் செயல்களாகச் சுவைபட வரையப்பட்டுள்ளன.

லிசிடசு என்ற இரங்கற்பா ஒன்றும் அர்க்கேடில் (முல்லையங்கானம்) ஒன்றும் முல்லைத் திணைக்குரிய ஓவியங்கள் ஆகும். இவற்றுள் முன்னது (மில்ட்டனுடைய) நண்பர் எட்வர்டு சிங் என்பவரது பிரிவாலேற்பட்ட நினைவுகளைத் தருகிறது. ஆங்கில இலக்கியத்தின் இரங்கற்பாக்களுள் இது தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது.

## 2. நாடு சூழ் வரல்

நம் நாட்டில் சமயப் பற்றுடையார் காசி, இராமேச்வரம் செல்வதுபோல இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய நாடுகளில் இலக்கியம், நாகரிகம், கலை ஆகியவற்றுள் பற்றுடையார் அவற்றை ஐரோப்பாவுக்குத் தாய் நாடுகளான இத்தாலி, கிரேக்கம் முதலிய பல நாடுகளைச் சுற்றிப் பார்வையிடுவர். எனவே கலையினும் அறிவினும் மேம்பட விரும்பிய மில்ட்ட

னுக்கும் அத்தகைய விருப்பம் இருந்தது இயற்கையே. தந்தையும் தமது குறுகிய வருவாயிடையேயும் இதற்கான செலவை மனமார அவருக்குத் தந்தனர்.

உயர்தனிச் செம்மொழியாகிய இலத்தீனம், தற்காலத் தாய்மொழிகளுள் முதற்படியிலுள்ள இத்தாலியம் ஆகிய இவ்விரு மொழிகளிலுமுள்ள இலக்கிய வெள்ளத்தை அள்ளிப் பருகிய மில்ட்டனுக்கு இத்தாலி நாட்டின் பெருநகரங்களான செனோவா, லெக்கார்ன், பீசா, ஃபிளாரன்சு, உரோம், வெனிசு முதலியவை வெறும் நகரங்களாக அல்லாமல் விர்கில், ஓரேசு, சுவனல், தந்தே, பெட்ரார்க்கு முதலியோரின் நினைவூட்டுகளாகவே விளங்கின. வானஇயல் வல்லுநரான கலீலியோவையும், டச்சு நாட்டிலுள்ள கிரோட்டியசு என்று பேர்போன வரலாற்றாசிரியரையும் மில்ட்டன் கண்டது இப்பயணத்தின் போதேயாகும்.

மில்ட்டன் இத்தாலி நாட்டிலிருக்கும்போது இங்கிலாந்தில் அரசரது முடியரசுக்கு எதிராகப் பாராளுமன்றத் துரிமையாளர் போர் தொடங்கினர் என்பது கேட்டார். மில்ட்டன் பாராளுமன்றத்தின் மிக முற்போக்கான கட்சித் தலைவரான கிராம்வெலின் நண்பர். எனவே அப் போரில் பங்குகொள்ளவேண்டுமென விரைந்து தாய்நாடு வந்தார். ஆனால் இவர் படைப்போருள் என்றும் கலந்ததாகத் தெரியவில்லை. அவர்தம் கட்சிக்குச் செய்த துணையெல்லாம் கலைப் போரும் சொற்போருமே.

## 3. அரசியல் வாழ்வும் உரைநடை நூல்களும்

1640 முதல் 1660 வரை இருபதாண்டுகளாக மில்ட்டன் காவியத் தெய்வத்திற்குத் தற்காலிகமாக வணக்கம் செய்து விட்டு அரசியல் துறையிலேயே ஆழ்ந்து ஈடுபட்டுச் சொற் போர்த்தாள்களும், உரை நூல்களுமே எழுதுவாராயினர். இத்தகைய சிறு நூல்கள் இருபத்தைந்து வரை உள. அவற்றுள் சில அவர் பெயர் தாங்கின. சில புனைபெயரும், சில மறைபெயரும் தாங்கின. இவற்றுள் தலைமை வாய்ந்தது, 'அரியோபகிட்டிகா' என்பது. இது 'பேச்சுரிமை' பற்றி

யது. கிரேக்க நாட்டின் பழந்தலைநகரான அதேன்சின் நாட்டாண்மை மன்றமாகிய அரியோப்பகசின் பெயரடியாக வந்தது இப் பெயர். இதன் கொள்கை மிக உயரியது. நடைமுறையில் இன்றும் அருமையாய்ப் பேரிலக்காய் நிற்கத் தக்கது. 'நிலமாதுக்குப் பொறையாக வாழ்வோர் எத்தனையோ பேர் உளர்; ஆசிரியர் அத்தகையர் அல்லர். அவர்களுடைய வாழ்க்கையின் முதிர்ந்த மணிகளே நல் நூல்கள் ஆகும். உலக வாழ்வின் மிக்கதோர் பெருவாழ்விற்குரிய திறவுகோல்கள் ஆகும் தகுதியுடையவை அவை' என்பது போன்ற பல அரிய நல்லுரைகள் இதில் அடங்கியுள்ளன. இதற்கொப்பான இன்னோர் உரைநடை நூல் கல்வியின் உரிமைபற்றியதாகும். இது தம் புதல்வியர்க்கு அவர் கல்வி கற்பிக்கும் போது எழுந்த நினைவுகளாம்.

இந் நூல்களின் உரைநடை மிகவும் செழுமையும் நயமும் உடையது. ஆயினும் அடிக்கடி அது கடுமை என்னும் ஒரு வழுவிற்கு மட்டும் ஆளாயிருந்தது. மில்ட்டன் இந் நூல்களை அரசியல், வாழ்வியல் பணிகளுக்காகச் செய்தனரேயன்றி நூல்கள் என்ற இலக்கிய நோக்கால் எழுதவில்லை. இதையே அவரும் 'எனது வலக்கை கவிதைக்கும் இறைவன் புகழுக்கும் மட்டுமே உரியதாகலின், இந் நூல்களில என் இடக்கையின் ஆற்றலையே காணலாகும்' எனக் கூறினர்.

இங்ஙனம் வலக்கை வாளா இருந்த காலத்தில் அது வளராது அங்ஙனமே இருந்துவிடவில்லை. முன்னம் அவர் கவிதையில் எல்லாக் கவிஞர்களின் கவிதைகளிலும் காணப்படும் மென்மையும், நயமும் மட்டுமே தலைசிறந்திருந்தன. அரசியல், வாழ்வியல் முதலிய வினைத்துறைகளிலீடுபட்டு உலக மக்களுடைய உள்ளநிலைகள், எண்ணப் போக்குகள் ஆகியவற்றில் தோய்ந்து அவற்றின் உள்ளுறை நுட்பங்களையும் பொருள் திட்பங்களையும் அறிந்தபின்தான் மில்ட்டன் கவிதை ஓமர், கம்பர், காளிதாசர், தந்தே முதலியவர்களின் கவிதைகளுக்கொப்பாக மென்மையும், உரமும், சொல் நயமும், பொருள் நயமும் செறிந்து விளங்கலாயிற்று.

இல்பென்சரோசோ (நிறைமகன்) என்ற கவிதையில் இவரே குறிப்பிட்டபடி துன்பமே இவருக்கு உயர் அறிவுக் கண்ணைத் தந்து இவர் கவிதையையும் தெய்வீகக் கவிதை யாக்கிற்று என்னலாம். அத் துன்பங்களுள் அவர் கண்ணொளி இழந்தது ஒன்று. கற்பரசியாய், அவருக்கு வலக்கையாய் இருந்த அவருடைய இரண்டாம் மனைவி இறந்தது இன்னொன்று. அவருடைய மூன்று புதல்வியரும் அவருக்கு உதவி செய்தனராயினும், அவர்கள் என்றும் அவர் இரண்டாம் மனைவியவ்வளவு அவர் குறிப்பறிந்தவரல்லர். அவரது மூன்ருவது துயர் அவரது கட்சி வீழ்ச்சியுற்றதேயாகும்.

இயற்கையிலேயே நூல்கள் வாசிப்பதில் தம் கருத்தை முற்றும் போக்கியிருந்த இக் கவிஞர்பெருமான், தம் வாழ்க்கையின் நடுப்பகுதியில் இங்ஙனம் இவ் அறப்போர்களில் ஈடுபட்டுப் பெருவாரியாக எழுதவும் வாசிக்கவும் நேர்ந்தமையால், அவற்ருல் கண் தெரியாதபடி கண்ணின் ஒளியையே இழந்தார். போதாக்குறைக்கு அரசியல் புயல் மாறியடித்து அவர் நண்பர் கிராம்வெலின் ஆட்சி வீழ்ச்சியுற்றுப் பழைய முடியரசின் கான்முளையாகிய இரண்டாம் சார்லசு அரசர் பட்டமேற்ருர். அத்துடன் மில்ட்டன் அரசியல் பணி அகன்றது. இதனினும் பெருங்கேடு அவர் கட்சியாளர் பலருக்கு ஏற்பட்டதெனினும் அவரது கல்விப் புகழ் அவரது உலகியல் வாழ்வின் இகழினின்று அவரைப் பாதுகாத்தது.

## 4. கண்ணொளி இழந்தபின் கருத்தொளி சிறந்தது

செம்மையினும் கடுமையிலே பெரியோரது பெருமையை நன்கு காண்டலாகும். கண் போயினும் கண்ணினும் மிக்க எண்ணையும் எழுத்தையுமே பெரிதாக எண்ணிப் போற்றினர் மில்ட்டன். அவரது வாசிப்பு இதற்குப்பின் குறைவதற்கு மாருகக் கூடிற்று. தமக்கு வேண்டுபவற்றை எல்லாம் தம் புதல்வியர், மாணவர் முதலியவர்கள் உதவியால் வாசித்துக் கேட்டுக்கொண்டார். கண்ணொளியிழந்த பின்னர்தான் மில்ட்டன் முதல்தரமான கவிதைகள் முற்றிலும் இயற்றினுர் என்பது ஆங்கில மக்கள் அனைவர்க்கும் இறும்பூது தரும்

செய்தி ஆகும். இதுபற்றி அவர் மனமுளைந்ததேயில்லை. இதற்குக் காரணம் அவருக்கிருந்த மாறு இறைவன் பற்றேயாகும். இறைவன் கொடுத்த கொடை; இறைவன் எடுத்தனர் என அவர் இதனை விடுத்தனர். தமது இறைபணி இதனல் குறைந்துவிடுமோ என்றுமட்டும் அவர் அஞ்சினர். அவ்வகையிலும் அவருடைய பற்றும் ஊக்கமும் அவருக்கு உதவி அவர் ஒப்புயர்வற்ற வெற்றி பெறும்படி செய்தன. தமது கண்ணொளி போனதுபற்றி அவர் எழுதிய 14 அடியுள்ள தொடர்ப்பா (Sonnet) கவியழகிற்கும், கருத்துயர்விற்கும் பேர்போனது.

படியில் வாழ்வினில் பகுதிசென் றிடுவதன் முன்னர்
அடியன் இன்னொளி இழந்தனன்; அகத்துள்ஓர் ஆற்றல்
குடியிருந்தது; மறைப்பதற் கரியது; கோதில்
அடிகட் கேபணி புரிந்திட அமைந்ததிங்கு; இதனல்
முடிவு நாள்,அவன் மனங்கொள முனைந்திடல் கண்டும்
'படிவ ழங்குறு பண்ணவன் பகலொளி மறுத்தல்
கடவ தோ' எனக் கருத்துறக் கொடுகலங் குள்ளந்
தடத்து வான் பொறை எழுந்தவன் தண்ணருள் காட்டும்:
'பேறெ லாம்தரும் பெற்றியன்: பிறரிடம் வேண்டும்
ஆறி லான்;அவன் ஆணையைத் தாங்குதல் அறனே;
மாறில் மாமுடி மன்னவர் வீறினன்; மனக்கோள்
தேறின், நானிலம் ஏழ்கடல் தேவரும் கடப்பர்;
ஈறி லான்குறிப் பறிந்திடக் காத்துநிற் பதுவும்,
வேறில்;முன்னவர் மெய்ப்பணிக் கிணையெனக் கொளலே!'

When I consider how my light is spent
Ere half my days in this dark world and wide,
And that one talent which his death to hide
Lodged with me useless though my soul more bent
To serve therewith my Maker and present
My true account, lest He returning chide;
'Doth god exact day-labour, light denied?'
I fondly ask;—But Patience, to prevent
That murmur, soon replies; ' God doth not need

Either man's work or His own gifts; who best
Bear his mild yoke, they serve Him best; His state
Is kingly; thousands at His bidding speed
And post o'er land and ocean without rest;—
They also serve who only stand and wait'

## 5. துறக்க வீழ்ச்சியின் மாட்சி

மில்ட்டனது மிகச் சிறந்த இலக்கியப்பணி அவரது துறக்க வீழ்ச்சி (Paradise Lost) ஆகும். அவரது பள்ளி வாழ்க்கைநாள் முதற்கொண்டே இத்தகையதோர் பெரும் பணிக்கே தம் வாழ்நாள் முழுமையையும் ஈடுபடுத்த வேண்டுமென்று அவர் உறுதிகொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. ஆனால் அத்தகைய பணிக்கு அவர் எடுத்துக்கொண்ட முதற்பொருள் 'ஆர்தரும் அவரது நூறு மெய்வீரரும்' என்ற பழைய ஆங்கிலநாட்டுக் கதைத் தொகுதியாகும். மில்ட்டன் இதனை எழுதாது விட்டனர். நெடுநாள் பின்னர் 19ஆம் நூற்றாண்டில் விக்டோரியாப் பேர் அரசியாரின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த கவிஞர் தெனிசன் இதே பொருள்மேல் மில்ட்டன் எழுதிய துறக்க வீழ்ச்சி, துறக்க மீட்சி ஆகியவற்றைப் பின்பற்றி ஆர்தர் செலவு (Passing of Arthur), ஆர்தர் வரவு (Coming of Arthur) என இரு காப்பியங்கள் இயற்றினர். இவற்றுட் சில பகுதிகள் சிறந்த கவிதைகளே. ஆயினும் பெருங் காப்பியம் எழுதும் வகையில் மில்ட்டன் ஒருவருக்கன்றி ஆங்கிலக் கவிஞர் எவர்க்கும் வாய்ப்பில்லை என்றே கூற வேண்டும்.

துறக்க வீழ்ச்சியின் கதை விவிலிய நூலில் கூறப்பட்ட மனிதனின் வீழ்ச்சிக் கதையே ஆகும். இறைவன் இயற்றிய துறக்கம் அல்லது பொன்னுலகில் முதல் மனிதன் ஆதமும், முதல் மாது ஏவாளும் வாழ்ந்ததும், இறைவனாணைமீறிய இறைவனின் பகைவனாகிய சைத்தானது உரைக்கிணங்கி அறிவு மரத்தின் கனியை அவர்கள் உண்டதும், அதன்

பயனாக உலகில் தீவினை, நோய், முதுமை, சாக்காடு ஆகியவை ஏற்பட்டதும் இக் கதையின் விவரங்கள்.

இந் நூலின் முதல் எடுத்த 'மனிதன்றன் முதற்பிறழ்வையும்' என்ற எடுப்புடன், 'தேவரும் வீரரும்' என்றெடுத்த ஹோமரது இலியதும், 'கிடந்தது வடக்கண் ஆங்கே' என்றெடுத்த காளிதாசனது குமார சம்பவமும், 'உலகம் யாவையும்' என்றெடுத்த கம்பர் இராமாயணமும், 'உலகெலாம்' என்றெடுத்த பெரிய புராணமும் ஈண்டு ஒப்புநோக்கத் தக்கன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையிற் சிறப்புடையதாயினும், பொருட்செறிவிலும் ஓசை முழக்கிலும், பெருமித நடையிலும் இவை எல்லாம் பெரிதும் பொது ஒப்புமையுடையன என்பதை அவற்றை வாசிப்போர் எளிதில் காணலாம். இவற்றில் காணும் இயற்கைக் காட்சிகள், மனித உணர்ச்சிகள், உயர் கருத்துக்கள் ஆகியவற்றைத் தொகுத்து ஒருங்கே தமிழ்மொழியில் வெளியிட்டால் பிறநாட்டினரே போன்று தமிழ்நாட்டினரும் அவற்றை ஒப்புமைப்படுத்தி உலகமுதற் கவிகளின் நலன்களைப் பருகுவர் என்பது உறுதி.

## 6. துறக்க மீட்சியும் முடிவும்

மில்ட்டனின் நண்பருள் 'குவேக்கர்கள்' அல்லது நண்பர் கழகத்தைச் சேர்ந்த தாமசு எல்வுட்டு என்பவர் மில்ட்டனுக்கு எழுதிய கடிதமொன்றில் அவர் எழுதிய நூலின் நயத்தையும் சிறப்பையும் பாராட்டியதோடு துறக்கத்தின் வீழ்ச்சியைப்பற்றி இவ்வளவு எழுதியும் அதன் மீட்சிபற்றி ஒன்றும் காணோமே என்றாராம். அதன் பொருத்தத்தை உணர்ந்து மில்ட்டன் பின்னர் துறக்க மீட்சி எழுதினர். முதுமையாலோ, போதியநாள் மனத்தில் உறையாததாலோ, எக் காரணத்தாலோ துறக்க வீழ்ச்சியில் கண்ட உயர்வும் பெருமிதமும் துறக்க மீட்சியில் மிகுதியாகக் காணவில்லை.

துறக்க வீழ்ச்சி 1667இல் வெளியிடப்பட்டது. ஆங்கிலேயருக்கு அழியாக் கருவூலமாய் விளங்கும் இந்த நூலை

எழுதிய ஆசிரியருக்கு இதனால் கிடைத்தது 60 பொன் மட்டுமே. அவர் தங்கியிருந்த வீடு 1666இல் தீயில் எரிந்து பாதி கருகிற்று. அவர் எழுதிய கடைசி நூல் (துறக்க வீழ்ச்சி, துறக்க மீட்சி இவை நீங்கலாக) சாம்சன் அகனிஃதேசு அல்லது மற்போர்வீரன் சாம்சன் என்னும் துன்பியல் நாடகமே (Tragedy) யாகும்.

இறக்கும் போதும் விவிலிய நூல் வாசிப்பும், இசை கேட்கும் பழக்கமும், இறைவன் நினைப்பும் அவரை விட்டு நீங்கவில்லை. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த வேட்ஸ்வொர்த் என்ற பெருங் கவிஞர் இவரைப்பற்றிக் குறிப்பிடுகையில்:

ஈண்டு மில்ட்டன்! நீ எம்மிடை இருந்திடல் விழைவேம்;
இங்கி லாந்துனை அழைத்தனள்; புதுவர வின்றி
யாண்டு மெம்முயிர்வாழ்க்கைகெட் டிழிந்தது; சமயம்,
இணையில் வீரமும், கல்வியும், இல்லறம் தானும்,
மாண்ட ஆங்கில மக்களின் இனியநல் அமைதி,
மறையத் தன்னலச் சூழலுட் பட்டனம் யாமே.
மீண்டு வந்தெமக் கினியும் ஓர் புத்துயிர் அருள்வாய்!
மீண்டும் நல்லறம் ஒழுக்கமும் ஆண்மையும் தருவாய்!
துருவ மீனெனத் தோற்றும்நின் வாழ்க்கையிங் கெமக்கே!
தூய வானென அமைதியும் பெருமையும் உடையாய்!
மருவு நீள்கடல் முழக்கென முழங்கும்நின் மொழிகள்!
மனிதர் வாழ்விடை மனிதனாய் வாழ்ந்தபுத் தேள் நீ!
திருவும் மேன்மையும் சீருறக் கொண்டனை எனினும்
உருவில் எந்தமக் கெளியையு மாயினை பெரிதே,

Milton, thou shouldst be living at this hour
England hath need of thee : she is a fen
Of stagnant waters : altar, sword and pen
Fireside, the heroic wealth of hall and bower,
Have forfeited their ancient English dower
Of inward happiness. We are selfish men !
Oh ! raise us up, return to us again ;

And give us manner, virtue, freedom, power.
Thy soul was like a star and dwelt apart :
Thou hadst a voice whose sound was like the sea
Pure as the naked heavens, majestic, free ;
So didst thou travel on life's common way
In cheerful godliness : while yet thy heart
The lowliest duties on hereself did lay.

என்று எழுதியுள்ளார்.

—கா. அப்பாத்துரை

# பழைய ஏற்பாட்டில் உள்ள சிம்சோன் வரலாறு

13 அதிகாரம்

1 இசரவேல் புத்திரர் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால், கர்த்தர் அவர்களை நாற்பது வருடமளவும் பெலிஸ்தர் கையில் ஒப்புக் கொடுத்தார்.

2 அப்பொழுது தாண் வம்சத்தானுகிய சோரா ஊரானுன ஒரு மனுஷன் இருந்தான்; அவன் பேர் மனோவா; அவன் மனைவி பிள்ளை பெருத மலடியாயிருந்தாள்.

3 கர்த்தருடைய தூதனுனவர் அந்த ஸ்திரீக்குத் தரிசனமாகி, அவளை நோக்கி: இதோ பிள்ளை பெருத மலடியான நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்.

4 ஆதலால் நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாதபடிக்கும், தீட்டானது ஒன்றும் புசியாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு.

5 நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்; அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படலாகாது; அந்தப் பிள்ளை பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனுயிருப்பான்; அவன் இசுரவேலைப் பெலிஸ்தகன் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கத் தொடங்குவான் என்ருர்.

6 அப்பொழுது அந்த ஸ்திரீ தன் புருசனிடத்தில் வந்து: தேவனுடைய மனுஷன் ஒருவர் என்னிடத்தில் வந்தார்; அவருடைய சாயல் தேவனுடைய தூதரின் சாயலைப்போல மகா பயங்கரமாயிருந்தது; எங்கேயிருந்து வந்தீர் என்று நான் அவரிடத்தில் கேட்கவில்லை; அவர் தம்முடைய நாமத்தை எனக்குச் சொல்லவுமில்லை.

7 அவர் என்னை நோக்கி: இதோ, நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்; ஆதலால் நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாமலும், தீட்டானது ஒன்றும் புசியாமலும் இரு; அந்தப் பிள்ளை பிறந்தது முதல் தன் மரணநாள் மட்டும் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான் என்று சொன்னார் என்றாள்.

8 அப்பொழுது மனோவா கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி: ஆ, என் ஆண்டவரே, நீர் அனுப்பின தேவனுடைய மனுஷன் மறுபடியும் ஒருவிசை எங்களிடத்தில் வந்து, பிறக்கப்போகிற பிள்ளைக்காக நாங்கள் செய்ய வேண்டியதை எங்களுக்குக் கற்பிப்பாராக என்று வேண்டிக் கொண்டான்.

9 தேவன் மனோவாவின் சத்தத்துக்குச் செவிகொடுத்தார்; அந்த ஸ்திரீ வயல்வெளியில் இருக்கும்போது தேவனுடைய தூதனானவர் திரும்பவும் அவளிடத்தில் வந்தார்; அப்பொழுது அவள் புருஷனாகிய மனோவா அவளோடே இருக்கவில்லை.

10 ஆகையால் அந்த ஸ்திரீ சீக்கிரமாய் ஓடி, இதோ, அன்று என்னிடத்தில் வந்தவர் எனக்குத் தரிசனமானார் என்று தன் புருஷனுக்கு அறிவித்தாள்.

11 அப்பொழுது மனோவா எழுந்திருந்து, தன் மனைவியின் பின்னாலே போய், அவரிடத்துக்கு வந்து: இந்த ஸ்திரீயோடே பேசினவர் நீர்தானா என்று அவரிடத்தில் கேட்டான்; அவர் நான்தான் என்றார்.

12 அப்பொழுது மனோவா: நீர் சொன்ன காரியம் நிறைவேறும்போது, அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும், அதை எப்படி நடத்தவேண்டும் என்று கேட்டான்.

13 கர்த்தருடைய தூதனானவர் மனோவாவை நோக்கி: நான் ஸ்திரீயோடே சொன்ன யாவற்றிற்கும், அவள் எச்சரிக்கையாயிருந்து,

14 திராட்ச செடியிலே உண்டாகிறதொன்றும் சாப்பிடாமலும், திராட்ச ரசமும் மதுபானமும் குடியாமலும், தீட்டானதொன்றும் புசியாமலும், நான் அவளுக்குக் கட்டளையிட்டதையெல்லாம் கைக்கொள்ளக்கடவள் என்றார்.

15 அப்பொழுது மனோவா கர்த்தருடைய தூதனை நோக்கி: நாங்கள் ஒரு வெள்ளாட்டுக்குட்டியை உமக்காகச் சமைத்துக் கொண்டுவருமட்டும் தரித்திரும் என்றான்.

16 கர்த்தருடைய தூதனானவர் மனோவாவை நோக்கி: நீ என்னை இருக்கச் சொன்னாலும் நான் உன் உணவைப் புசியேன்; நீ சர்வாங்க தகனபலி இடவேண்டுமானால், அதை நீ கர்த்தருக்குச் செலுத்துவாயாக என்றார். அவர் கர்த்தருடைய தூதன் என்று மனோவா அறியாதிருந்தான்.

17 அப்பொழுது மனோவா கர்த்தருடைய தூதனை நோக்கி: நீர் சொன்ன காரியம் நிறைவேறும்போது, நாங்கள் உம்மைக் கனம்பண்ணும்படி, உம்முடைய நாமம் என்ன என்று கேட்டான்.

18 அதற்குக் கர்த்தருடைய தூதனானவர்: என் நாமம் என்ன என்று நீ கேட்கவேண்டியது என்ன? அது அதிசயம் என்றார்.

19 மனோவா போய், வெள்ளாட்டுக் குட்டியையும், போஜனபலியையும் கொண்டுவந்து, அதைக் கன்மலையின் மேல் கர்த்தருக்குச் செலுத்தினான்; அப்பொழுது மனோவாவும் அவன் மனைவியும் பார்த்துக்கொண்டிருக்கையில், அதிசயம் விளங்கினது.

20 அக்கினிஜுவாலை பலிபீடத்திலிருந்து வானத்திற்கு நேராக எழும்புகையில், கர்த்தருடைய தூதனானவர் பலிபீடத்தின் ஜுவாலையிலே ஏறிப்போனார்; அதை மனோவாவும் அவன் மனைவியும் கண்டு, தரையிலே முகங்குப்புற விழுந்தார்கள்.

21 பின்பு கர்த்தருடைய தூதனானவர் மனோவாவுக்கும் அவன் மனைவிக்கும் காணப்படவில்லை; அப்பொழுது அவர் கர்த்தருடைய தூதன் என்று மனோவா அறிந்து,

22 தன் மனைவியைப் பார்த்து; நாம் தேவனைக் கண்டோம், சாகவே சாவோம் என்றான்.

23 அதற்கு அவன் மனைவி: கர்த்தர் நம்மைக் கொன்று போடச் சித்தமாயிருந்தால், அவர் நம்முடைய கையிலே சர்வாங்க தகனபலியையும் போஜனபலியையும் ஒப்புக் கொள்ளமாட்டார், இவைகளையெல்லாம் நமக்குக் காண்பிக் கவுமாட்டார், இவைகளை நமக்கு அறிவிக்கவுமாட்டார் என்றாள்.

24 பின்பு அந்த ஸ்திரீ ஒரு குமாரனைப்பெற்று, அவனுக்குச் சிம்சோன் என்று பேரிட்டாள்; அந்தப் பிள்ளை வளர்ந்தது, கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார்.

25 அவன் சோராவுக்கும் எஸ்தாவோலுக்கும் நடுவி லுள்ள தாணின் பாளயத்தில் இருக்கையில் கர்த்தருடைய ஆவியானவர் அவனை ஏவத் துவக்கினார்.

## 14 அதிகாரம்

1 சிம்சோன் திம்னாத்துக்குப் போய், திம்னாத்திலே குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டு,

2 திரும்ப வந்து, தன் தாயையும் தகப்பனையும் நோக்கி: திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண் ணைக் கண்டேன்; அவளை எனக்குக் கொள்ளவேண்டும் என்றான்.

3 அப்பொழுது அவன் தாயும் அவன் தகப்பனும் அவனை நோக்கி: நீ போய், விருத்தசேதனமில்லாத பெலிஸ் தரிடத்தில் ஒரு பெண்ணைக் கொள்ளவேண்டியதென்ன? உன் சகோதரரின் குமாரத்திகளிலும், எங்கள் ஜனமனைத்தி லும் பெண் இல்லையா என்றார்கள். சிம்சோன் தன் தகப்பனை நோக்கி: அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள், அவளையே எனக்குக் கொள்ளவேண்டும் என்றான்.

4 அவன் பெலிஸ்தரிடத்தில் குற்றம்பிடிக்க முகாந்தரம் உண்டாகும்படி, இது கர்த்தரின் செயல் என்று அவன் தாயும் தகப்பனும் அறியாதிருந்தார்கள்; அக்காலத்திலே பெலிஸ்தர் இஸ்ரவேலை ஆண்டார்கள்.

5 அப்படியே சிம்சோனும் அவன் தாயும் தகப்பனும் திம்னாத்துக்குப் போகப் புறப்பட்டார்கள்; அவர்கள் திம்னாத் ஊர் திராட்சத் தோட்டங்கள் மட்டும் வந்தபோது, இதோ, கர்ச்சிக்கிற பாலசிங்கம் ஒன்று அவனுக்கு எதிராக வந்தது.

6 அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால், அவன் தன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தும், அதை ஒரு ஆட்டுக்குட்டியைக் கிழித்துப் போடுகிறதுபோல் கிழித்துப்போட்டான்; ஆனாலும் தான் செய்ததை அவன் தன் தாய் தகப்பனுக்கு அறிவிக்கவில்லை.

7 அவன் போய் அந்தப் பெண்ணோடே பேசினான்; அவள் சிம்சோனின் கண்ணுக்குப் பிரியமாயிருந்தாள்.

8 சில நாளைக்குப் பின்பு, அவன் அவளை விவாகம் பண்ணத் திரும்பிவந்து, சிங்கத்தின் உடலைப் பார்க்கிறதற்கு வழிவிலகிப் போனான்; இதோ, சிங்கத்தின் உடலுக்குள்ளே தேனீக்கூட்டமும் தேனும் இருந்தது.

9 அவன் அதைத் தன் கைகளில் எடுத்து, சாப்பிட்டுக் கொண்டே நடந்து, தன் தாய் தகப்பனிடத்தில் வந்து, அவர்களுக்கும் கொடுத்தான்; அவர்களும் சாப்பிட்டார்கள்; ஆனாலும் தான் அந்தத் தேனைச் சிங்கத்தின் உடலிலே எடுத்ததை அவர்களுக்கு அறிவிக்கவில்லை.

10 அவன் தகப்பன் அந்தப் பெண் இருக்கும் இடத்தில் போனபோது, சிம்சோன் அங்கே விருந்துசெய்தான்; வாலிபர் அப்படிச் செய்வது வழக்கம்.

11 அவர்கள் அவனைக் கண்டபோது, அவனோடேகூட இருக்கும்படி முப்பது தோழரை அவனிடத்தில் கொண்டு வந்தார்கள்.

12 சிம்சோன் அவர்களை நோக்கி: ஒரு விடுகதையை உங்களுக்குச் சொல்லுகிறேன்; அதை நீங்கள் விருந்துண்கிற ஏழுநாளைக்குள்ளே கண்டுபிடித்து எனக்கு விடுவித்தால், நான் உங்களுக்கு முப்பது துப்பட்டிகளையும் முப்பது மாற்று வஸ்திரங்களையும் கொடுப்பேன்.

13 அதை எனக்கு விடுவிக்காதேபோனால், நீங்கள் எனக்கு முப்பது துப்பட்டிகளையும் முப்பது மாற்று வஸ்திரங்களையும் கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு அவர்கள்: உன் விடுகதையைச் சொல்லு; நாங்கள் அதைக் கேட்கட்டும் என்றார்கள்.

14 அப்பொழுது அவன்: பட்சிக்கிறவனிடத்திலிருந்து பட்சணமும், பலவானிடத்திலிருந்து மதுரமும் வந்தது என்றான்; அந்த விடுகதை அவர்களால் மூன்றுநாள்மட்டும் விடுவிக்கக் கூடாதே போயிற்று.

15 ஏழாம் நாளிலே அவர்கள் சிம்சோனின் பெண்சாதியைப் பார்த்து: உன் புருஷன் அந்த விடுகதையை எங்களுக்கு விடுவிக்கும்படி நீ அவனை நயம்பண்ணு; இல்லாவிட்டால் நாங்கள் உன்னையும் உன் தகப்பன் வீட்டையும் அக்கினியால் சுட்டெரித்துப்போடுவோம்; எங்களுக்குள்ளவைகளைப் பறித்துக்கொள்ளவா எங்களை அழைத்தீர்கள் என்றார்கள்.

16 அப்பொழுது சிம்சோனின் பெண்சாதி அவனுக்கு முன்பாக அழுது, நீ என்னை நேசியாமல் என்னைப் பகைக்கிறாய், என் ஜனங்களுக்கு ஒரு விடுகதையைச் சொன்னாய், அதை எனக்காவது விடுவிக்கவில்லையே என்றாள்; அதற்கு அவன்: இதோ, நான் என் தாய் தகப்பனுக்கும் அதை விடுவிக்கவில்லையே, உனக்கு அதை விடுவிப்பேனோ என்றான்.

17 விருந்துண்கிற ஏழுநாளும் அவள் அவன் முன்பாக அழுதுகொண்டே இருந்தாள்; ஏழாம் நாளிலே அவள் அவனை அலட்டிக்கொண்டிருந்தபடியால், அதை அவளுக்கு விடுவித்தான்; அப்பொழுது அவள் தன் ஜனங்களுக்கு அந்த விடுகதையை விடுவித்தாள்.

18 ஆகையால் ஏழாம் நாளிலே பொழுதுபோகுமுன்னே, அந்த ஊர் மாந்தர் அவனை நோக்கி: தேனைப் பார்க்கிலும் மதுரமானது என்ன, சிங்கத்தைப்பார்க்கிலும் பலமானதும் என்ன என்றார்கள்; அதற்கு அவன்: நீங்கள் என் கிடாரியால் உழாதிருந்தீர்களானால், என் விடுகதையைக் கண்டுபிடிப்பதில்லை என்றான்.

19 கர்த்தருடைய ஆவி அவன்மேல் இறங்கினதினால், அவன் அசகலோனுக்குப்போய், அவ்வூராரில் முப்பதுபேரைக் கொன்று, அவர்களுடைய வஸ்திரங்களை உரிந்துகொண்டு வந்து, விடுகதையை விடுவித்தவர்களுக்கு அந்த மாற்று வஸ்திரங்களைக் கொடுத்து, கோபம் மூண்டவனாய்ப் புறப்பட்டு, தன் தகப்பன் வீட்டுக்குப் போய்விட்டான்.

20 சிம்சோனின் பெண்சாதியோவென்றால், அவனுடைய தோழரில் அவனோடே சிநேகமாயிருந்த ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாள்.

15 அதிகாரம்

1 சிலநாள் சென்றபின்பு, சிம்சோன் கோதுமை அறுக்கிற நாட்களில் ஒரு வெள்ளாட்டுக்குட்டியை எடுத்துக்கொண்டு, தன் பெண்சாதியைக் காணப்போய்: நான் என் பெண்சாதியினிடத்தில் அறைவீட்டிற்குள் போகட்டும் என்றான்; அவள் தகப்பனோ, அவனை உள்ளே போக ஒட்டாமல்:

2 நீ அவளை முற்றிலும் பகைத்துவிட்டாய் என்று நான் எண்ணி, அவளை உன் சிநேகிதனுக்குக் கொடுத்துவிட்டேன்; அவள் தங்கை அவளைப் பார்க்கிலும் அழகானவள் அல்லவா, அவளுக்குப் பதிலாக இவள் உனக்கு இருக்கட்டும் என்று சொன்னான்.

3 அப்பொழுது சிம்சோன்: நான் பெலிஸ்தருக்குப் பொல்லாப்புச் செய்தாலும், என்மேல் குற்றமில்லை என்று அவர்களுக்குச் சொல்லி,

4 புறப்பட்டுப்போய், முந்நூறு நரிகளைப் பிடித்து, பந்தங்களை எடுத்து, வாலோடே வால் சேர்த்து, இரண்டு

வால்களுக்கும் நடுவே ஒவ்வொரு பந்தத்தை வைத்துக் கட்டி,

5 பந்தங்களைக் கொளுத்தி, பெலிஸ்தரின் வெள்ளாண்மையிலே அவைகளை ஓடவிட்டு, கதிர்க்கட்டுகளையும் வெள்ளாண்மையையும் திராட்சத்தோட்டங்களையும் ஒலிவத் தோப்புகளையும் சுட்டெரித்துப்போட்டான்.

6 இப்படிச் செய்தவன் யார் என்று பெலிஸ்தர் கேட்கிற போது, திம்னாத்தனுடைய மருமகனாகிய சிம்சோன்தான்; அவனுடைய பெண்சாதியை அவனுடைய சிநேகிதனுக்குக் கொடுத்துவிட்டபடியால் அப்படிச் செய்தான் என்றார்கள்; அப்பொழுது பெலிஸ்தர் போய், அவளையும் அவள் தகப்பனையும் அக்கினியால் சுட்டெரித்தார்கள்.

7 அப்பொழுது சிம்சோன் அவர்களை நோக்கி: நீங்கள் இப்படிச் செய்தபடியால் நான் உங்கள் கையிலே பழிவாங்கினாலொழிய இளைப்பாறேன் என்று சொல்லி,

8 அவர்களைச் சின்னபின்னமாகச் சங்காரம்பண்ணி, பின்பு போய், ஏத்தாம் ஊர் கன்மலைச் சந்திலே குடியிருந்தான்.

9 அப்பொழுது பெலிஸ்தர் போய், யூதாவிலே பாளயமிறங்கி, லேகி என்கிற வெளியிலே பரவியிருந்தார்கள்.

10 நீங்கள் எங்களுக்கு விரோதமாக வந்தது என்ன என்று யூதா மாந்தர் கேட்டதற்கு, அவர்கள்: சிம்சோன் எங்களுக்குச் செய்ததுபோல, நாங்களும் அவனுக்குச் செய்யும்படி அவனைக் கட்டுகிறதற்காக வந்தோம் என்றார்கள்.

11 அப்பொழுது யூதாவிலே மூவாயிரம்பேர் ஏத்தாம் ஊர்க் கன்மலைச் சந்திற்குப்போய்: பெலிஸ்தர் நம்மை ஆளுகிறார்கள் என்று தெரியாதா? பின்னை ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய் என்று சிம்சோனிடத்தில் சொன்னார்கள். அதற்கு அவன்: அவர்கள் எனக்குச் செய்தபடியே நானும் அவர்களுக்குச் செய்தேன் என்றான்.

12 அப்பொழுது அவர்கள்: உன்னைக் கட்டி, பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுக்க வந்திருக்கிறோம் என்றார்கள். அதற்குச் சிம்சோன்: நீங்களே என்மேல் விழுகிறதில்லை என்று எனக்கு ஆணையிடுங்கள் என்றான்.

13 அதற்கு அவர்கள்: நாங்கள் உன்னை இறுகக் கட்டி, அவர்கள் கையில் ஒப்புக்கொடுப்போமே அல்லாமல், உன்னைக் கொன்றுபோடமாட்டோம் என்று சொல்லி, இரண்டு புதுக் கயிறுகளாலே அவனைக் கட்டி, கன்மலையி லிருந்து கொண்டுபோனார்கள்.

14 அவன் லேகிவரைக்கும் வந்து சேர்ந்தபோது, பெலிஸ்தர் அவனுக்கு விரோதமாய் ஆரவாரம் பண்ணினார் கள். அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால், அவன் புயங்களில் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல்போலாகி, அவன் கட்டுகள் அவன் கைகளைவிட்டு அறுந்துபோயிற்று.

15 உடனே அவன் ஒரு கழுதையின் பச்சைத் தாடை யெலும்பைக் கண்டு, தன் கையை நீட்டி அதை எடுத்து, அதினாலே ஆயிரம்பேரைக் கொன்றுபோட்டான்.

16 அப்பொழுது சிம்சோன்: கழுதையின் தாடை யெலும்பினால் குவியல் குவியலாகப் பட்டுக்கிடக்கிறார்கள், கழுதையின் தாடையெலும்பினால் ஆயிரம்பேரைக் கொன் றேன் என்றான்.

17 அப்படிச் சொல்லித் தீர்ந்தபின்பு, தன் கையில் இருந்த தாடையெலும்பை எறிந்துவிட்டு, அவ்விடத்திற்கு ராமாத் லேகி என்று பேரிட்டான்.

18 அவன் மிகவும் தாகமடைந்து, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: தேவரீர், உமது அடியேன் கையினால் இந்தப் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்க, இப்பொழுது நான் தாகத்தினால் செத்து, விருத்தசேதனம் இல்லாதவர்கள் கையிலே விழவேண்டுமோ என்றான்.

19 அப்பொழுது தேவன் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப்பண்ணினார்; அதிலிருந்து தண்ணீர் ஓடிவந்தது;

அவன் குடித்தபோது அவன் உயிர் திரும்ப வந்தது; அவன் பிழைத்தான்; ஆனபடியால் அதற்கு எந்நக்கோரி என்று பேரிட்டான்; அது இந்நாள்வரையும் லேகியில் இருக்கிறது.

20 அவன் பெலிஸ்தரின் நாள்களில் இசரவேலை இருபது வருஷம் நியாயம் விசாரித்தான்.

16 அதிகாரம்

1 பின்பு சிம்சோன் காசாவுக்குப்போய், அங்கே ஒரு வேசியைக் கண்டு, அவளிடத்தில் போனான்.

2 அப்பொழுது: சிம்சோன் இங்கே வந்திருக்கிறான் என்று காசா ஊராருக்குச் சொல்லப்பட்டது. அவர்கள்: காலையில் வெளிச்சமாகிறபோது அவனைக் கொன்றுபோடுவோம் என்று சொல்லி, அவனை வளைந்துகொண்டு இரா முழுதும் அவனுக்காகப் பட்டணவாசலில் பதிவிருந்து இரா முழுதும் பேசாதிருந்தார்கள்.

3 சிம்சோன் நடுராத்திரிமட்டும் படுத்திருந்து, நடுராத்திரியில் எழுந்து, பட்டணத்து வாசல் கதவுகளையும் அதின் இரண்டு நிலைகளையும் பிடித்து, தாழ்ப்பாளோடே கூடப் பேர்த்து, தன் தோளின்மேல் வைத்து, எபிரோனுக்கு எதிரேயிருக்கிற மலையின் உச்சிக்குச் சுமந்துகொண்டு போனான்.

4 அதற்குப்பின்பு அவன் சோரேக்கு ஆற்றங்கரையில் இருக்கிற தெலீலாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயோடே சிநேகமாயிருந்தான்.

5 அவளிடத்திற்குப் பெலிஸ்தரின் அதிபதிகள் போய்: நீ அவனை நயம்பண்ணி, அவனுடைய மகா பலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்றும், நாங்கள் அவனைக் கட்டிச் சிறுமைப்படுத்துகிறதற்கு எதினாலே அவனை மேற்கொள்ளலாம் என்றும் அறிந்துகொள்; அப்பொழுது நாங்கள் ஒவ்வொருவரும் ஆயிரத்து நூறு வெள்ளிக்காசு உனக்குக் கொடுப்போம் என்றார்கள்.

6 அப்படியே தெலீலாள் சிம்சோனைப் பார்த்து: உன் மகா பலம் எதினாலே உண்டாயிருக்கிறது, உன்னைச் சிறுமைப்

படுத்த உன்னை எதினாலே கட்டலாம் என்று நீ எனக்குச் சொல்லவேண்டும் என்றாள்.

7 அதற்குச் சிம்சோன்: உலராத பச்சையான ஏழு அகணிநார்க் கயிறுகளாலே என்னைக் கட்டினால், நான் பலட்சயமாகி, மற்ற மனிதனைப்போல் ஆவேன் என்றான்.

8 அப்பொழுது பெலிஸ்தரின் அதிபதிகள் உலராத பச்சையான ஏழு அகணிநார்க் கயிறுகளை அவளிடத்திற்குக் கொண்டுவந்தார்கள்; அவைகளால் அவள் அவனைக் கட்டினாள்.

9 பதிவிருக்கிறவர்கள் அறைவீட்டிலே காத்திருக்கும் போது, அவள்: சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்து விட்டார்கள் என்றாள்; அப்பொழுது, சணல் நூலானது நெருப்புப்பட்டவுடனே இற்றுப்போகிறதுபோல, அவன் அந்தக் கயிறுகளை அறுத்துப்போட்டான்; அவன் பலம் இன்னதினாலே உண்டாயிருக்கிறது என்று அறியப்படவில்லை.

10 அப்பொழுது தெலீலாள் சிம்சோனைப் பார்த்து: இதோ, என்னைப் பரியாசம்பண்ணி, எனக்குப் பொய் சொன்னாய்; இப்போதும் உன்னை எதினாலே கட்டலாம் என்று எனக்குச் சொல்லவேண்டும் என்றாள்.

11 அதற்கு அவன்: இதுவரைக்கும் ஒரு வேலைக்கும் வழங்காதிருக்கிற புதுக் கயிறுகளால் என்னை இறுகக் கட்டினால், நான் பலட்சயமாகி, மற்ற மனுஷனைப்போல் ஆவேன் என்றான்.

12 அப்பொழுது தெலீலாள், புதுக் கயிறுகளை வாங்கி, அவைகளால் அவனைக் கட்டி: சிம்சோனே, பெலிஸ்தர் உன் மேல வந்துவிட்டார்கள் என்றாள்: பதிவிருக்கிறவர்கள் அறை வீட்டில் இருந்தார்கள்; ஆனாலும் அவன் தன் புயங்களில் இருந்த கயிறுகளை ஒரு நூலைப்போல அறுத்துப்போட்டான்.

13 பின்பு தெலீலாள் சிம்சோனைப் பார்த்து: இதுவரைக்கும் என்னைப் பரியாசம்பண்ணி, எனக்குப் பொய்சொன்னாய்; உன்னை எதினாலே கட்டலாம் என்று எனக்குச் சொல்ல

வேண்டும் என்றாள்; அதற்கு அவன்: நீ என் தலைமயிரின் ஏழு ஜடைகளை நெசவுநூல் பாவோடே பின்னிவிட்டால் ஆகும் என்றான்.

14 அப்படியே அவள் செய்து, அவைகளை ஆணியடித்து மாட்டி: சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள் என்றாள்; அவன் நித்திரைவிட்டெழும்பி, நெசவு ஆணியையும் நூல்பாவையும்கூடப் பிடுங்கிக்கொண்டு போனான்.

15 அப்பொழுது அவள் அவனைப் பார்த்து: உன் இருதயம் என்னோடு இராதிருக்க, உன்னைச் சிநேகிக்கிறேன் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நீ இந்த மூன்றுவிசையும் என்னைப் பரியாசம் பண்ணினாய் அல்லவா, உன்னுடைய மகா பலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்று எனக்குச் சொல்லாமற் போனாயே என்று சொல்லி,

16 இப்படி அவனைத் தினம் தினம் தன் வார்த்தைகளினாலே நெருக்கி அலட்டிக்கொண்டிருக்கிறதினால், சாகத்தக்கதாய் அவன் ஆத்துமா விசனப்பட்டு,

17 தன் இருதயத்தையெல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தி: சவரகன் கத்தி என் தலையின்மேல் படவில்லை; நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்தது முதல் தேவனுக்கென்று நசரேயனானவன்; என் தலை சிரைக்கப்பட்டால், என் பலம் என்னைவிட்டுப் போம்; அதினாலே நான் பலட்சயமாகி, மற்ற எல்லா மனுஷரைப்போலும் ஆவேன் என்று அவளிடத்தில் சொன்னான்.

18 அவன் தன் இருதயத்தையெல்லாம் தனக்கு வெளிப்படுத்தினதைத் தெலீலாள் கண்டபோது, அவள் பெலிஸ்தரின் அதிபதிகளுக்கு ஆள் அனுப்பி: இந்த ஒருவிசை வாருங்கள், அவன் தன் இருதயத்தையெல்லாம் எனக்கு வெளிப்படுத்தினான் என்று சொல்லச் சொன்னாள்; அப்பொழுது பெலிஸ்தரின் அதிபதிகள் வெள்ளிக்காசுகளைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டு அவளிடத்துக்கு வந்தார்கள்.

19 அவள் அவனைத் தன் மடியிலே நித்திரை செய்யப் பண்ணி, ஒருவனை அழைத்து, அவன் தலைமயிரின் ஏழு சடைகளையும் சிரைப்பித்து, அவனைச் சிறுமைப்படுத்தத் தொடங்கினாள்; அவன் பலம் அவனைவிட்டு நீங்கிற்று.

20 அப்பொழுது அவள்: சிம்சோனே பெலிஸ்தர் உன் மேல் வந்துவிட்டார்கள் என்றாள்; அவன் நித்திரைவிட்டு விழித்து கர்த்தர் தன்னைவிட்டு விலகினதை அறியாமல், எப்போதும்போல உதறிப்போட்டு வெளியே போவேன் என்றான்.

21 பெலிஸ்தர் அவனைப் பிடித்து, அவன் கண்களைப் பிடுங்கி, அவனைக் காசாவுக்குக் கொண்டுபோய், அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குபோட்டுச் சிறைச்சாலையிலே மாவரைத்துக்கொண்டிருக்க வைத்தார்கள்.

22 அவன் தலைமயிர் சிரைக்கப்பட்ட பின்பு, திரும்பவும் முளைக்கத் தொடங்கிற்று.

23 பெலிஸ்தரின் பிரபுக்கள்: நம்முடைய பகைஞனாகிய சிம்சோனை நம்முடைய தேவன் நம்முடைய கையில் ஒப்புக் கொடுத்தார் என்று சொல்லி, தங்கள் தேவனாகிய தாகோனுக்கு ஒரு பெரிய பலிசெலுத்தவும், சந்தோஷம் கொண்டாடவும் கூடிவந்தார்கள்.

24 ஜனங்கள் அவனைக் கண்டவுடனே: நம்முடைய தேசத்தைப் பாழாக்கி, நம்மில் அநேகரைக் கொன்றுபோட்ட நம்முடைய பகைஞனை நம்முடைய தேவன் நமது கையில் ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லி, தங்கள் தேவனைப் புகழ்ந்தார்கள்.

25 இப்படி அவர்கள் மனமகிழ்ச்சியாயிருக்கும்போது: நமக்கு முன்பாக வேடிக்கை காட்டும்படிக்கு, சிம்சோனைக் கூட்டிக்கொண்டு வாருங்கள் என்றார்கள்: அப்பொழுது சிம்சோனைச் சிறைச்சாலையிலிருந்து கூட்டிக்கொண்டு வந்தார்கள். அவர்களுக்கு முன்பாக வேடிக்கை காட்டினான்; அவனைத் தூண்களுக்கு நடுவே நிறுத்தினார்கள்.

26 சிம்சோன் தனக்குக் கைலாகு கொடுத்து நடத்துகிற பிள்ளையாண்டானோடே, வீட்டைத் தாங்குகிற தூண்களிலே நான் சாய்ந்துகொண்டிருக்கும்படி அவைகளை நான் தடவிப் பார்க்கட்டும் என்றான்.

27 அந்த வீடு புருஷராலும் ஸ்திரீகளாலும் நிறைந்திருந்தது; அங்கே பெலிஸ்தரின் சகல பிரபுக்களும், வீட்டின் மேல் புருஷரும் ஸ்திரீகளுமாக ஏறக்குறைய மூவாயிரம்பேர், சிம்சோன் வேடிக்கை காட்டுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

28 அப்பொழுது சிம்சோன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தராகிய ஆண்டவரே, நான் என் இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாய்ப் பெலிஸ்தர் கையிலே பழி வாங்கும்படிக்கு, இந்த ஒருவிசை மாத்திரம் என்னை நினைத்தருளும், தேவனே, பலப்படுத்தும் என்று சொல்லி,

29 சிம்சோன் அந்த வீட்டைத் தாங்கி நிற்கிற இரண்டு நடுத் தூண்களில், ஒன்றைத் தன் வலதுகையினாலும், மற்றொன்றைத் தன் இடதுகையினாலும் பிடித்துக்கொண்டு,

30 என் சீவன் பெலிஸ்தரோடேகூட மடியக்கடவது என்று சொல்லி, பலமாய்ச் சாய்க்க, அந்த வீடு அதில் இருந்த பிரபுக்கள்மேலும் எல்லா ஜனங்கள்மேலும் விழுந்தது; இவ்விதமாய் அவன் உயிரோடிருக்கையில் அவனால் கொல்லப்பட்டவர்களைப் பார்க்கிலும், அவன் சாகும்போது அவனால் கொல்லப்பட்டவர்கள் அதிகமாயிருந்தார்கள்.

31 பின்பு அவன் சகோதரரும், அவன் தகப்பன் வீட்டாரனைவரும் போய், அவனை எடுத்துக்கொண்டுவந்து, சோராவுக்கும் எஸ்தாவோலுக்கும் நடுவே அவன் தகப்பனாகிய மனோவாவின் கல்லறையில் அடக்கம்பண்ணினார்கள். அவன் இசரவேலை இருபது வருடம் நியாயம் விசாரித்தான்.

# மில்ட்டனின் படைப்புகள் : வரலாற்றுப் பின்னணி

ஆ. இரா. வேங்கடாசலபதி

மில்ட்டன் வாழ்ந்த காலம் இங்கிலாந்தில் பெரியதொரு புரட்சி நிகழ்ந்த காலம். 1640இல் இங்கிலாந்துப் புரட்சி வெடித்தபோது அவர்க்கு 32 வயது. இருபதாண்டுப் புரட்சி அரசாங்கத்துக்குப் பிறகு, வீழ்த்தப்பட்ட முடியாட்சி 1660இல் மீண்டும் அமைக்கப்பட்டபோது அவர்க்கு 52 அகவை. அதற்குப் பிறகு அவர் 14 ஆண்டு வாழ்ந்தார். மில்ட்டனின் வாழ்வும் இலக்கியமும் இப் புரட்சியோடு இரண்டறப் பிணைந்துள்ளதால் அவற்றைப் புரிந்துகொள்வதற்கு இங்கிலாந்துப் புரட்சியைப்பற்றிச் சுருக்கமாகவேனும் அறிந்துகொள்ளவேண்டும்.

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்து முதன்மையாக விவசாயப் பொருளாதாரத்தின் அடிப்படையில் அமைந்த சமூகமாக விளங்கியது. நிலவுடைமைச் சமூக உறவுகளே அதில் நிலவின. 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சமய மடங்களிடமிருந்து பிடுங்கப்பட்ட பெருமளவு நிலபுலங்கள், அயல்நாடுகளோடுகொண்ட வணிகம், கடற்கொள்ளை, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஆசிய, அமெரிக்க, ஆப்பிரிக்கக் கண்ட நாடுகளிலிருந்து அடித்த கொள்ளை, கரிச்சுரங்கத் தொழிலில் ஏற்பட்ட விரிவாக்கம்—இவற்றின் காரணமாக ஒருவகைத் தொழில்மயமாக்கம் ஏற்படத் தொடங்கியது; பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொழிற் புரட்சிக்கு முன்னோடியாகவும் இது அமைந்தது. இதன் காரணமாக நிலத்தில் முதலீடு செய்து பெருமளவு ஆதாயத்தை முதலாளிய விவசாயிகள் ஈட்டினர். சந்தைப் பொருளாதாரம் உருவாகி விரிவடைந்தது. வணிகரும்

தொழில் உற்பத்தியாளரும் வளர்ந்தனர். இவர்களுக்கு எதிர்ப்புறமாக, அதற்கு முன்புவரை பொருளாதார—சமூக மேலாண்மை செலுத்திவந்த நிலக்கிழார்களும் பிரபுக்களும் நின்றனர். நிலக்கிழாருள் தலையானவனுக மன்னன் விளங்கினுன். முடியாட்சிக்கு ஆதரவாக ஆங்கிலிகத் திருச்சபை நின்றது. இவர்கள் அனைவரும் நிலவுடைமைச் சமூக உற்பத்தியில் ஆதிக்கம் செலுத்தி வந்தோராவர். ஆனுல் இக் காலகட்டத்திலோ நிலவுடைமை உற்பத்திமுறை காலாவதி ஆகிவிட்டது. அதன் மூலமாகக் கிடைத்த ஆதாயம் உச்சநிலையை எட்டிய பின்னர்த் தேக்கமடைந்து விட்டது. ஆனுல், புதிதாக உருவாகிய முதலாளிய வர்க்கத்தினர் முதலாளிய உற்பத்திமுறையின் வளர்ச்சியால் பெருஞ் செல்வம் ஈட்டினர். இங்கிலாந்து நாடாளு மன்றத்தில் இவர்களே பெரும்பான்மையினராகவும் விளங்கினர்.

இந்நிலையில் இவ்விரு பிரிவினருக்குமிடையே முரண்பாடுகள் முற்றிப் போராட்டம் வெடித்ததில் வியப்பதற்கொன்றுமில்லை. முந்தைய நிலவுடைமை அமைப்புக்கு ஆதரவானவர்கள் மன்னனைச் சுற்றி நின்றனர். இவர்கள் வேத்தியலார் (Royalists) என்று அழைக்கப்பட்டனர். மாற்றத்தை விரும்பிய முதலாளிய வர்க்கத்தினர் நாடாளுமன்றத்தைச் சுற்றி நின்றனர்.

புதியதாக முதலீடு செய்வதற்குரிய செல்வத்தைப் பெற்றிருந்த முதலாளிய வர்க்கத்தினர் அதனைக்கொண்டு வளர்சசி அடைய விரும்பினர். ஆனுல், நிலவுடைமைச் சமூகத்துக்காக உண்டாகியிருந்த அரசியலமைப்பும் சட்ட திட்டங்களும் முதலாளிய வளர்ச்சிக்குத் தடையாக நின்றன. மேலும், செலவுகளை ஈடுகட்ட அரசாங்கம் புதிய புதிய வரிகளை விதிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இவ் வரிகளெல்லாம் பெருஞ்செல்வம் ஈட்டிவந்த முதலாளிய வர்க்கத்தினரையே பெரிதும் பாதித்தன. அரசியல் அதிகாரம் தம் கையில் இல்லாமல் வரிகளை மட்டும் கட்டிக் கொண்டேயிருப்பது அவர்களுக்கு உடன்பாடானதாக

இல்லை. எனவே, [redacted]மன்றம் மன்னன் பேச்சைக் கேட்க மறுத்தது. முதலாம் சார்லசு மன்னன் நாடாளு மன்றத்தைக் கலைத்து, 1629இல் தன் தனியரசாணையைச் செலுத்தலானான். ஆனால் ஸ்காட்லாந்துக் கலகத்தைத் தொடர்ந்து மன்னனுக்கு இருந்த கொஞ்சநஞ்ச வலிமையும் போயிற்று. 1640இல் நாடாளுமன்றம் தானாகக் கூடியது. மன்னனைக் கண்டித்தது. 1642இல் வேத்தியலாருக்கும் நாடாளுமன்றத்தினர்க்கும் இடையே முதல் உள்நாட்டுப் போர் நிகழ்ந்தது. ஆலிவர் கிராம்வெல்லின் தலைமையில் புதிய இராணுவத்தை நாடாளுமன்றத்தினர் அமைத்தனர். வெற்றியும் அவர்களுக்கே கிட்டியது. இரண்டாம் உள் நாட்டுப் போரிலும் புதிய இராணுவமே வாகை சூடியது. முதலாம் சார்லசு மன்னன் பிடிபட்டான். வரலாறு அதற்கு முன்னர் கண்டிராதவண்ணம் அவன் பொது விசாரணைக்கு உள்ளானான். அவன் தலை உருண்டது. மன்னனின் தலையோடு முடியாட்சியும் ஒழிக்கப்பட்டது. 'பொது அரசமைப்பு' (Commonwealth) உண்டாக்கப்பட்டது. அதன் பிறகு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, கிராம்வெல்லைப் பாது காவலராகக்கொண்டு பாதுகாப்பக அரசு (Protectorate) அமைக்கப்பட்டது.

முன்னர் குறிப்பிட்டவாறு ஆங்கிலிகத் திருச்சபை மன்னனை ஆதரித்தது. அரசியலில் நாடாளுமன்றத்தினரை ஆதரித்தோர், சமயத்துறையில் தூநெறியினராக (Puritans) விளங்கினர். ஆங்கிலிகத் திருச்சபையின் இழிவுகளையும் ஊழல்களையும் கண்டித்து, அவ்வமைப்பு கிறித்துவத்துக்கே எதிரானது என்றும் வாதாடினர். ஆயர், புரோகிதர் என்ற படிநிலையைக் கொண்ட பேராயம் (Episcopacy) என்ற திருச்சபை அமைப்பை 1643இல் நாடாளுமன்றம் ஒழித்தது. மன்னனுக்கு உறுதுணையாக விளங்கிய லாடு என்ற பேராயர்க்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்றம் முதலாளியத்துக்குச் சார்பான அமைப்பாக இருந்தபோதும், நிலவுடைமையத்துக்கு எதிரான

தனது போராட்டத்துக்குப் பரந்துபட்ட மக்களின் ஆதரவை நாடியது. இக் குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் முற்போக்கான வரலாற்றுப் பங்கையாற்றி, படுபிற்போக்கான நிலவுடைமையத்தை அது எதிர்த்து வந்ததால் சமப்படுத்துவோர் (Levellers), தோண்டுவோர் (Diggers), ஓதுவோர் (Ranters), ஐந்தாம் முடியாட்சியினர் (Fifth Monarchists) முதலான முற்போக்குப் பிரிவினர் நாடாளுமன்றத்தினர்க்குக் கைகொடுத்தனர். இங்கிலாந்து எங்கும் புரட்சிப்புனல் பெருக்கெடுத்தோடியது. புதிய புதிய கருத்துகள் மலர்ந்தன. மேலும் அதிகமான நில உரிமைகள், குடியுரிமைகள், குடியாட்சி உரிமைகள், சமய உரிமைகள் ஆகியவற்றை மேற்குறித்த பிரிவினர் கோரினர். இது தமக்கு எதிராகப் போவதைக் கண்ட நாடாளுமன்றத்தினர் இவர்களை வன்முறைகொண்டு ஒடுக்கினர். புது இராணுவத்தில் பெரும்பங்கு வகித்த சமப்படுத்துவோர் கிளர்ந்தெழுந்தபோது அவர்களும் ஒடுக்கப்பட்டனர். முழு விடுதலை கிடைத்துவிட்டது என்ற நம்பிக்கையில் 'தோண்டுவோர்' ஏற்படுத்திய விவசாயக் கூட்டுடைமைச் சமூகங்களும் கலைக்கப்பட்டன. இவ்வாறு குடியரசு மலர்வதற்கு ஏற்பட்ட முன்முயற்சிகள் முளையிலேயே நசுக்கப்பட்டன. குடியாட்சி உரிமைகள் பரந்துபட்ட மக்களுக்குப் பரவலாகச் சென்று சேர்வது தமக்கே ஆபத்தாக முடியும் என்று அஞ்சிய நாடாளுமன்றத்தினர் மன்னனோடு சமரசம் செய்ய முயன்றனர். அவர்களுக்குள்ளே பதவிவேட்கையும், அதிகார வெறியும், பேராசையும் மிகுந்தன.

இறுதியில் 1660ஆம் ஆண்டில் இரண்டாம் சார்லசு மன்னனோடு சமரசம் ஏற்பட்டது. அவனுக்கு முடிசூட்டப்பட்டதெனினும் முன்பு அரசனுக்கு இருந்த அதிகாரமும் மதிப்பும் பெருமளவு குறைந்தன. நாடாளுமன்றத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டே அவன் செயலாற்ற வேண்டியவனானான்.

இவ்வாறு 1640இன் இங்கிலாந்துப் புரட்சி பாதியோடு நின்றது. நிலவுடைமையம் ஒழிக்கப்பட்டது; முடியாட்சிக்

குப் பல்பிடுங்கப்பட்டது என்றபோதும் அது முழுக் குடியாட்சிப் புரட்சியாக உருவெடுக்கவில்லை. ஆனால், அன்றையக் காலகட்டத்தில் அது மிக முற்போக்கானதொரு புரட்சியாக விளங்கியது. அரசியல், சமூகம், பொருளாதாரம், சமயம் ஆகிய துறைகளில் அது பெரும் மாற்றத்தை உண்டாக்கியது.

இந்தப் பின்னணியில்தான் நாம் மில்ட்டனைப் பார்க்க வேண்டும். மில்ட்டன் 1608ஆம் ஆண்டில் பிறந்தார். அவர் தம் தந்தை கத்தோலிக்கத்திலிருந்து நீங்கி புரோட்டஸ்தனியத்தைத் தழுவியதால் அவர்க்குக் குடும்பச் சொத்தைத் தர மில்ட்டனின் தாத்தா மறுத்தார். இத்தகைய தந்தைக்கு ஏற்ற மகனாகவே மில்ட்டன் விளங்கினார். சிறு வயதிலிருந்தே மில்ட்டன் படிப்பில் ஆர்வம் செலுத்துவாராயினர். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் அவர் முதுகலைப்பட்டம் பெற்றார். ஆங்கிலத்தைத் தவிர கிரேக்கம், எபிரேயம், இலத்தீன், பிரெஞ்சு, இத்தாலியம், இசுபானியம் ஆகிய மொழிகளில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்று விளங்கினார். சமயத்துறையிலும் எழுத்துத்துறையிலும் ஈடுபடுவதற்குரிய ஏந்துகளை அவர்தம் தந்தை ஏற்படுத்திக் கொடுத்தார். சிறு வயதிலிருந்தே கவிதைகள் பலவற்றை அவர் எழுதி வரலானார். அவருடைய பின்னைய கவிதை மலர்ச்சிக்குரிய வித்துகள் அவற்றில் தென்படுகின்றனவெனினும் இங்கிலாந்துப் புரட்சிக்குப் பிறகு அவர் எழுதிய படைப்புகளே இன்று விதந்தோதப்படுகின்றன. 1630-களின் பிற்பகுதியில் அவர் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். பல இடங்களைச் சுற்றிப் பார்த்தார். புகழ் பெற்ற வானவியலாளரான கலீலியோவையும் சந்தித்தார். அன்றைய ஐரோப்பிய அறிவுலகத்தோடு அவர்க்கு அறிமுகம் ஏற்பட்டது. இச் சமயத்தில்தான் மில்ட்டனின் வாழ்வையும் இலக்கியத்தையும் சமைக்கவிருந்த இங்கிலாந்துப் புரட்சி வெடிப்பதற்குரிய அறிகுறிகள் புலப்படத் தொடங்கின. செய்தியறிந்ததும் தம் பயணத்தை முடித்துக் கொண்டு மில்ட்டன் தாயகம் திரும்ப முற்பட்டார். இது குறித்துப் பின்னாளில் அவர் எழுதியதாவது:

'சிசிலிக்கும் கிரீசுக்கும் நான் செல்ல விரும்பினே னாயினும், உள்நாட்டுப் போரைப்பற்றி இங்கிலாந்தி லிருந்து வந்த செய்திகள் என்னை அழைத்தன. என் சக மக்கள் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தபோது என் அறிவை வளர்த்துக்கொள்வதற்காக மகிழ்ச்சி யோடு வெளியூர்களைச் சுற்றிப் பார்ப்பது இழிவு என்று எண்ணித் தாயகம மீண்டேன்.'

மில்ட்டன் இங்கிலாந்துக்குத் திரும்பியதும் நாடாளு மன்றத்தினரோடு தம்மை நெருக்கமாகப் பிணைத்துக் கொண் டார். முன்னர் குறித்தவாறு ஆங்கிலிகத் திருச்சபையை நாடாளுமன்றத்தினர் எதிர்த்தனர். அதில் ஊழல்களும் இழிவுகளும் மிகுந்திருந்தின என்று அவர்கள் இடித்துரைத் தனா. புரோகிதரையும பூசாரியரையும் மில்ட்டன் வெறுத் தார். பேராய முறை கத்தோலிக்கத்தின் எச்சம் என்று எடுத்துக்கூறி, அதை எதிர்த்து மூன்று துண்டறிக்கைகளை எழுதி வெளியிட்டார். இவ் அமைப்பு கிறித்துவத்துக்கே எதிரானது என்றும் தக்க சமயச் சான்றுகளைக் காட்டி வாதிட்டார். இத துண்டு வெளியீடுகளில் மட்டுமல்லாமல் தமது இறுதிப் படைபபாக்கமான 'மாமல்லன் சிம்சோனி' லும் பெலித்தியப் பூசாரிகளை மில்ட்டன் கடுமையாகத் தாக்குகிறுர். (இதற்கு விவிலியத்தில் சான்றில்லை என்பதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.)

1643இல் மேரி என்பாரை மில்ட்டன் மணந்தார். மேரி யின் குடும்பம் வேத்தியலாரை ஆதரித்தது. தொடக்கத்தி லிருந்தே மணவாழ்கை சரிவர அமையவில்லை. திருமணம் நிகழ்ந்த ஒரு திங்களுக்குள்ளாகவே மில்ட்டனைவிட்டு மேரி விலகிச் சென்றுர். மணமுறிவு குறித்த அவர் எண்ணங்கள் செழுமைபெற இச் சூழல் தோதாக அமைந்தது. அக்காலத் தில் எளிதில் மணமுறிவு பெறமுடியாது என்பதோடு, மண முறிவை ஆதரித்துப் பேசுவதற்கே மிகுந்த துணிச்சல் வேண்டும். மில்ட்டன் மிகுந்த மனத் துணிவோடு மணமுறிவுக் கென வாதாடினுர். மணமுறிவுக்கான தடை கிறித்தவம் அளிக்கும் விடுதலைக்கும் உரிமைக்கும் எதிரானது என்று தக்க

இறையியல் சான்றுகளோடு நிறுவிச் சிறு நூல் ஒன்றை எழுதினார். மில்ட்டன் ஒழுக்கக்கேட்டுக்கு வழி சமைக்கிறார் என அவர்தம் எதிரிகள் வசைபாடினர். ஒவ்வொரு கிறித்தவனும் தன் மனச்சான்றுக்கு ஏற்ற வகையில் நடந்துகொள்ள வேண்டிய கடமைக்கும் உரிமைக்கும் இத் தடை எதிரானது என்று மறுப்புரைகளை மில்ட்டன் வெளியிட்டார். மணமுறிவுக்கு ஆதரவாக அவர் எழுதிய சிறு நூலின் மறு பதிப்பை நாடாளுமன்றத்துக்குக் காணிக்கை ஆக்கினார் என்பது இங்கு மனங்கொள்ள வேண்டிய செய்தியாகும்.

தம் மனைவி மேரி மனம்மாறித் திரும்பியபோது மில்ட்டன் அவரை ஏற்றுக்கொண்டார். அவர்களுக்கு மூன்று பெண் பிள்ளைகளும், ஓர் ஆண் மகவும் பிறந்தனவெனினும் மணவாழ்க்கையில் சிறிதும் மகிழ்ச்சி ஏற்படவில்லை. மில்ட்டன் மன அமைதியை இழந்ததோடு, தம் மாமனாரின் குடும்பச்சுமையையும் ஏற்க வேண்டியவரானார். மணமுறிவுக்கு ஆதரவாக வாதாடியதற்குத் தன்னலம் காரணமன்று என்பது இதிலிருந்து தெளிவாகப் புலப்படுகிறது.

மணமுறிவுக்கு மட்டுமின்றிக் கருத்துரிமைக்கும் வெளியீட்டுரிமைக்கும் பெருந்தடைகள் இருந்தன. புதிய கருத்துகளும், புரட்சி எண்ணங்களும், குடியாட்சிச் சிந்தனைகளும் அபசாரமானவை என்றும், தெய்வநிந்தனையானவை என்றும் குற்றஞ்சுமத்தப்பட்டு ஒடுக்கப்பட்டன. தம் எண்ணங்களை அச்சமின்றி வெளியிட்டோர் தலையை இழந்தனர்; செவியறுக்கப்பட்டனர்; சிறையில் அடைக்கப்பட்டனர். முதலாம் சார்லசின் காலத்தில் இக் கொடுமைகள் உச்சத்தை எட்டியிருந்தன. இந்தச் சூழலில் கருத்துரிமைக்காக மில்ட்டன் குரல் கொடுத்தார். அனுமதி பெற்றபின்னரே நூல்களை வெளியிடவேண்டும் என்றிருந்த முறையைக் கடுமையாகச் சாடி, 'ஏரியோபகாதிகா' எனும் துண்டு வெளியீட்டை எழுதினார். 'கற்றுக்கொள்ள வேண்டும் என்ற வேட்கை எங்கிருக்கிறதோ, அங்கு விவாதங்களும் கருத்துமோதல்களும் இருந்தே தீரும்' என்று தெளிவாக எடுத்துரைத்து, அறிவு வளர்ச்சிக்கு வெளியீட்டுரிமை இன்றியமையாதது

என்று நிறுவினர். நாடாளுமன்றம் இதற்கு வழிவகுக்க வேண்டும் என்று விரும்பினர்.

முன்னர் குறித்தவாறு, இங்கிலாந்துப் புரட்சியை முன்னின்று நடத்திய நாடாளுமன்றத்தினரோடு மில்டன் இணைந்து நின்றார். நாடாளுமன்றத்தைப் பற்றியும், புது இராணுவத்துக்குத் தலைமையேற்ற தளபதிகளான ஆலிவர் கிராம்வெல், ஃபேர்ஃபாக்சு ஆகியோரைப் பற்றியும் தனித் தனியே கவிதை எழுதினர்.

இதோடு நில்லாமல், முதலாம் சார்லசு மன்னன் விசாரிக்கப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டதை யொட்டிப் புகழ்மிக்கதொரு நூலை மில்டன் எழுதினர். அரசனும் நீதிபதிகளும் மக்களின் பிரதிநிதிகளே என்றும், அரசாங்கம் என்பது பொதுமக்களின் நலனைக் காக்கும் அறக் கட்டளையாகவே இயங்கவேண்டும் என்றும், இதற்கெதிரான கருத்துகளெல்லாம் 'மனிதனின் தன்மானத்துக்கு எதிரான துரோகமே' என்றும் முழங்கினர். கொடுங்கோலரைத் தீர்த்துக்கட்டுவது இறைவனுக்கும் உவப்பானதே என்றும் காட்டினர்.

சார்லசு மன்னன் தலையிழந்த சமயத்தில் வேத்தியலார் ஒரு சூழ்ச்சி செய்தனர். மன்னனின் பெயரில் 'வேத்தியல் படிவம்' (Eikon Basilike) என்றொரு நூலைப் பரப்பினர். மன்னனென்பான் தெய்வாம்சம் பொருந்தியவன் என்பது போன்ற பத்தாம்பசலிக் கொள்கைகளை உணர்ச்சி அழுத்தம் மிகும் வகையில் அந்நூல் எடுத்துக்கூறி, வேத்தியலார்க்கு ஆதரவு திரட்டியது. 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே' என்றும், 'பாதத்துளி பட்டதும் நோய் விலகும், வீடுபேறு கிட்டும்' என்றும் காலங்காலமாக நம்பிவந்த பொதுமக்களின் மனங்களை இந்நூல் கொள்ளை கொண்டது. கருத்தியல் நிலையில் இதனை முறியடிக்க வேண்டிய கட்டாயம் நாடாளுமன்றத்தினர்க்கு ஏற்பட்டது. மில்டன் எழுதுகோலை எடுத்தார். 'படிவத்தை உடைப் போன்' (Eikonoklastes) என்ற பெயர்கொண்ட நூலை

எழுதினார். மன்னனுக்கும் முடியாட்சிக்கும் ஆதரவான வாதங்களைத் தவிடுபொடி ஆக்கினார்.

இதனையடுத்து, வேத்தியலார் ஐரோப்பாவின் தலை சிறந்த அறிஞராக மதிக்கப்பெற்ற சால்மாசியசு என்பாரைக் கொண்டு சார்லசு மன்னனுக்கும் முடியாட்சிக்கும் ஆதரவாக எழுதவைத்தனர். அக் காலத்தில் மில்ட்டன் அதிகம் புகழ் வாய்ந்தவராகத் திகழவில்லை. இங்கிலாந்துக்கு வெளியே அவர் பெயரை அறிந்தோர் மிகச் சிலரே. ஆனால் 'இங்கிலாந்து மக்களுக்கு ஆதரவாக' மில்ட்டன் எழுதிய மறுப்புரை சால்மாசியசின் நூலை ஒன்றுமில்லை என்றாக்கிவிட்டது. கோலியாத்தைத் தாவீது வீழ்த்திவிட்டான் என்று அனைவரும் ஏற்றுக்கொண்டனர். சொல்லப்போனால், இங்கிலாந்தின் பொது அரசமைப்புக்கு அயல்நாடுகளில் மதிப்பு உயர்வதற்குக் காரணம் கிராம்வெல்லின் போர் வெற்றிகளும், மில்ட்டனின் படைப்புகளும்தாம் எனக் கூறப்பட்டன.

1649இல் அயல்மொழித் துறைச் செயலாளர் பொறுப்பு மில்ட்டனுக்கு வழங்கப்பட்டது. அயல்நாடுகளோடு கொள்ளும் வெளியுறவுகளைப் பேணுவதற்காகச் செய்யப்பட்ட கடிதப் பரிமாற்றங்களைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்புமிக்க பணியை மில்ட்டன் மேற்கொண்டார். தமது பன்மொழிப் புலமையை இங்கிலாந்துப் புரட்சியை நிலைநிறுத்துவதற்கெனப் பயன்படுத்தினார்.

இந்தப் பொறுப்புமிக்க பணியின்போதும், சால்மாசியசுக்கு மறுப்புரை எழுதியபோதும் மில்ட்டனின் கண்கள் தொல்லை தந்துவந்தன. கண்வலி மிகுந்தது. மேற்குறித்த வேலைகளில் ஈடுபடுவதால் கண்கள் மேலும் பாதிக்கப்பட்டுப் பார்வையை முழுவதும் இழக்க நேரிடும் என்று மருத்துவர் அறிவுறுத்திய போதும் மில்ட்டன் பொருட்படுத்தவில்லை; கருமமே கண்ணாயிருந்து தம் கடமையைச் செவ்வனே செய்து முடித்தார். இதன் விளைவாகத் தம் பார்வையை முழுதும் இழந்தார். இதைப் பற்றிப் பின்னாளில் அவர் தம் நண்பர்க்குக் கீழ்க்காணும் பாடலை எழுதினார்:

பார்வைக்குக் களங்கமின்றித் தெளிவாகத் தோன்றும்
பார்க்கும் என் இருவிழியும் மூன்றுண்டு காலம்
பார்வைஇழந் தொளிகாண மறந்துளவே தோழ!
பார்க்கும் விழிவட்டத்தில் பகலறியேன், நிலவோ
பரிதியோ, விண்மீனே ஆணே பெண் எவையும்
பார்த்தறியேன்; இருப்பினும் நான் இறையாணை மறுக்கேன்
எதிர்த்தெண்ணேன்; பொறுமையொடு முன்னேக்கிச்
செல்வேன்

எவ்வலுவில் இப்படி நீ இருக்கின்றாய் என்பாய்,
விடுதலையைக் காக்கின்ற விழுமியதோர் தொண்டில்
விழிகளினைத் தொலைத்தேன்என் றெண்ணுந் தெளிவுண்டே
அடுத்தடுத்து ஐரோப்பா இதுபேசும் அறிவேன்
உலகத்தின் வெறுமைமிகு புனைவேடக் கூத்தில்
நலந்தரு இவ்எண்ணம்எனை வழிநடத்திச் செல்லும்.

ஆனால் மில்ட்டன் எந்த விழுமிய பணிக்காகத் தம் உழைப்பையும் சிந்தனையையும் விழியையும் நல்கினரோ அது நாளுக்கு நாள் தேய்ந்தும் சீரழிந்தும் வந்தது. இத் தேய்வைத் தனிமனிதர் சிலரின் வீழ்ச்சியாக அவர் கண்டாரேயன்றிக் கொண்ட கொள்கையின்—வைத்த இலக்கின்—தோல்வியாகக் காணவில்லை. 'வேட்கையும் பேராசை'யுமே இதற்குக் காரணம் என்று வெளிப்படையாகவே கூறினர். ஆனால் வீழ்ச்சியைத் தனியொரு மனிதன் தடுத்து நிறுத்திவிட முடியுமா? முந்தைய நிலைக்குச் சூழல்கள் மாறி வந்தன. நாட்டுக்கென மையத் திருச்சபை மீண்டும் அமைக்கப்பட்டது; இரண்டாம் பாதுகாப்பரசுக்கும் முடியாட்சிக்கும் இடையே எந்த வேறுபாடும் தெரியவில்லை.

1658இல் கிராம்வெல் மறைந்தார். அவருடைய இரங்கல் ஊர்வலத்தில் மில்ட்டனும் கலந்துகொண்டார். கிராம்வெல்லின் மறைவோடு பழைய மன்னராட்சி திரும்புவதற்கு இருந்த சிறு தடையும் நீங்கியது. நாடாளுமன்றத்தினர் சார்லசு மன்னனேடு சமரசம் காண முற்பட்டனர். இப்போக்கை எதிர்த்து வீழ்த்தும் முகமாகப் பொது அரசமைப்பைச் சிறிது நெகிழ்த்த விரும்பினர் மில்ட்டன். 'பொது

அரசமைப்பிலுள்ள பிளவுகள் தொடர்பாக நண்பரொருவர்க்குக் கடிதம்' என்றொரு துண்டு வெளியீட்டை எழுதினர். எப்பாடுபட்டேனும் முடியாட்சி திரும்புவதைத் தடுத்தே தீரவேண்டும் என்ற வேட்கை இதில் புலப்படுகிறது. மன்னராட்சி திரும்புவதற்குரிய அறிகுறிகள் தென்படத் தொடங்கியபோது முன்னாள் புரட்சியாளர்களும், அரசக் கொலையை ஆதரித்தோரும் தம் பழைய 'பாவங்'களுக்குக் 'கழுவாய்' தேடுவதற்காக வெட்கக்கேடான வேலைகளில் இறங்கிக்கொண்டிருந்தனர். இந்தச் சூழலிலும்கூட மில்ட்டன் மனவுறுதியோடு நின்றார். இரண்டாம் சார்லசு மீள்வதற்குச் சிறிதுகாலத்துக்குமுன்புகூட 'சுதந்தரப் பொது அரசமைப்பை ஏற்படுத்துவதற்கு எளிய வழி' என்றொரு நூலைத் துணிவோடு வெளியிட்டார்.

1660இல் மன்னராட்சியின் மீட்சியோடு புரட்சியின் தோல்வி முழுமைபெற்றது. உடைந்த படிவம் மீண்டும் உருப்பெற்றது. பழைய பகைவர்கள் வேட்டையாடப் பட்டனர். மில்ட்டனின் தோழர்கள் பலர் கைதாயினர்; தூக்கிலிடப்பட்டனர். மில்ட்டனும் கைதானர். எனினும், அவருடைய தலை தப்பியது தம்பிரான் புண்ணியத்தாலா என்று தெரியவில்லை. ஆனல் மில்ட்டன் எழுதிய 'படிவத்தை உடைப்போன்', 'இங்கிலாந்து மக்களுக்கு ஆதரவாக' என்ற நூல்கள் அம்பலத்தில் எரிக்கப்பட்டன.

மீட்சிக்குப் பிறகு 14 ஆண்டுக்காலம் மில்ட்டன் வாழ்ந்தார். இறைவனின் இலட்சியம் என்று தாம் கொண்ட கனவு கலைந்ததை மில்ட்டன் கண்டார். தோல்வியால் ஏற்படும் கைப்புணர்வை முழுதுமாய் உணர்ந்தார். இதன் வெளிப்பாடே அவருடைய முப்பெரும் பாடல்களான 'சுவர்க்க நீக்கம்', 'சுவர்க்க மீட்பு', 'மாமல்லன் சிம்சோன்.' இது காறும் ஆராய்ந்த ஆன்ற அறிஞர் பலரும் 'வேதாந்தமாக விரித்து'ப் பொருளுரைத்தனரேயன்றி இவற்றின் அரசியல் உள்ளடக்கத்தை வெளிப்படுத்தவில்லை. வரலாற்றுப் பின்னணியில் இவற்றைப் புதுவதாகப் பார்த்துப் பொருளுரைத்த பெருமை, சென்ற ஐம்பதாண்டுக்கும் மேலாகப்

பதினேழாம் நூற்றாண்டைப் பற்றியே ஆய்ந்துவரும் பேராசிரியர் கிறித்தபர் இல் அவர்களையே சாரும்.

இங்கிலாந்துப் புரட்சியை இறைவனின் இலட்சிய மாகவே மில்ட்டனும், அவரைச் சார்ந்தோரும், முற்போக் காளரும் கண்டனர்; ஆங்கிலேய மக்களை இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகப் பார்த்தனர். ஆனால் அம் மக்களின் போராட்டம் தோல்வியடைந்தது; புரட்சியும் வீழ்ந்தது. இறைவனின் ஆணை தோல்வியடைய இயலுமா? ஆமெனில் இறைவன் கொடியவன் என மில்ட்டனின் காலத்தவர் பலர் எண்ணினர். ஆனால் மில்ட்டனின் மனத்தில் இவ்வெண்ணம் ஒரு நொடிகூட நிழலாடவில்லை. மில்ட்டன் அவ்வாறு எண்ணியிருந்தால் அவருடைய வாழ்க்கை பொருளிழந்து, பொலிவிழந்து நின்றிருக்கும். அவருடைய வாழ்க்கை அமைப்பு பெலித்தியரின் கோயிலைப் போல் நொறுங்கி வீழ்ந்திருக்கும். ஆனால் இங்கிலாந்துப் புரட்சி தோல்வியடைந்தது கண்கூடாகக் கண்ட காட்சி. எனவே அதுவும் இறைவனின் செயலே. ஆகவே, 'இறைவனின் செயல்களை மானுடர்க்கு விளக்கிக்காட்ட, மில்ட்டன் முயன்றார். அதன் மூலமாகத் தம் வாழ்க்கை யைத் தாமே விளங்கிக்கொள்ள முயன்றார். இதன் விளைவு தான் 'சுவர்க்க நீக்கம்' எனும் மாகாவியம்.

இங்கிலாந்துப் புரட்சி இறைவனின் ஆணை. ஆயின் அது தோல்வியடைந்தது. காரணம் யார்? மனிதரே. (முதற் பாவத்தின் விளைவான) வீழ்ச்சியே இதற்குக் காரணம். புரட்சியின் தோல்விக்கும் (வேறு பல தீமைக்கும்) வீழ்ச்சியே காரணம். ஆதாம் வீழாமல் இருந்திருந்தால் மனிதர் சமத்துவத்தோடு வாழ்ந்திருப்பர். உடைமை அனைத்தும் பொதுவாக இருந்திருக்கும். உடைமையில் நிலவிய ஏற்றத் தாழ்வுகளைக் காக்கக் கொடுங்கோல் அரசு தேவைப்பட் டிருக்காது. உடைமையும்கூட ஆணவம், ஆசை ஆகிய வற்றின் விளைவே. காலந்தோறும் ஒடுக்கப்பட்டுவந்த மக்க ளின் துயரை வீழ்ச்சிக் கோட்பாடு உணர்த்தி நிற்கிறது. முன்னொரு நாள் பொற்காலம் இருந்தது. இன்று அது

இல்லை. இறைவனின் இலட்சியமான புரட்சி ஏன் தோல்வியடைந்தது என்பதை இறைவனின் மக்களுக்கு விளக்க வேண்டும்; அதன்மூலம் இறைவனின் பணிக்கு மீண்டும் அவர்களைத் திரட்டவேண்டும். இதுதான் 'சுவர்க்க நீக்க'த்தின் சாரம்.

'யாருடைய தவறு?' என இறைவன் வினவுகிறார். 'உம்முடையதுதானே!' 'மனிதர்கள் தாமே கலகம் புரிந்தனர். கட்டற்றவர்களாக அவர்களை நான் உருவாக்கினேன். அவர்கள் தாமாகவே வீழ்ந்து, அடிமைப்படும் வரை சுதந்தரமாகவே இருக்கக்கடவர்.'

தோல்வியையும் வீழ்ச்சியையும் மட்டும் மில்ட்டன் வலியுறுத்தவில்லை. நம்பிக்கையைப் பூண்டோடு அழித்துவிடவுமில்லை. வீழ்ச்சியிலிருந்து புதிதாய்ப் பிறப்பதற்குச் 'சுவர்க்க மீட்சி' வழி சொல்கிறது. தேவமைந்தர் சாத்தானின் ஆசையூட்டல்களைப் பொருட்படுத்தாமல் அவற்றை வெற்றி கொள்கிறார். இசுரவேலை மீட்பதற்குச் சாத்தானின் குறுக்கு வழிகளைப் பின்பற்ற மறுக்கிறார். தெய்வீகச் செயல்பாடுகளையும் அவர் வேண்டவில்லை. ஆதாமும் ஏவாளும் தேவர்களாக மாறுவதற்குக் குறுக்கு வழியில் செல்ல முயன்று வீழ்கிறார்கள். ஆனால், தேவமைந்தரோ மனிதராகவே நின்று, செம்மாந்தனை மாறி வெற்றி பெறுகிறார். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இங்கிலாந்து மக்களுக்கு மில்ட்டன் உணர்த்தும் பாடம் இதுதான்: பேராசையும் வேட்கையும் கூடா. இறைவனின் பேரரசை அமைக்கக் குறுக்கு வழிகள் இல்லை. ஆசையூட்டல்களுக்கு ஏமாந்து விடக்கூடாது.

'மாமல்லன் சிம்சோன்' மில்ட்டனின் இறுதிப் படைப்பாக்கம். மில்ட்டனின் வாழ்க்கையோடும் இங்கிலாந்துப் புரட்சியோடும் இந்நூல் பிணைந்து நிற்கின்றது. மில்ட்டனைப் போலவே சிம்சோனும் தன் நாட்டை விடுவிக்க நினைக்கிறான். வஞ்சிப்பதில் திலீயாளுக்கு எவ்வகையிலும் சோடை போகாதவள் மில்ட்டனின் மனைவி. தம் நாட்டை மீட்கும் முயற்சியில் மில்ட்டன், சிம்சோன் இருவரும்

பார்வையை இழக்கின்றனர்; தம் பகைவரால் எள்ளி நகையாடப்படுகின்றனர். 'மாமல்லன் சிம்சோனின்' ஒவ்வொரு வரியையும் இங்கிலாந்துப் புரட்சியோடும் மில்ட்டனின் வாழ்க்கையோடும் பொருத்திப் பார்க்கலாம். இசுரவேலரைப் போலவே இங்கிலாந்தின் மக்களும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களே. இசுரவேலரை விடுவிக்க வந்த சிம்சோன் ஆசையூட்டலுக்கு மயங்கிக் கண்ணிழக்கிறான். ஆனால் அப்போதும் விடுதலை சாத்தியமே. மனிதன் விருப்பப்பட்டபோதன்றி இறைவன் நினைக்கும்போதே விடுதலை கிட்டும். மானுடன் அதுவரை தன்னால் இயன்றதைச் செய்யவேண்டும் தோல்வி அடைந்தோர்க்கு அழைப்பு விடுக்கும் நம்பிக்கைக் குரல் 'மாமல்லன் சிம்சோன்'

தோல்வியில் துவண்டு புலம்பலிலும் அழுகையிலும் மில்ட்டன் உழலவில்லை. தோல்விக்கான காரணத்தைத் தேடிச் சென்றார். இறைவனின் இலட்சியம் வெற்றிபெறுவதற்கு என்ன செய்யவேண்டும் என்று ஆழமாக எண்ணினார். இதன் விளைவே முப்பெரும் பாடல்கள். ஆணும் பெண்ணும் ஆசையூட்டலுக்கு மயங்கி, வீழ்ந்து சுவர்க்கத்தை இழக்கின்றனர். முழுமாந்தன் ஆசையூட்டலை வென்றடக்கியதால் சுவர்க்கம் மீட்கப்பட்டது. வீழ்ந்த மனிதன் ஆசையூட்டலை மறுமுறை வென்றதால் மீண்டும் எழுகிறான்.

தாம் கொண்ட கொள்கை தோல்வியடைந்ததைக் கண்ட பிறகும் அடிபணியாத உறுதியை மில்ட்டனிடம் காண்கிறோம். இதுதான் அவருடைய உயிர்நாடி. அதனால் தான் முந்நூறாண்டு கழித்தும் அவருடைய படைப்புகளைப் படிக்க முடிகின்றது, பயன்பெற முடிகின்றது. மில்ட்டனின் இலக்கியப் படைப்புகள் நின்று நிலவும்—வாக்களிக்கப்பட்ட பொற்காலம் வரும்வரை.

## கருவி நூல்கள்

CHRISTOPHER HILL, *The English Revolution* 1640, Lawrence and Wishart, London, 1940 (reprint 1979).

——————, *The World Turned Upside Down : Radical Ideas during the English Revolution*, Temple Smith, London, 1972.

——————, *Milton and the English Revolution*, Faber and Faber, London, 1977.

——————, *The Experience of Defeat: Milton and some Contemporaries*, Faber and Faber, London, 1984.

A. N. WILSON, *The Life of John Milton*, Oxford University Press, Oxford, 1983.

# மாமல்லன் சிம்சோன்

மில்ட்டன்

# மாமல்லன் சிம்சோன்

**சிம்சோன்:** *(தன் வழிகாட்டியிடம்)* பார்வையிழந்த எனக்குச் சற்றுக் கைகொடு. வெயிலும் நிழலும் நிறைந்த இந்த மலைமுகட்டில், உடலுக்குகந்த இம் மணமிகுந்த காற்றை உட்கொள்ளவிடு. கைதியான எனக்கு மாவரைக்கும் பணியிலிருந்து ஓய்வு கிடைக்கும்போதெல்லாம், இங்கு நான் அமர்ந்து எனக்கு நானே ஆறுதல்கொள்வது வழக்கம். மற்ற வேளைகளில் சிறையில் குற்றவாளிகளோடு இருக்க வேண்டியவனாய் இருக்கிறேன். அங்குக் காற்றுக்கூட என்னைப் போல் சிறைப்பட்டுள்ளது. அந்தச் சூழலோ களையிழந்து, காரிருள் சூழ்ந்த, நலமற்ற சூழல். இம் மலைமுகட்டில் மட்டுமே, விடியலில் வீசும் இளங்காற்றில் சற்று ஆறுதல் அடைகிறேன். எனவே, என்னை இங்குச் சற்று இளைப்பாற விடு.

இன்று பெலித்தியர்கள் தங்கள் கடல் தேவன் வருணனு (Dagon)க்குப் பத்தியோடு விழாக் கொண்டாடுகிறார்கள். இந்நாளில் கடினமான வேலைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. எனவேதான் இந்த ஓய்வினையும், ஓய்வு நாளையும் நான் நுகர்ந்துகொண்டிருக்கிறேன். இந்த ஓய்வு அவர்களின் மூடக் கோட்பாட்டால் எனக்குக் கிடைத்திருக்கிறது. எனவே, விழாக் கொண்டாடும் மக்களின் இரைச்சலோ, வேறு குறுக்கீடோ இல்லாத இந்தத் தனிமையை நான் விரும்புகிறேன். இங்கு என் மனத்தளவில் இல்லையானாலும் உடல் அளவில் சற்று ஓய்வுகொள்கிறேன். ஏனெனில், நான் எப்படியிருந்தேன் இன்று எப்படியானேன் என்ற கசப்பான நினைவுகள் என் மனத்தை அமைதிபெற விடுவதில்லை. கடந்த கால நிலையின் நினைவுகள், நான் தனித்திருக்கும்போதெல்லாம், குளவிக் கூட்டம்போல் கூடிவந்து கொட்டி உள்ளத்தை ஓய்வறச் செய்கின்றன.

[illegible] முன் அறிவிக்கப்பட்டது. ஒரு[illegible] முறை என் பெற்றோர்கள் இரு[illegible]ரவேல் மக்களுக்குப் பயன் தரும் [illegible] தேவதூதனால் முன்னறிவிக்கப்பட்[illegible]க்குப்பின், அத் தேவதூதன் பலிபீடத்தி[illegible]க்கி எழுந்த செந்தழலில் ஏறிச் சென்று ம[illegible]ச்சிக்கப்பட்டவனாய், கைதியாய், கண்ணற்ற[illegible]களால் வெறுக்கப்பட்டவனாய், சிறையிடப்பட்டவனாய், வரம்பெற்ற வலிமையைக்கொண்டு மாவரைக்கும் இழிதொழில் செய்பவனாய் நான் சாவேனாகில், தேவனுக்கென்று சிறப்பான பணிபுரிவேன் என்று இசுரவேலர்களுக்கு [illegible]அறிவிக்கப்பட்டது ஏன்? அந்த இறை முன்னறிவிப்பின் உண்மைதான் என்ன? அந்தப் புகழ்மிக்க ஆற்றல் கொத்தடிமைகூட வெறுக்கும் பணியை விலங்குகளுக்குரிய மாவரைக்கும் வேலையைச் செய்யும்படி என்னைத் தள்ளியது ஏன்? பெலித்தியர்களின் அடிமைத் தளையிலிருந்து இசுரவேலர்களை நான் விடுவிப்பேன் என்றல்லவா முன்னறிந்து உரைக்கப்பட்டது. அந்த விடுதலை வீரனை எங்கே என்று வினவுவீர்களானால், அவன் குருடாக்கப்பட்டவனாய், பெலித்தியர்களின் அடிமைத் தளையில் தன்னையே பிணைத்துக்கொண்டவனாய், அடிமைகளோடு அடிமையாய்க் காசாவிலே மாவரைத்துக்கொண்டிருப்பதைக் காண்பீர்கள். ஆனால் இப்படி வருமுன் உரைப்பதை ஐயப்படுவது எனக்குகந்ததன்று. என்னுடைய தவறுகளால்தான் அவை நிறைவேறாமல் போயின. வலிமை வரம்பெற்றும் அதன் கமுக்கத்தைக் காப்பாற்றமுடியாமல் ஒரு பெண்ணிடம் வெளியிட்ட நானே குற்றம் சாட்டப்பட வேண்டியவன். இந்தப் பெரும் துன்பத்திற்கு வேறு யாருமில்லை, நானே பொறுப்பு. ஒரு பெண்ணின் கெஞ்சல் என்னை மேற்கொண்டதால் இப்பேரிழப்பிற்கு ஆளானேன். விளைவுகளை எண்ணாமல், விழிநீருக்குப் பணிந்து என் மனைவி தீலியாளிடம் கமுக்கத்தை மறைக்க முடியாமல் போனதே காரணம். அறிவில்லா வீரத்தால் நன்மையேது? அறிவில்லா வீரம்கொண்டவன், பெண்களின் மாய்மாலத்தால் உண்டாகும் அழிவுக்குரியவன்.

அறிவு இல்லா வீரம் எவ்வளவுதான் சிறப்புடையதாக இருந்தாலும், அது அவனுக்கு ஒரு சுமையே. இப்படிப்பட்ட மெய்யறிவு இல்லா வீரம்கொண்டோன் ஆள்வதற்கில்லை, அறிவுமிக்கவனால் ஆளப்படவே பிறக்கிறான்.

வல்லோன் எனக்கு வலிமை தந்தான். ஆனால் 'அதை நீ எளிதில் இழப்பாய்' எனக் காட்டவே, அதை என் குடுமியில் மறைத்துவைத்தான் போலும். நான் அமைதிபெற வேண்டும். படைத்தவனை நான் குறைகாணக் கூடாது. ஒரு வேளை அவனின் நோக்கம் என் அறிவுக்கு அப்பாற்பட்டிருக்கலாம். என் ஆற்றலே என் சாவிப்பு என நான் அறிந்தால் போதும். என் எல்லாத் துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் அதுவே காரணம். என் துன்பங்கள் எண்ணற்றன. அழுது தீர்க்க வாழ்நாள் போதாது. பார்வை இழப்பே என் துன்பங்களுள் பெரியது. நான் ஒரு குருடன்; எதிரிகளின் கைதி. என் பார்வையின்மை, என் விலங்கைவிட, இவ் இருட்குகையைவிட, வறுமையைவிடக் கொடியது. கடவுளின் முதற் படைப்பாம் ஒளியினை என்னால் நுகர முடியாது. என்னைச் சற்று மகிழ்விக்கும் மற்றெல்லாம் இப் பேரிழப்பால் நிலையாய் மறைக்கப்பட்டிருக்கின்றன.

பார்வையற்ற இந்நிலையில் நான் புழுவினும் கடையனானேன். ஏனெனில் அவை ஊர்ந்து சென்றாலும் ஒளியினைக் காணவும், களிக்கவும் அவற்றுக்குக் கண்களுண்டு. ஆனால் நானோ நடக்கிறேன். பார்க்க முடியவில்லை. எனவே நான் இரக்கத்திற்குரியவன். ஒளியின் இடையில் நான் இருளைக் காண்கிறேன். வெறுப்புக்கும் கொடுஞ் சொற்களுக்கும், ஏமாற்றத்திற்கும் இழிவுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கிறேன். உள்ளேயும், வெளியேயும் பிறர் தயவால் வாழ்கிறேன். வலிமையிருந்தும் செயல்பட முடியவில்லை. செத்துப் பிழைத்துக்கொண்டிருக்கிறேன். இருளே! நீ என்னை எப் பக்கத்திலும் சூழ்ந்துள்ளாய். நண்பகல்கூட எனக்கு நள்ளிரவாய்க் காணப்படுகிறது. இவ் இருட் குகையினின்று எனக்கு மீட்பே இல்லை. மீண்டும் ஒளியினைக் காணும் நம்பிக்கையில்லை. என்னைக் காரிருள் சூழ்ந்துள்ளது. முதல்வனின்

முதற் படைப்பாம் ஒளி எனக்கு வஞ்சிக்கப்பட்டதேன்? உலகுக்கு ஒளி தராமல் இருட் குகையில் மறைந்துகொண்ட நிலவுபோல், செங்கதிர் எனக்கு இருண்டுவிட்டது. வாழ்விற்கு ஒளி தேவையென்பதாலும், ஒளியே வாழ்வானுதாலும், தொடுவுணர்வுபோல் ஒளியுணர்வை மேனியெல்லாம் அமைக்காமல், எப்போதும் இடரை அணுகி நிற்கும் மென்மைமிகு கண்களில் அமைத்ததேனோ? அப்படி மேனியெல்லாம் அமைத்திருந்தால் உடலின் ஒவ்வொரு நுண்துளை வழியாய் மனிதன் தன் விருப்பம்போல் காண இயலுமே. அப்படி அமைத்திருந்தால், நான் பார்வையிழந்து இருளில் தவிக்கவேண்டியதிருக்காதே. எனது இந்த சிறப்பு வாழ்வில், என்னை நானே, என்னுள் புதைத்துக்கொண்டேன். நான் ஓர் உலவிடும் கல்லறை.

கல்லறையில் புதைக்கப்பட்ட பிணம், தொல்லைகளிலிருந்து விடுதலையடைகிறது. நானோ இழிவிலிருந்தும், தீமைகளிலிருந்தும், வெறுப்பிலிருந்தும் விலக்கப்படவில்லையே. இறப்பு விதிகளின்படி, மூடப்பட்ட கல்லறைகள் மீண்டும் தோண்டப்படுவதோ, புதைக்கப்பட்ட பிணம் தொல்லைக்குட்படுத்தப்படுவதோ இல்லை. மாறாக நடமாடும் கல்லறையாய் வாழ்கின்ற நான் தண்டனையை நுகரவும், சிறையிருக்கவும் வேண்டியவனாய் இருக்கிறேன். பண்பில்லாக் கொடியவர்களிடையே என் சிறையிருப்பு எனக்கு அளறு போலுள்ளது. யாரங்கே வருவது? யாரோ என்னை நோக்கி வரும் காலடி ஓசை கேட்கிறேன். ஒருவேளை என் இன்னல் கண்டு எள்ளி நகைக்கவரும் பகைவர் கூட்டமோ? என்னைத் துன்புறுத்துவது அவர்களின் அன்றாட வழக்கமாயிற்றே.

குழு ஆள்: இவன், ஆம், இவன்தான் சிம்சோன். மெதுவாகச் செல்லுங்கள். தொந்தரவு செய்யாதீர்! ஆ! எத்தனைப் பெரிய மாற்றம். சொல்லும் தரமன்று. எண்ணிக் கூடப் பார்க்கமுடியாத மாற்றம். இதோ! விழிப்பின்றி அலங்கோலமாய்த் தொங்கிய தலையுடன் வீழ்ந்துகிடப்பதைப் பாருங்கள். நண்பர்களால் கைவிடப்பட்டு, நம்பிக்கையிழந்து கிடப்பதைக் காணுங்கள். பொருந்தாத, அழுக்கடைந்த,

கந்தலான, அடிமைக்குரிய ஆடையோடு காணப்படுகிறான். ஒருவேளை, என் கண்களே என்னை ஏமாற்றுகின்றனவோ. இவன் சிம்சோன்தானா? உடல் வலிமையாலும், மறச்செயல்களாலும் புகழ்பெற்ற சிம்சோனா இவன்?

தன்னைக் காத்துக்கொள்ளப் படை ஏதுமின்றி நிற்கும் போதுகூட, எவராலும் அவனை வெல்லமுடியுமா? கொடிய விலங்காலும்கூட அவனை எதிர்கொள்ள முடியாதே. அரிமா ஆட்டுக்குட்டியைக் கிழித்துப்போடுவதுபோல், படைக்கலன் ஏதுமின்றி, அரிமாவைக்கொன்ற சிம்சோனா இவன்? படைக் கலன்கள் எவையுமின்றிப் பகைவர் படையை நிலைகுலையச் செய்த சிம்சோனா இவன்? எதிராளியின் படைக்கலன்களை எள்ளி நகைப்பதுபோல் வேலோடும், வாளோடும், நெஞ்சக் கூட்டோடும் கம்மியர்களால் உருவாக்கப்பட்ட உருக்குக் கருவிகளோடும், ஊடுருவ முடியாத கலைப் பணிகளோடும் வந்த பகைவர்களைக் கொன்றுகுவித்துத் தடையின்றி முன்னேறிய அந்த சிம்சோனா இவன்? வேங்கையெனச் சீறிப் பாயும் அவன் தாக்குதல் கண்டு அசுகலான் மன்னன் தன் வீரர்களோடு போர்முகம் விட்டுப் புறமுதுகிட்டு ஓடினான். ஓடியவர்களை அவன் உற்று நோக்கையில் அவன் காலடியில் சிக்கி மடிந்தனரே. அவனை எதிர்த்துப் போரிட்டோர் தங்கள் தலைமுடி புழுதியில் புரள நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து மண்டியிட்டனரே. செத்த கழுதையின் தாடை எலும்பால் ஆயிரம் பெலித்தியர்களைக் கொன்றான். இராமாத்து லேகியிலே அது, இன்றுவரை ஏத்தப்படுகிறது. காசாவிலே மாபெரிய நுழைவாயிற் கதவுகளைப் பெயர்த்துத் தன் வெற்றுத் தோளில் வைத்துக்கொண்டு அரக்கர்கள் வாழும் எபிரோான் மலைக்குச் சுமந்துசென்ற சிம்சோனா இவன்? இரும்புக் கதவுகளைத் தோளில் சுமந்தவண்ணம் ஓய்வு நாளிலே அவன் மேற்கொண்ட பயணம் எளிதானது அல்லவே. அது உலகையே தன் தோளில் சுமந்து நின்றதாகக் கருதப்படும் அட்லசின் வலிமையைவிட உயர்வாகும்.

உனது பார்வையின்மைக்காகவும் அடிமை நிலைக்காகவும் வருந்துகிறேன். உன் அடிமை நிலையில் பார்வையின்மை,

சிறைக்குள் மற்றொரு சிறைபோல் அன்றோ அமைந்துள்ளது. இருட்குகையினுள் மற்றொரு இருட்குகை போன்றது. இவ்விருளிலிருந்து உனக்கு விடுதலையில்லை. சிம்சோனே! நீயே ஓர் இருட்குகையானாய். இச் சிறைவாசம் எல்லாவற்றிலும் கொடியதே. உன் உயிர் உண்மையிலேயே உன் உடம்பில் சிறைபட்டிருக்கிறது. உயிர் உடலில் சிறைபட்டிருப்பதாகப் பார்வையுள்ளவர்களும் குறைபட்டுக்கொள்வார்கள். அவர்கள் அப்படிக் குறைபட்டுக்கொள்வது முறையில்லை. ஏனெனில் அவர்களால் பார்க்க முடியும். சிம்சோனே அது உன்னால் முடியாதே! இருண்டுபோன அவன் உடம்பில் அவன் உயிர் வாழ்கிறது. உள்ளொளிக்கு எதிரான புறவொளியை அவனால் இனி நுகர இயலாது. இருண்ட இரவோடு அது பிணைக்கப்பட்டிருக்கிறது. உள்ளொளியால் புறக்காட்சி இல்லையே.

சிம்சோன் அன்று ஒரு கண்ணாடியாய் விளங்கினான். ஆனால் அவனின் இன்றைய நிலையோ, மாந்தன் மண்ணில் தோன்றிய நாள்முதல் அவன் நிலை மாற்றத்திற்குரியது என்பதற்குத்தக்க சான்றாய் விளங்குகிறது. சிம்சோனின் வீழ்ச்சி நிலவுலகப் பெருமையின் நிலையற்ற தன்மைக்குச் சான்றாகும். மாந்தருள் வலியோனாய், வல்லோனாய் விளங்கிய சிம்சோன் தற்போது தன் தீங்கு நாளில் வீழ்ந்துகிடக்கிறான். உயர் குடிப் பிறப்பாலோ, செல்வச் செழிப்பாலோ, ஊழாலோ நிலையில் உயர்ந்தவர்கள், எனது கணிப்பில் உயர்ந்தவர்கள் அல்லர். ஆனால் சிம்சோனே எனது கணிப்பில் உயர்ந்து காணப் படுகிறான். ஏனெனில் அவன் உடல் வலிமை நல்லியல்புகளோடு இணைந்து நிற்கும்வரை அவன் உலகளாவிய புகழ் எய்தினான். பண்போடுகூடிய வலிமையால் பாரையே பணிய வைத்தான்.

சிம்சோன்: யாரோ பேசுவதைக் கேட்கிறேன். ஆனால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில் அது என் காதுகளில் விழுமுன்னே காற்றால் சிதைந்துவிடுகின்றது.

குழு ஆள்: சிம்சோன் பேசுகிறான். நாம் அவன் அருகில் சென்று, என்ன சொல்கிறான் என்பதைக் கேட்போம். ஒரு

காலத்தில் அவன் இசுரவேலர்களின் சீர்த்தி, ஈடிணையற்ற ஏந்தல்! இப்போது அவன் இசுரவேலர்களின் துன்பக்கேணி! (சிம்சோனை நோக்கி) நாங்கள் உன் நண்பர்கள். உன்னைச் சார்ந்தோர்கள். உனக்குத் தெரியாதவர்கள் அல்லர். எசுதோல் மற்றும் சோரா பள்ளத்தாக்கிலிருந்தும் உன்னைக் காண வந்திருக்கிறோம். உன் இரக்கநிலை கண்டு கண்ணீர் சிந்த வந்துள்ளோம். நலமளிக்கும் மருந்துபோல் மெல்லிய இனிய மொழிகளால் நல்லுரை தந்து ஆறுதல்படுத்த வந்துள்ளோம். தக்க அறிவுரை அல்லலைக் குறைக்கும். புரையோடிய புண்ணுக்கு மருந்துபோல் புண்பட்ட உள்ளத்திற்குப் பொருத்தமான உரைகள் இதமானவை.

சிம்சோன்: நண்பர்களே, உங்கள் வருகை எனக்குத் தெம்பூட்டுகிறது. நாணயமில்லா நண்பர்களை நினைவூட்டுகிறது. அவர்கள் போலி நாணயங்கள். உண்மை நாணயம் போல் தோன்றிடினும் தரம் தாழ்ந்த மாழையால் ஆனவை. மதிப்பிழந்தவை இந்த மொழிகள். உங்களைப் பற்றியல்ல நான் பேசுவது, நட்பைப் பிழைப்பாய் கொண்டவர்கள் பற்றியே. வாழ்வில் அப் போலி நண்பர்கள் தேனீக்கள்போல் என்னை மொய்த்தார்கள். என் தாழ்வில் அவர்கள் சென்ற சுவடு தெரியாது சென்று மறைந்தார்கள். நண்பர்களே, தற்போது என்னைச் சூழ்ந்திருககும் துன்பங்களை நீங்கள் காண்கின்றீர். அவற்றுள் பார்வையின்மையே மேலோங்கியுள்ளது. பார்வையின்மையினுல், தலை நிமிர்ந்து உங்களைப் பார்க்க இயலாதவனுய் இருக்கிறேன். எல்லா ஏந்துகளோடும் கட்டப்பட்ட கப்பலைப்போல், என் உடல் இறைவனின் வல்லமையால் கட்டப்பட்டிருக்கிறது. ஆனுல் மதியிலா மீகாமன்போல் என் உடல் வலிமையை நானே சிதைத்து விட்டேன். வல்லோனிடமிருந்து வரமாகப் பெற்ற வலிமையின் கமுக்கத்தை நாணயமில்லா நங்கையிடம் அவளின் பொய் முயக்கில் மயங்கி வெளியிட்டேன். நண்பர்களே! சொல்லுங்கள். பாடல்களிலும், பழமொழிகளிலும் எனது பெயர் மடமைக்குச் சான்ருகப் பயன்படுத்தப்படுகிறதல்லவா? நான் தக்க தண்டனையைத்தான் அடைந்திருக்

கிறேன். எனது தெருக்களில் மக்கள் பேசுகிறார்கள் அல்லவா? அவர்கள் என்னிடம் இணையில்லா வலிமையைக் காணினும், என்னில் அவர்கள் அறிவொளியைக் காணவில்லை அல்லவா? எளிய மாந்தனுக்குரியஅறிவுகூட இல்லாமல் போய்விட்டதே! என் அறிவு குறைந்தது என் வலிமைக்கு இணையாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அது தவறான நிலையில் அமைந்ததால் அது என்னை வழிதவறச் செய்தது. இப்படிச் சம அளவு வலிவும், அறிவும் அமையாததற்கு நானில்லை, கடவுளே குற்றவாளி.

குழு ஆள்: இறை முறையில் குற்றம் காணாதே. மிகச் சிறந்த அறிவர்கள்கூடத் தவறிழைத்திருக்கிறார்கள். தீய பெண்களால் வஞ்சிக்கப்பட்டு மீண்டும் மீண்டும் தவறு செய்திருக்கிறார்கள். எனவே உன் நிலையை நினைந்து சோர்ந்து போகாதே. ஏற்கெனவே துயர்ச்சுமையால் நீ சோர்ந்துபோய் இருக்கிறாய். உண்மையைச் சொன்னால், அழகிலும் அரும் பண்பிலும் சிறந்த பெண்கள் உன்னினத்தில் இருக்கும்போது, நீ ஏன் பெலித்திய பெண்களை மணந்துகொண்டாய் என்று மக்கள் வியப்பில் வினவுவதை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன். அழகும் பண்புமிக்க பெண்களை உன் நாட்டிலே உன்னால் கண்டிருக்க முடியும். பின் ஏன் இந்தப் பெலித்திய பெண்களை மணந்தாய்?

சிம்சோன்: நான் கண்ட முதற் பெண் திம்னதாவிலிருந்தாள். அவள் என்னைக் கவர்ந்தாள். அவள் எம் இனத்தைச் சேர்ந்தவள் அல்லள் என்பதால் என் பெற்றோர்கள் அவளை நான் தேர்ந்தெடுத்ததை விரும்பவில்லை. ஆனால் நான் அவளைத் திருமணம் செய்துகொள்ள நினைத்தது கடவுளின் தூண்டுதல் என்பதை என் பெற்றோர்கள் அறியவில்லை. நான் அந்தப் பெண்ணை மணப்பதைக் கடவுள் விரும்புகிறார் என்பதை என் உள்ளுணர்வின்மூலம் அறிந்துகொண்டேன். எனவே அவளை மணந்தேன். பெலித்தியப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதின்மூலம் இசுரவேலர்களை பெலித்தியர்களிடமிருந்து விடுவிக்க முடியும் என நினைத்தேன். இவ்வாறு நான் எப்பணிக்காக கடவுளால் தெரிந்து

கொள்ளப் பட்டேனே அதைச் செய்யலாம் என்று எண்ணி னேன். அதை அவள் பொய்ப்பித்தாள். எனவே நான் இரண்டாவது ஒரு பெலித்திய பெண்ணை மணந்தேன். அவளை மணந்தது மடமையென்றும், அவளை மணக்காமல் இருந் திருக்கக் கூடாதா? என்று எண்ணுவதும் காலம் கடந்த ஒன்றாகும். பெலித்தியர்கள் நாட்டில் சோரேக்குப் பள்ளத் தாக்கில் தீலியாளைக் கண்டேன். அவள் ஒரு வஞ்சகப் பாம்பு. அவள் என்னைத் தந்திர வலையில் வீழ்த்தி விட்டாள். இசுர வேலர்களை விடுவிப்பதே எனது இத்திருமணத்தின் நோக்க மாக இருந்ததால் இதனை ஒழுங்கானது என்றே கருதினேன். இசுரவேலர்களை அடிமைப் பிடியிலிருந்து விடுவிப்பதே எனது இறுதி நோக்கமாக இருந்தது. இன்றைய என் இன்னல் களுக்குத் தீலியாள் முழுமுதற் காரணமல்லள்; எனது மடமையே முதல் காரணம். அவளது மாய்மாலத்தில் மயங்கி என் வலிமையின் கமுக்கத்தை அவளிடம் சொல்லிவிட்டேன். அது எனது மடமையின் முதலீடு; அதனால் இன்று இன்னலுறு கிறேன்.

குழு ஆள்: இசுரவேலர்களின் எதிரிகளாகிய பெலித்தியர் களை எதிர்க்க நீ வகை தேடியது தவறாகாது. அதற்கு நான் சான்று பகருவேன். ஆனால் இன்றுகூட இசுரவேல் மக்கள் பெலித்தியர்களின் அடிமைத்தளையில் இருக்கிறார்களே.

சிம்சோன்: அவர்கள் இன்னும் அடிமைத்தளையிலிருந்தால் அது எனது தவறாகாது. அவர்களின் ஆளுநர் அவ்வினத் தலைவர்களின் தவறாகும். அவர்கள் என் இறைபணியை நன்றியோடு ஏற்றுக் கொண்டதில்லை. அப்பணியை நான் தனி மாந்தனாகவே செய்தேன். கடவுளே அப்படிச் செய்ய செய்தார். என் ஆய்வினைப் பின்பற்றி விடுதலையை மதித் திருந்தால், அதை அவர்கள் பெற்றிருக்க முடியும். நான் என் செயல்களைப் புகழவில்லை. அந்தச் செயல்களே செய்பவனின் புகழ் பரப்பும். ஆனால் பெலித்தியரின் திடீர் தாக்குதலைத் தாங்க எத்தாம் ஊர் கன்மலையில் நான் இளைப்பாறிக் கொண்டிருந்தபோது பெலித்தியர்கள் என்னைத் தேடி யூதேயா நாட்டுக்குள் நுழையும் வரை, என் செயல்களுக்கு

இசுரவேல் மக்கள் எவ்வகை முதன்மையும் கொடுக்கவில்லை. அப்போதும் நான் தப்பியோட முனையாமல், எதிரிகளை எங்கே எப்படித் தாக்கினால் இசுரவேலர்கள் நன்மை பெறு வார்கள் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தேன்.

யூதேயா மக்கள் எதிரிகளின் தாக்குதலிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், தங்கள் எல்லைகளைக் காக்கவும், என்னைக் கயிற்றினால் கட்ட முற்பட்டபோது, யூதேய மக்கள் எனக்கு எந்தத் தீங்கும் விளைவிக்கக்கூடாது என்ற நிபந்தனை யோடு, மனமுவந்து அவர்கள் தாங்கள் விரும்பியதைச் செய்ய ஒப்பினேன். அப்போது அவர்கள் என்னைக் கட்டி பெலித்தியர் கைகளுக்கு ஒப்புவித்தனர். பெலித்தியர்களோ என்னைத் தங்கள் இரையாகக் கொள்வதில் மிகவும் ஆர்வ முடன் இருந்தனர். அவர்கள் என்னை நெருங்கும்போது கட்ட பட்ட கயிறுகள், நெருப்புப் பட்ட நூல்போல் தெறிபட்டுப் போயின. பெலித்தியரின் பெருந்திரளைப் படைக்கலன் எதுவு மின்றிக் கையில் கிடைத்ததைக் கொண்டு தாக்கி வீழ்த்தி னேன். உயிர்பிழைத்தோர் புறமுதுகிட்டு ஓடினர். அப் போது, யூதேய மக்கள் மட்டும் என்னோடு இணைந்து நின்றிருந் தால், இந்நேரம் 'காத்' கைப்பற்றப்பட்டு, அவர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கும். இப்போது அவர்கள் யாருக்குத் தொண்டு செய்கிறார்களோ, அப்பெலித்தியர் களின் ஆண்டைகளாய் ஆகியிருப்பர். ஆனால் இந்தச் சீர் கெட்ட இசுரவேல் மக்கள் விடுதலையை விட, விலங்கினையே பெரிதும் விரும்பினர். தங்களின் கெடுமதியால் அடிமை களாய் மாறி அடிமைகளாகவே இருந்து கொண்டிருக் கின்றனர். நானோ, அவர்களை விடுவிக்க இறைவனால் பணிக்கப்பட்டேன். எனினும் அவர்கள் என் ஆற்றலையும், அருந்திறத்தையும் ஐயப்பட்டனர்; வெறுத்தனர். தங்கள் நலனுக்காய்ப் பாடுபடுகிறவர்களை மக்கள் கைவிடுவது எங்கும் பொதுவாக இருக்கிறது. என்றும் ஈகம் இரண்டகத்தால் விலை பேசப்படுகிறது.

குழு ஆள்: உமது சொற்கள் அன்று கடவுளின் பிள்ளை களுக்கு எபிரேயர்கள் செய்த இரண்டகங்கள், பலவற்றை

நினைவூட்டுகின்றன. இசுரவேலர்களின் விடுதலைக்காக மீதியானியர்களோடு போரிட்ட 'சிதியோன்' வீரர்கள் பசியால் துவண்டபோது, 'சுக்கோத்தினரும்', 'பெனுவேலரும்' தங்கள் கோழையாலும் நன்றியின்மையாலும் உணவளிக்க மறுத்தனர். இவர்களின் நன்றி கெட்டமைக்கு மற்றுமோர் எடுத்துக் காட்டு 'எப்பிராமியர்கள்' இவர்கள் குறுகிய மனப்பான்மையும், பிற யூதக் குடியினர் மீது பொறுமையும் கொண்டவர்கள். அம்மோனியர்களிடமிருந்து யூதர்களின் நாட்டைக் காப்பாற்ற முயன்ற 'எப்தா' விடத்தும் யூத மக்கள் நன்றிகெட்டு நடந்தனர். 'எப்தா' எப்பிராமியர்களிடமிருந்து உதவி பெற முடியாமல் போனாலும் அவன் அவர்களின் நாட்டைக் கடந்து சென்று அம்மோனியர்களைத் தோற்கடித்தான். இச்செயல் எப்பிராமியர்களுக்கு எரிச்சலூட்டியது. ஒரு பெரும் போர் மூண்டது. அதில் எண்ணற்ற எப்பிராமியர்கள் கொல்லப்பட்டனர். எப்தா எவ்வித இரக்கமும் அவர்களுக்குக் காட்டவில்லை. தப்பியோட முயன்றவர்கள் யோர்தான் ஆற்றின் கழிமுகத்தில் யெப்தாவின் ஆள்களால் தடுத்து நிறுத்தப்பட்டனர். தடுத்து நிறுத்தப் பட்டோர் ஆற்றைக் கடக்க விரும்பினால் 'காணுறு' (ஷிபோலேக்) என்ற சொல்லைப் பலுக்கும்படி வற்புறுத்தப் பட்டனர். முறையாக ஒலிக்கத் தவறியவர்களை அங்கேயே கொன்றுபோட்டனர்.

சிம்சோன்: நீ சொன்ன சான்றுகளோடு எனது சான்றையும் சேர்த்துக்கொள். இசுரவேலர்கள் என்னையும் என் பணிகளையும் புறக்கணிக்கலாம். ஆனால் என் மூலமாகக் கடவுள் அவர்களுக்குக் கொடுக்க விரும்பும் விடுதலையை அவ்வளவு எளிதாகப் புறக்கணிக்க முடியாது. இதற்காகவேனும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

குழு ஆள்: கடவுள் நம்பிக்கை அற்றவர்களைத் தவிர, மற்றவர்களுக்குக் கடவுளின் வழிகள் முறையானவையே. தெய்வ நம்பிக்கையற்றவர்கள் இருப்பின், அவர்கள் தங்கள் வாழ்க்கையை அறியாமையிருளிலேதான் கடத்துகிறார்கள். கடவுள் காட்சியை நம்பாத சான்றோர் எப்போதும் இருந்

திருக்க முடியாது. கடவுள் இல்லை என்ற கோட்பாடு எப்போதாவது இருந்திருக்குமானால், அக்கோட்பாடு பெரும்பாலோரை ஆட்கொண்டிருக்க முடியாது. அத்தகைய கோட்பாடு முட்டாள்களின் உள்ளத்தில் மட்டுமே உறைந்திருக்கின்றது. முட்டாள்களைத் தவிர கற்றறிந்தோர் இத்தகைய கோட்பாட்டைக் கொண்டிருக்க முடியாது. அப்படிப்பட்ட முட்டாள்கள் வழிகாட்டுவாருமின்றி, பின்பற்றுவாருமின்றி இருப்பார்கள். ஆனால் கடவுளின் வழிகள் முறைகேடானவை என்ற எண்ணம் கொண்டோர் பலருண்டு. கடவுளின் அறிவையும் முறையையும் ஐயங்கொள்பவர்கள், கடவுளின் புகழைத் தாம் மாசுபடுத்துகிறோம் என்பதை உணராதிருக்கிறார்கள். அத்தகையோர் தங்கள் ஐயங்களில் சிக்கி மேலும் மேலும் குழப்பம் அடைகிறார்கள். அவற்றினின்று விடுதலை பெறுவதில்லை. மத நம்பிக்கையில்லாத ஒருவன், தன்னுடைய கோட்பாட்டிற்குள், முதலும் முடிவும் இல்லாத எல்லையற்ற மெய்ப்பொருளைக் கட்டுப்படுத்த முனையும்போது தவறு செய்தவனாகிறான். அவர் கட்டளைகளைக் கொடுத்தது நம்மை கட்டுப்படுத்தவே அல்லாது அவரை அல்ல. அவர் கட்டளைகளைக் கைக்கொள்வதிலிருந்து எவருக்கும் விதி விலக்கு அளிப்பதும், கற்பனைகளை மீறியவர்களுக்குத் தண்டனையிலிருந்து விதிவிலக்கு அளிப்பதும் அவருடைய அதிகாரத்திற்குட்பட்டது. ஏனெனில் அவர் வல்லவர். கீழ்ப்படியாமையை ஒழுங்குறச் செய்பவர் அவரே. கடவுள் ஊழியத்திற்கென்று வாக்களித்தவனும் திருமணத்தைத் தவிர்க்க வேண்டியவனுமாகிய நசரேயன் தூய்மையும், கற்புமில்லா வஞ்சகப் பெலித்தியப் பெண்ணை மணமுடிக்கக் காரணமானவரும் கடவுளே.

கடவுளின் வழிகள் வினாவிற்குரியன அல்ல. அவை காரண காரியங்களுக்கு அப்பாற்பட்டவை. அவரின் வழிகளை ஆய்வது வீண். சான்றாக, சிம்சோனின் திருமணத்தை ஆய்ந்தால் சிம்சோன் ஒழுக்கத்திற்கெதிராக எந்தத் தவறும் செய்யவில்லை. இயற்கையின் விதிப்படி அவள் தூய்மையற்றவள் அல்லள். திருமணத்திற்குப் பின்னரே அவள்

கற்பற்றவள் ஆனுள். கணவனுக்கு இரண்டகம் செய்தாள். எனவே ஒழுக்கக்கேடு செய்தவள் அவளே அன்றி, சிம்சோன் அல்லன்.

சிமசோனே, இதோ, உன் தந்தை வருகிருர். நரை திரையோடு ஆவல்மிக்கோராய் முதிய 'மனேவா' மெதுவாய் வந்துகொண்டிருக்கிருர். அவரை நீ எப்படி வரவேற்கப் போகிருய்?

**சிமசோன்:** ஐயகோ! என்னைப் பார்க்க என் தந்தை வருகின்ருர். அகத்துயர் மிகுக்கின்றது அவர் பெயர்

**மனேவா:** உடன் பிறந்தோர்களே, தோண் மரபு ஆடவாகளே. (இந்த வேற்று மண்ணில் எனக்கு நீங்கள் அப்படித்தான் காணப்படுகிறீர்கள்.) ஒரு காலத்தில் உங்கள் பாராட்டுக்குரியவனுகயிருந்ததால் சிம்சோன்மீது நீங்கள் கொண்டிருக்கும் அன்பிற்கு, உங்களை வாழ்த்துகிறேன். என் மகன் சிமசோன் இன்று காசாவிலே ஒரு கைதி. அவன் இஙகேயிருப்பதாக எனக்கு அறிவித்தனர். நீங்கள் அவனைப் பார்த்திருப்பீர்கள். ஏனெனில் முதுமையில் தள்ளாடும் என் கால்களைவிட உங்களின் இளமைத் துடிப்புள்ள அடிகள் இங்கு என்னை முந்திக்கொண்டிருக்கும். அவன் இங்கே இருக்கிருனு? எனக்குச் சொலலுங்கள்.

(சிம்சோனின் தோற்றத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய மாற்றத்தால், மனேவாவால் தன் மகனை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.)

**குழு ஆள்:** சோர்ந்துபோன இந்த நிலையிலும் வலிமையில் முன்போலவே அவன் காணப்படுகிருன். அதோ! அவன் உங்கள் முன்னுள்ளான்.

**மனேவா:** அவனுக்கு ஏற்பட்ட இந்த மாற்றம் எவ்வளவு இரங்கத்தக்கது! எவராலும் வெற்றிகொள்ள முடியாத திண்தோள் வலிமையால திக்கெட்டும் புகழ் பரப்பிய அந்த சிம்சோனு இவன்? அவனைக் கண்டு பெலிததியர்கள் அஞ்சியோடினர். வானுலகோரின் வலிமையோடு அவன் தெருக்களில் உலா வரும்போது யாரே துணிவுடன்

எதிர் நிற்பார்? எவராலும் இயலாதே. பீடுடனும், மெரு மிதத்துடனும் எதிர்நிற்கும் பகைவர்களைத் தன்னந்தனிய ஞய் எதிர்த்துப் போரிட்டான். அவனே ஒரு மாபெரும் படையென நின்ருன். இன்றே அவன் காசாவிலே கைதியா யிருக்கிருன். ஈட்டிமுனைத் தொலைவில் நின்றுகொண்டு தன் பக்கத்தில் நெருங்க அஞ்சும் கோழையிடமிருந்துகூட தன்னைத் தற்காத்துக்கொள்ளும் துப்பற்றிருக்கிருன்.

அந்தோ! நிலையிலா மானிட வலிமையில் கொண்ட நம்பிக்கை அழியக்கூடியது. மானிட இயல்பு ஒவ்வொன்றுமே மாயையானது, வீணனது. மாந்தனிடத்தில் நம்பற்குரியது ஏதுமில்லை. அவனது ஆண்மை, ஆற்றல் அனைத்தும் மாறக் கூடியவை. நாம் நாடித் தேடும் நல்லவையே நம் துன்பத்தின் ஊற்ருகவும், அழிவிற்குக் காரணமாகவும் ஆகிவிடுகின்றன. மலட்டினைச் சாவிப்பாய் எண்ணி, மழலைச் செல்வத்திற்காய் மன்ருடினேன். அப்பேற்றினைப் பெற்றேன். வலிமைக்காக வும், நல்லியல்பிற்காகவும் அனைவராலும் பாராட்டப்பட்ட மகனைப் பெற்றேன். அவன் வானேர்களின் வல்லமையைப் பெற்றிருந்தான். எனவே, ஒவ்வொருவரும் என்னை நற் பேருளன் என்றனர். ஆனல் நான் ஏன் தந்தையானேன்? கடவுள் ஏன் என் வேண்டுகோளை நிறைவேற்றினர்? முடிவில் என்னை அல்லல்படுத்தவா? கடவுளின் வரங்களெலலாம் அவற்றை அடையவேண்டுமென நம் ஆர்வங்களைத் தூண்டு வதேனே?

இறுதியில் சாவிப்பாய் மாறுகின்ற சலுகைகளை வல்லவன் நமக்கு நல்குவதேனே? தேளென அவை நம்மைக் கொட்டு கின்றனவே.

நீ செயலாற்று என முன்னறிவிக்க இருமுறை இறைவன் தம் தூதர்களை அனுப்பினர். அம்முன்னறிவிப்பின் முடிவு இப்படியாயிற்றே. தெரிந்தெடுக்கப்பட்டுப் புனிதமாக்கப் பட்ட செடியினைப்போல் உனது வருகையும் வளர்ப்பும் இறை யாணையின்படி புனிதமானது. ஆனல் உனது புகழ் குறுகிய கால வாழ்வுடையது, அற்புதமாகவும், கவர்ச்சியாகவும் சிறிது காலம் மட்டுமே வாழ்ந்து பின் தன் சிறப்பிழந்து மடி

யும் செடியைப்போல் உன் வலிமையும், வனப்பும் வஞ்சக வலையில் வீழ்த்தப்பட்டு விலங்கிடப்பட்டிருக்கின்றன. வீரத்தால் புகழ் எய்திய அந்த சிம்சோனே, இப்போது அடிமையாய் மாற்ருன் கண்ணிற்கு வெறுப்பூட்டும் ஒரு பொருளாய், கைதியாய், ஏழையாய், குருடனாய் இருக்கிறான்? இருட் குகையில் அடைக்கப்பட்டு, அடிமைகளோடு உழைக்கவேண்டிய வனாயிருக்கிறான்? பயனுள்ள பணிகளைச் செய்ய, ஒருமுறை இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்டுப் போதிய வலிமையுடன் படைக்கப்பட்ட ஒருவன், மானிட இயலாமையால் தவறிழைப்பின், இவ்வளவு கொடுமையாக அவன் தண்டிக்கப்படக்கூடாது என்பது என் எண்ணம் அப்படிப்பட்ட மனிதனுக்கு ஆண்டவன் திடுமென அழிவைக் கொண்டுவரக்கூடாது அவனை எதிரிகளின் அடிமையாகவும், மானமிழந்த குடிககுரியவனாகவும், பழிக்குரியவனாகவும் மாற்றக்கூடாது. இத்தனைக் கொடுமையாக இறைவன் அவனைத் தண்டிக்கக் கூடாது. முந்தைய நற்பணிகளுக்குரிய மேன்மையைக் கொடுக்கவேண்டும்.

**சிம்சோன்:** தந்தையே, இறையாணையைக் குறைகூற வேண்டா. இந்தக் கொடுமைகள் எனது இயலாமையால் எனக்கு நேர்ந்தன. அவை முறையானவையே. நானே என் துன்பங்களுக்குக் காரணம். எனது இந்த இழிநிலைக்கு நானே முழு முதற் காரணம். எனது குடுமியில் மறைந்து கிடந்த எனது வல்லமையின் கமுக்கத்தை வெளியிட்டதன் மூலம் கடவுளின் புனிதமான அற்புதத்தை உரிய மரியாதையின்றிப் புறக்கணித்துவிட்டேன். கமுக்கக் காப்புறுதியின் கீழ் கொடுக்கப்பட்டதை என்னால் காப்பாற்ற முடியவில்லை அதை நான் ஒரு பெண்ணிடம் வெளியிட்டுவிட்டேன். அதுவும் ஒரு நம்பிக்கையற்ற பகை இனத்தைச் சார்ந்த பெலித்தியப் பெண்ணிடம் வெளியிட்டுவிட்டேன். பெலித்தியர்கள் நம்பற்குரியவர்கள் அல்லர் என்பதை நான் நன்கறிவேன். அவர்களின் இரண்டகத்தைக் கண்டு நான் வியப்படைய வில்லை. ஏனெனில் கடந்த காலத்தில் அதை நான் பலமுறை அறிந்துள்ளேன். என் முதல் மனைவி 'திம்னு' என்னை

ஏமாற்றவில்லையா? கண்ணீரால் என் நெஞ்சத்தைக் கனியச் செய்து என் வல்லமையின் கமுக்கத்தை அவள் என்னிடமிருந்து கரந்துவிட்டாள். அவளிடத்தில் என் கமுக்கத்தைச் சொன்னவுடன், அதை அவள் என் ஒவ்வொரு செயலையும் உற்றுநோக்கி வந்த பகைவர்களிடம் வெளிப்படுத்தி விட்டாள்.

முந்தைய என் பெலித்திய மனைவியைவிட என் இரண்டாவது மனைவி தீலியாள் மிகவும் நம்பிக்கையுள்ளவளாக இருப்பாள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், என்னை அவள் காட்டிக்கொடுத்தால் பெரும் பணம் பரிசாகத் தருகிறோம் என்று பெலித்தியர்களால் வாக்குறுதி கொடுக்கப்பட்டு அவளும் பெலித்தியர்களால் கெடுக்கப்பட்டாள். நாங்கள் திருமண உறவில் ஈடுபட்டிருந்தபோதே அவள் பொற் பரிசால் கெடுக்கப்பட்டு, இரண்டகந்தழைக்க உருவுறறிருந் தாள். இரண்டகமே அவள் ஈன்ற முதற் குழந்தையாயிற்று. தங்கத்தின் நினைப்பே அவளை நம்பிக்கைக்கேட்டைக் கருவுறச் செய்தது. தன் கெஞ்சல்களினாலும் கொஞ்சுதலினாலும் அளவிலா இன்பத்தை அள்ளித்தந்து வெற்றிபெற மூன்று முறை முயன்றாள். மும்முறையும் நான் அவளை ஏமாற்றினேன். அவள் வேண்டுதலைப் புறக்கணித்தேன். ஒவ்வொரு முறையும் அவள் என்னை வீழ்த்த எவ்வளவு வெளிப்படையாய் முயல்கிறாள் என்பதை நான் கண்காணித்தேன். எனது கமுக்கத்தை நானே காட்டிக்கொடுக்கும்படி செய்ய அவள் முயன்றாள். மும்முறை தோற்ற அவள், நான்காவது முறையாக, தன் வஞ்சக வழிகளையெலலாம் பயன்படுத்தி மயக்கும் மொழிகளாலும், ஆர்வமூட்டும் மேனி மினுக்காலும், கண்ணீராலும் என்னை வஞ்சிக்க முயன்றாள். இரவு பகலாய்த் தொடர்ந்து அவள் ஈடுபட்டாள். ஓய்வின்றி முயன்றாள். அவளது தொந்தரவு தாங்க முடியாமல் நின்ற வேளையில, நான் என் குடுமியில் மறைதது வைக்கப்பட்ட அந்தக் கமுக்கத்தை வெளியிட்டுவிட்டேன். இன்னும் சற்று மன உறுதியும் திடமான எண்ணமும் கொண்டிருந்தால், அவளின் வஞ்சக வலையில் சிக்காமல் நான் தப்பி

யிருக்க முடியும். என் வெட்கக்கேடான இயலாமையால் அவளிடம் நான் கொத்தடிமைபோல் பிணைக்கப்பட்டேன். என் மதத்திற்கும், தன்மதிப்பிற்கும் எவ்வளவு பெரிய மானக்கேட்டை உண்டாக்கிவிட்டேன். மனவுறுதி இல்லாமல், மனைவிக்கு அடிமையாகிவிட்டேன். இந்தத் தவற்றுக்காக நான் அடிமைகளோடு உழைக்கின்ற சரியான தண்டனையைப் பெற்றிருக்கிறேன். இந்த எனது இழிநிலை தீலியாளிடம் நான் அடிமைப்பட்டுக்கிடந்த இழிநிலையைவிட அதிக இழிவானது அன்று. அவளிடம் நான் இருந்த நிலையே மிகவும் ஈனமான, இழிவான, மானமற்ற, வெட்கக்கேடான நிலையாகும். முன்பு நான் என் மனம் ஒரு பெண்ணின் விருப்பத்திற்கு அடிமைப்பட்டுக்கிடப்பதைக் காணமுடியாத பண்பற்ற குருடனாய் இருந்தேன். அந்த அகக்கண் இல்லாத நிலையே, இப் புறக்கண் இல்லா நிலையினும் கீழானது.

மனோவா: மகனே! நான் பெலித்திய பெண்களின் திருமணத்தைப் பாராட்டவில்லை. மாறாக அதனை நான் ஏற்கவிலலை. ஆனால் இது இறையாணையின் தூண்டுதல் என என்னிடம் வாதிட்டாய். இத்திருமண உறவால் பெலித்தியர்களைத் தண்டிக்க தக்க வாய்ப்பு என்றும் வாதிட்டாய். ஆனால் நான் சொல்லுவதுதான் சரியென்று அப்போது நான் உன்னிடம் வற்புறுத்தவில்லை. தீலியாளின் திருமணத்தைப் பெலித்தியர்கள் உன்னைத் தங்கள் அடிமையாக்க நல்ல வாய்ப்பாகவும் தங்கள் வெற்றியின் அறிகுறியாகவும் கருதினர். ஒரு பெலித்தியப் பெண்ணை மணந்துகொண்டதன் விளைவாகப் பெண்மையின் கவர்ச்சியில் கவர்ந்திழுக்கப்பட்டவனானாய். உன் இனப்பெண் ஒருத்தியை மணமுடித்திருந்தால் இந்நிலை உனக்கு ஏற்பட்டிருக்காது. நீ கடவுளின் கமுக்கத்தை மீறிவிட்டாய். அமைதியாய் நின்று கமுக்கத்தைக் காப்பாய் என்று உன்னை நம்பித் தந்த தெய்வ கமுக்கத்தை மீறிவிட்டாய். உண்மையிலேயே உனது இந்த துன்பங்கள் பெரியவை. உனது குற்றத்தின் மிகப் பெரிய விளைவுகளை நீ தாங்கிக்கொண்டிருக்கிறாய். உன் தவற்றுக்காகத் துன்பப்பட்டாய். இன்னும் துன்பப்படுகிறாய். உனது துன்பங்கள்

எவ்வகையிலும் குறையப்போவதில்லை. இதனினும் கொடிய துன்பம் உனக்குக் காத்திருக்கிறது.

இன்று காசாவிலே, வருணன் என்னும் தங்கள் தெய்வத்தைச் சிறப்பிக்கும் பொருட்டுப் பெலித்தியர்கள் ஒரு புனித விருந்துகொள்ளவிருக்கிறார்கள். அந்த விருந்தும், விழாவும் பெரிய அளவிலே பகட்டாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இப்போது விலங்கிட்டுக் குருடாக்கப் பட்டுத் தங்கள் பிடியிலே இருக்கும் சிம்சோனிடமிருந்து தங்களை விடுவித்த மழைத் தெய்வத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் விழாக் கொண்டாடப்படும் என ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள். அவர்களில் பலரைக் கொன்று குவித்த உன் கைகளிலிருந்து பெலித்தியர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் ஆகவே இன்று வருணன் போற்றப்படவும், உனது உண்மையான ஒரே கடவுள் தூற்றப்படவும் போகிறார். சிலைகளை வழிபடுகின்ற பெலித்தியர்கள், மதுவருந்தித் தங்கள் மழைத் தெயவத்தைத் தொழவும், உனது தெய்வத்தை இழிவுபடுத்தவுமிருக்கிறாகள். இவையெலலாம் உனது தவற்றால நேர்ந்தனவே. இந்த மானக்கேடு, மிகவும் வெட்கக்கேடான இழிவாக உனக்கும், எனக்கும், நம் குடும்பத்திற்கும் நேர்ந்துவிட்டது.

சிம்சோன்: தந்தையே! இந்த மானக்கேட்டையும், வசைகளையும் இசுரவேலர்கள்மீது நான் கொண்டுவந்ததை ஏற்றுக்கொள்கிறேன். வருணனுக்குப் பெருமையைக்கொண்டு வந்ததற்கு நானே பொறுப்பாவேன். உருவ வழிபாடு செய்பவர்களுக்கும், உண்மையான இறைவன்பால் நம்பிக்கையற்றவர்களுக்கும், உண்மைத் தெய்வத்தைப் புறக்கணித்துச் சிலைகளை வணங்க விரும்புகிறவாகளுக்கும், நானே நல்ல வாய்ப்பை வழங்கிவிட்டேன். இது என்னை மிகவும் தொல்லைப் படுத்துகிறது, வெட்கமுறச் செயகிறது, என் நெஞ்சத்தைச் சோர்வுறல, துயரத்தால் நிரப்புகிறது. இந்த அளவிலாத் துயர் நான் விழிகள் மூடித் துயிலகொள்ள முடியாமல் செய்கிறது; உள்ளத்தை உறுத்துகிறது. நான் இன்றும் உயிரோடிக்க ஒரே காரணம், என்னைப் பொறுத்தமட்டில்,

எனக்கென்று விதிக்கப்பட்ட போராட்டம் முடிந்துவிட்டது. இப்போதுள்ள போராட்டமெல்லாம், இறைவனுக்கும் வருண னுக்கும் இடையிலேதான். எனது வீழ்ச்சியின்மூலம் வருணன் இறைவனுக்கு இணையானவனாகிவிட்டான். இணையானது மட்டுமின்றி இசுரவேலர்களின் இறைவனைவிட உயர்வாகத் தன் தெய்வீக நிலையை வருணன் ஒப்பிடுகிறான். உறுதியாய்ச் சொல்லுகிறேன். இந்தத் தாக்குதலை நம் உண்மை இறைவன் ஒருபோதும் பொறுத்துக்கொள்ளப்போவதில்லை. அவர் இந்த அறைகூவலை ஏற்பதில் காலம் தாழ்த்தப்போவதில்லை. மீண்டும் அவர் எழுந்து, தம் மேலாண்மையை நிலைநிறுத்தப் போகிறார். வருணன் அவர் முன்னே மறுபடியும் தலை வணங்கப் போகிறான். என்னை வெற்றிகொண்டதால் அவ னுக்குக் கிடைத்த மரியாதையை ஒட்டுமொத்தமாய் இழக்கப்போகிறான். அவனின் அடியார்கள் குழப்பமும் அச்சமும் அடையப்போகிறார்கள்.

மனோவா: இந்த முன்னறிவிப்பு எனக்கு மிகுந்த ஆறுதலை அளிக்கிறது. உனது இந்தச் சொற்களை நான் முன்னோட்ட மாய் எடுத்துக்கொள்கிறேன். தனது பெயருக்கும், பெருமைக் கும் ஏற்பட்ட இந்த ஆய்விலிருந்தும், போட்டியிலிருந்தும் தன் புகழை நிலைநிறுத்தக் கடவுள் தாமதிக்க மாட்டார். இருவரில் (வருணன்—இறைவன்) எவர் உயர்ந்தவர் என்ற ஐயத்தில மக்களை இசுரவேலர்களின் இறைவன் தவிக்க விடப்போவதில்லை. ஆனால் உனது விடுதலையைப் பெற நான் என்ன செய்யவேண்டும் என்பதை அறியாதிருக்கிறேன். நீ, பெலித்தியர்களின் கையில் அடிமையாயிருக்க உடன்படக் கூடாது. இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில உன்னை விட்டுவிட முடியாது. உனது விடுதலைக்கான ஏற்பாடுகளைப் பற்றித் தீர்வுசெய்யச் சில பெலித்திய ஆண்டான்களை அணுகுவதற்கு வழிமுறைகள் செய்துளளேன். நீ செய்கின்ற இந்த அடிமைத் தொழிலையும் உன் பாடுகளையும் தொலலை களையும் பார்த்து அவர்கள் உன்னைப் பழிவாங்கும் உணர்வில் இபபோது நிறைவடைந்திருப்பர். உனது பாடுகள் இறப்பை விடவும் இழிவானவை. அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும்

நிலையில் நீ இப்போது இல்லை. (ஆகவே உன்னை விடுவிக்க அவர்கள் ஒப்புக்கொள்ளலாம்.)

சிம்சோன்: அப்படிச் சொல்லாதீர்கள். அந்த எண்ணத்தை அருள்கூர்ந்து விட்டுவிடுங்கள். என் விதியின் பயனாய் ஏற்பட்ட இந்நிலையில் நான் துன்பப்பட என்னை உடன்படுங்கள். எனது கமுக்கத்தை வெளியிட்டதன்மூலம் நான் செய்த அந்த இழிவான தவற்றுக்குத் தக்க தண்டம் செலுத்த என்னை விடுங்கள். நண்பர்களால் அல்லது வேறு எவராலும் நம்பி ஒப்படைக்கப்பட்ட கமுக்கத்தை வெளி யிடுபவன் தண்டனைக்குரியவன். அத்தகையோன் நட்புக் குரியவன் அல்லன். அத்தகையோன் மடமையாகப் பேசுபவன் என்றும் நம்பிக்கைக்கேடன் என்றும் அனைவராலும் ஒதுக்கித் தள்ளப்படக் கூடியவன். நமபி ஒப்படைத்த கமுக்கத்தைப் பிறரிடம் வெளியிடுபவன் நெற்றியில் 'முட்டாள்' என்று பொறிக்கப்பட வேண்டியவன். எனது தீவினையோ மிகப் பெரியது. இழிவான முறையிலும், இயலாமையினாலும், செருக்கினாலும், நல்லச்சமில்லாமலும் கடவுளின் கமுக்கத்தை நான் வெளியிட்டு விட்டேன். எனது பற்றற்ற இந்தக் கதை 'தாண்டுலசு' கதையைவிட இழிவானது.

மனோவா: தவமிரு. இறைவனிடம் மன்னிப்புக்கேள். உனது துயருக்கு நீயே காரணமாயிராதே, செய்த தீவினைக் காய் வருந்து. உன்னால் உன் தண்டனையைத் தவிர்க்க முடியுமானால், தவிர்த்துவிடு. நம்மை நாமே காத்துக் கொள்ளும் உணர்வு நம்மை அப்படிச் செய்யக் கற்பிககிறது. உனது விடுதலையைக் கடவுள் போக்கிற்கு ஒப்புவி. உனது கையனறு, பிறர் கை உன்னைக் காக்கவிடு. கடவுள் இரக்கம் மிகுதியினால் உன்னை விடுவிக்கலாம். முற்றுமாய்த் தன்னை இறைவனிடம் ஒப்புகொடுத்த ஒருவனைக் காக்க மன முள்ளவராய் இருக்கிறார். அவரின் அருளை நாடும் தாழ்மை யுள்ள ஒருவனை அவர் ஏற்றுக்கொள்கிறார். தன் தீர்பபை நம்பித் தனக்குத் தானே சாக்காட்டினை ஏற்படுத்திக்கொள் கிற ஒருவனைப் பார்க்கிலும், இறைவன் அருள் நாடுகிறவர்

களை அவர் ஒப்புக்கொள்கிறார். ஒருவன் தனக்குரிய தண்டனையையும் இறப்பையும் தானே தேர்ந்துகொண்டால், அப்படிப்பட்டவன் தன்னெறியை அதிகமாய் நம்பி, தன்னைத் தானே புண்படுத்தித் துயர்ப்படுத்திக் கொண்டால் அவன் தான் என்னும் அகந்தையுடையவனாகிறான். இவ் அகந்தை கடவுளுக்கு உகந்தது இல்லை. இப் பழிக்கு ஆளாகாதே. உனக்குக் கொடுக்கப்படவிருக்கும் விடுதலையைப் புறக்கணிக்காதே. பெலித்தியர்களிடமிருந்து உனை விடுவிக்கக் கடவுளே என்னை அனுப்பியிருக்கலாம். உன்னை விடுவிக்கவும் வீட்டிற்கு அழைத்துச்செல்லவும் கடவுளே இவ் வழிகளை எனக்குக கற்பித்திருக்கலாம் என்றுகூட நீ உன் நாட்டிற்குத் திரும்பி இசுரவேலர்களின் இறைவன் கோயிலில் முன்புபோல் அனபோடு வழிபடவும், அவரின் சீற்றத்திற்கும் தண்டனைக்கும் உன்னைத் தப்புவிக்கவும் இவற்றை அவர் என் மூலம் செய்யலாம்.

சிம்சோன்: அவரிடம் மன்னிப்புக் கோருகிறேன். ஆனால் நான் வாழ்வைத் தேடுமளவுக்கு என் வாழ்வில இனிச் சுவை ஒன்றும் இலலை. எனது வாழ்வினால் யாருக்கும் இனி எந்த நன்மையுமில்லை. வலிமையில் வாழும் உயிரினங்களை நான் மிஞ்சி நின்றபோது, பெலித்தியர்களிடமிருந்து இசுரவேலர்களை விடுவிப்பேன என்ற நம்பிக்கையிருந்தது. மாபெரும் செயல்களைச் செய்ய நான் பிறந்தேன் என்ற முன்னறிவிப்பு மெய்ப்பிக்கப்பட இருந்தபோது பாதி மாந்தனாகவும் பாதி கடவுளாகவும் இன்று அணைப்படுத்தப்படுகின்ற அனாகின் செய்த தீரச்செயலகளைவிட எனது செயலகள் மிகவும் துணிவும் மறமும் செறிந்ததாக இருந்தும், பகைவர்கள் அஞ்சி ஒடுங்கவும் மற்றவர்கள் பாராட்டும் வண்ணம் நான் உலா வநதுய, எதிர் நிற்க ஆள் இன்றி இருநது இவ்வாறு எலலா வலிமையும், புகழும், பெருமையும் இருநதும், ஒரு கவர்ச்சியான வஞ்சகியின் மாய வலையில் வீழ்ந்து விட்டேன். உணர்ச்சி வயபபட்டு என் ஆண்மையை இழந்து விட்டேன். என்னிடம் மறைந்துகிடந்த வலிமையின் கமுக்கத்தைக் காமவெறியூட்டும பெண்ணிடம் ஒப்படைத்துவிட்டேன். கடவுளின்

புனிதமான கமுக்கத்தை ஒரு நெறிகெட்ட பெண்ணிடம் வெளியிட்டுவிட்டேன். அவள் என் குடுமியை மழிக்கச் செய்து ஆண்மை அழிக்கப்பட்ட செம்மறியைப்போல் வலிமையற்ற வனாக்கினாள். அவளது பிடியில் நான் செயலிழந்து நின்றேன். எனது வலிமையின் மூலமாயிருந்த முடியைக் கொள்ளை யிட்டுப் பறித்துக்கொண்டு என்னை ஒரு கேலிக்குரிய பொரு ளாய் மாற்றிப் பகைவர்களுக்கு என்னைக் காட்டிக் கொடுத் தாள்.

குழு ஆள்: மதுவிற்கு மண்டியிட்டுத் தங்கள் மறவாண் மையை இழந்து நின்ற மாவீரர்கள் பலருண்டு. சிம்சோனே! நீ, அப்படிப்பட்டவர்களை நினைவுகூர்ந்திருக்க வேண்டும். செந்நிறத்தில் மிளிர்கின்ற மணமிக்க மதுவை நீ நுகர்ந்ததோ பருகியதோ கிடையாதா? மது அனைவரையும் மயக்கும். அது கடவுள்களையும் மாந்தர்களையும் சமமாகவே மகிழூட்டும். அத்தகைய மது உன்னை மயக்க நீ முந்தி இருக்கக்கூடாது. வற்றாத நீரோடையின் தெளிந்த நீரை மட்டுமே நீ பருகி யிருக்க வேண்டும்.

சிம்சோன்: எங்கெல்லாம் நீரூற்றின் தெள்ளத் தெளிந்த நீர், கதிரவனின் கதிர்வீச்சால் தூய்மைப்படுத்தப்பட் டிருந்ததோ அந்த நீரையே நான் பருகி வளர்ந்தேன். அப படிப்பட்ட தண்ணீராலேயே என் வேட்கையைத் தீர்த்தேன். நான் என்றுமே மயக்கூட்டும் மதுவை அருந்தியதில்லை. மது வின் இன்பத்தில் திளைத்தவர்களைக் கண்டு பொறாமைப் பட்டதும் இல்லை.

குழு ஆள்: வெறியூட்டும் மதுவை அருந்துவது, உடல் நலனுக்கு உரமூட்டும் என எண்ணுவது மிகப் பெரிய மடமை. நீரோடையின் தெளிந்த நீரே சிம்சோனுக்கு உயர்ந்த கடவுள் தந்த குடிப்பு. மது, கடவுளால் விலக்கப்பட்ட குடிப்பு. மது இலலாமலே, ஓடையின் தெளிந்த நீரால் கடவுள் உனக்கு உரமேற்றவில்லையா. இதிலிருந்து மது உடல உரத்திற்கு உகந்தது இல்லை எனத் தெரிகிறதல்லவா?

சிம்சோன்: மதுவினிடமிருந்து நான் விலகியிருந்ததன் விளைவு என்ன? அதைவிட வெறியூட்டும் மங்கையிடமிருந்து என்னைக் காத்துக்கொள்ளத் தவறிவிட்டேனே. ஒரு வாயிலை மட்டும் அடைத்துவிட்டு மற்ற வாயில்களை எதிரிகள் நுழையத் திறந்துவைத்திருப்பதால் பயனேது? எனது தோல்வியும் வீழ்ச்சியும் எனது ஆண்மையின்மையால் விளைந்ததே. அதனால் இன்று நான் குருடனாய், அடிமையாய், நாணமற்றவனாய், புகழ் குன்றியவனாய் ஒடுக்கப்பட்டவனாய், ஒதுக்கப்பட்டவனாய் ஆனேன். இப்போது நான் எவ்வகையில் பயனுள்ளவனாக இருக்கிறேன்? கடவுள் என்னிடம் ஒப்படைத்த பணியை நான் எப்படிச் செய்யமுடியும்? என் நாட்டிற்கு நான் இனி எவ்வகையில் தொண்டாற்ற முடியும்? இனி மற்றவர்களின் பார்வையில் நான் ஒரு பரிவுக்குரியவன், வியப்புப் பொருள், குருடன், மடியன் அவ்வளவுதான். என் வல்லமைக்குரிய அந்தக் குடுமிச் சுருள் இப்போது பயனற்றதாய்ப் போய்விட்டது. இப்போதுகூடச் சுருள் சுருளாய்த் தொங்கும் தலைமுடி எனக்குண்டு. ஆனால் அவை தங்கள் பழைய வலிமையை, ஆற்றலை இழந்து, வெறும் நினைவுப் பொருளாகவே காணப்படுகின்றன. இப்போது நான் வீணே அமர்ந்து என் வாழ்வைக் கழிக்க வேண்டும். அது என் கால் கைகளைச் செயலிழக்கச் செய்துவிடும். வெறுப்புக்கும் அருவருப்புக்கும் உரிய முதுமையை அது அடையச் செய்துவிடும். எனவே நான் சிறையில் தங்கி, அடிமைபோல் உழைத்து, வாழ்விற்குரியதை ஈட்டி, உடல் நலத்துக்கு ஊறு விளைவிக்கின்ற, அழகிய அடிமைக்கு வழங்குகின்ற உணவை உண்டு, எனது வல்லமை அனைத்தையும் அழித்து, நான் என்றும் ஆவலோடு உதவிக்கு நாடும் சாக்காட்டைக் காணும் வரை சிறையில் இருப்பதே நலம். என் வாழ்வின் வேதனைகளுக்கெல்லாம் இறப்பே விடுதலையளிக்க முடியும்.

மனோவா: பெலித்தியர்களை அழிக்க ஆண்டவனால் கொடுக்கப்பட்ட அந்த வல்லமையால் அவர்களுக்குத் தொண்டு செய்யவா போகிறாய்? அதைவிட வீட்டில் வந்து,

படுக்கையில் கிடந்து, உழைப்பின்றி, முதுமையால் உருக் குலைந்து கிடப்பதே நல்லது. உனக்கு நினைவிருக்கிறதா? ஒரு முறை நீ உன் பகைவர்களைப் போரிட்டு அழித்தபின், வேட்கையால் தவித்தபோது, இறைவன் அழகிய நீரோடையை உன் முன் பொங்கிவரச் செய்து உன் வேண்டு கோளுக்கிணங்க உன் வேட்கையைத் தணிககவில்லையா? அத் தேவன் உன் இழந்த விழிகளை இப்போது மீண்டும் தரலாம் அல்லவா? அப்படித் தரின் இபபோதைய நிலையைவிட நீ அவருக்குப் பெருந்தொண்டு செய்யலாம் அல்லவா? நான் நம்புகிறேன். அப்படி நடக்குமென்று. இன்னும் அந்த அற்புத ஆற்றல உன் முடியில் ஒட்டிக்கொண்டிருப்பது வேறு எந்த நோக்கத்திற்காக என்று நீ நினைக்கிருய்? உனக்கு இறைவன் ஈந்த அந்த ஆற்றல் உன்னில் இன்னும் இருக்கிறது. அது பயனற்றுப்போகவில்லை. அவரின் அற்புத ஈவு என்றும் பயனற்றுப் போவதில்லை.

சிம்சோன்: நீங்கள் எதிர்பார்ப்பதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றுதான் நடக்கும் என்று என் உள்ளுணர்வு எனக்கு உணர்த்துகிறது. என் ஒளியற்ற இருண்ட கண்கள் மீண்டும் ஒளியை நுகரப்போவதில்லை. மற்ருேர் ஒளியாம் என் உயிர்கூட என்னிடம் நீண்ட நாள் இருக்கப்போவதில்லை. விரைவில நான் பார்வையின்மையால் உண்டான இருளிலு லும், சாவிருளிலுலும் ஈர்க்கப்படப் போகிறேன். என் உயிர் சோர்ந்துபோகிறது. நம்பிக்கை அனைத்தையும் இழந்து போகிறேன். என் இயல்பாற்றல் செயலிழந்துபோகிறது. எனது புகழின் நாள்கள் கடந்துபோகின்றன. இகழ்ச்சி யான நாள்கள் முடியப்போகின்றன. விரைவில் நான் இறப்பு என்னும் நீடுதுயில் அடையப்போகிறேன்.

மனோவா: இப்படிப்பட்ட உள்ளுணர்வை நம்பாதே! இவ் உள்ளுணர்வு உனது மனததுயராலும், அளவிட முடியாத அல்லலிலுலும், உனது கற்பனையாலும ஏற் பட்டதே. என்னைப் பொறுத்தமட்டில், பெற்ருேருக்குரிய கடமையை நான் புறக்கணிக்க முடியாது. எனக்கு இனிக் காலம் தாழ்த்த இயலாது. உடனே சென்று தண்டம்

தந்தோ வேறுவகையிலோ உன்னை விடுவிப்பதே என் கடமை. அதுவரை உன் ஆருயிர் நண்பர்களின் ஆறுதல் மொழி களுசகுச் செவிமடு.

சிம்சோன்: அந்தோ! நம் துயரங்கள் உடலளவில் மட்டும் இல்லையே. அவை என் உள்ளத்திலும் ஊடுருவிச் சென்று தொல்லைப்படுத்துகின்றனவே. நெஞ்சு, தலை, மார்பு, சிறுநீரகம் அனைத்துமே அல்லல்படட்டும். மனம் மட்டும் அல்லலிலிருந்து விடுபடட்டும் ஏனெனில் மனத்துயர் ஒருவனின் ஆவியைச் சிறைப்படுத்திச் சிதைத்துவிடுமே. உடல் துயரைவிட மனத்துயர் மிகக் கொடியது. உடல் துயர் உடலின் சில பகுதிகளை மட்டுமே தாக்கும். ஆனால் மனத்துயரோ உடலின் ஒவ்வோர் உறுப்பிலும் பரவிக் கலந்து தொல்லைப்படுத்தும்.

எனது துயரம் தீராத நோயைப்போல் என்னைத் துன்புறுத்துகிறது. விடிவே இல்லாத வேதனையாகிவிட்டது. கொப்புளம் போன்ற அழுகிய ஆறாத புண்ணினைப்போல் எனது துயரம் என்னைத் துன்புறுத்துகிறது. என் எண்ணங் களே ஒரு வல்லரக்கன்போல் என்னை அடக்கி என் உணர்வு களை உருக்குலைத்து வருகின்றன. ஆறாப் புண்ணை அது என் அடி மனத்தில் உருவாக்கிவிட்டது அழுகிய, ஆறா அப் புண்ணின் எரிச்சலைப் பனிபடர்ந்த 'ஆல்ப்சு' மலையின் வாடைக் காற்றால்கூடத் தணிக்க முடியாது. எந்த மருந்தும் அந்த மனப் புண்ணினைக் குணப்படுத்த முடியாது. உறக்கம் என்னை இறப்புக்கு ஒப்புக்கொடுத்துவிட்டு ஒட்டுமொத்த மாக விலகிக்கொண்டது. இறப்பே எனது துயர்க்கு ஒரே விடுதலை.

. கருவிலிருந்தே கடவுளுக்கெனப் படைக்கப்பட்டவன் நான். அவரால் தெரிந்துகொண்டு அவராலே வளர்க்கப் பட்ட குழந்தை நான். தெய்வீகப் பணிகளைச் செய்வே னென்று என் பிறப்பின்போது வருவது உரைக்கப்பட்டது. இநத முன்னோட்டம் இருமுறை உரைக்கப்பட்டது. அவரின் தெய்வீகப் பராமரிப்பில், மதுவிலிருந்து விலகி, நலமாக வளர்ந்தேன். மாந்தர்களால் கூடாத சில சிறப்

பான பணிகளைச் செய்யவே கடவுள் என்னைப் படைத்தார். அத்தகையப் பணிகளைப் பெலித்தியர்களுக்கு எதிராக நான் செய்தேன். இப்போதே அவர் பணியில் முழுமையாக ஈடு படாததால் வானுலகம் என்னைப் புறக்கணித்துவிட்டது. கடவுளின் அழைப்பின்பேரில யாரை நான் தாக்கினேனோ அந்தக் கொடிய எதிரிகளிடம் நான் ஒப்படைக்கப்பட்டிருக் கிறேன். வானுலகால் நான் கைவிடப்பட்டேன். ஈடு செய்ய முடியாத பார்வையிழப்பால் நான் தொல்லைப்படு கிறேன். என் எதிரிகளின் வெறுப்புக்கும், கொடுமைக்கும் உரிய ஒரு பொருளாக இருந்துவருகிறேன். எனது இழப் பீடுகள் மிகுதி. அவற்றினின்றும் விடிவே இல்லை. இழந்த பார்வையை மீண்டும் பெறுவேன் என்பது அரிதானதே. அவர் எனக்கு இறப்பை விரைவில் தரவேண்டும் என்பதே எனது இப்போதைய வழிபாடு. இறப்பே என்னை வாட்டும் எல்லாக் கொடுமைகளுக்கும் ஒரே முடிவு. புண்ணிற்கு மருந்துபோல் இறப்பு மட்டுமே எனக்கு ஆறுதல் தரமுடியும்.

குழு ஆள்: துயரங்களையும், இழப்புகளையும் தாங்கும் மன வலிமையின் பெருமைகளைக் கூறும் அறிவர்களின் பொன் மொழிகள் பல பழைய புதிய புத்தகங்களில் காணலாம் எதையும் தாங்கும் நெஞ்சத்தின் பெருமைகளைப்பற்றி எல்லாக் காலத்து அறிஞர்களும் தங்கள் நூல்களில் குறிப் பிட்டுள்ளனர். பொறுமை பற்றியும் சலியாத மன வலிமை பற்றியும் சீரிய சிந்தனையாளர்கள் பாராட்டியுள்ளனர். அப்படிப்பட்ட பாராட்டுகளால் மனக்கவலைகளை மாற்றவும் துயரங்களைப் போக்கவும் முயன்றுள்ளனர். அளவிட முடியாத துயரத்தில் இருப்பவர்களுக்கு அவர்களின் கூற்று பயனற்றதே. மாறாக அது அவர்களுக்கு வெறுப்பையே ஊட்டும். இறைவன் அளிக்கும் ஆறுதல ஒன்றே அளவற்ற துன்பமுடையவர்களை ஆறுதலபடுத்தும், தேற்றும், தெளிவு படுத்தும். உண்மை ஆறுதல் வெளியிலிருந்து புகுத்தப்படுவ தன்று. தாமாகவே அவரவர் உள்ளத்திலிருந்து உருவாக வேண்டும்.

எங்கள் முன்னோர்கள் வழிபட்ட தெய்வமே! மாந்தனின் எதிர்பார்ப்புகளுக்கு எதிராக, முரணாக அவனை நீ பயன் படுத்துவதேன்? மாந்த வாழ்வு குறுகியது. எனினும் அவனது துயரங்கள் மிகுதி. தேவதூதர்களுக்கும் மற்ற விலங்கினங்களுக்கும் அளிப்பதுபோல், மாந்தனுக்கு நீ கொடுக்கும் ஆணைகள் ஒரு சீராய் இருப்பதில்லை. எவ்வித நோக்கமுமின்றி நாடோடிபோல் வாழ்ந்த அந்த மாந்தர்களை அல்ல இங்கு நாம் குறிப்பிடுவது. அவர்கள் ஈசல்களைப் போல் பிறக்கிறார்கள், வளர்கிறார்கள், மடிகிறார்கள். அவர்கள் தாங்கள் வந்த சுவடு தெரியாமல் மறைந்து விடுகிறார்கள். ஆனால் மாபெரும் பணிகளைச் செய்யவென்ற உன்னால் தெரிந்துகொண்ட மக்கள் பலர் உண்டு. அப் பணிகளைச் செய்ய உனது வரம்பெற்றவர்கள். அத்தகைய வரங்களால் உன்னால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் காக்கப் படுகிறார்கள். எனினும் அவர்கள் உன் வரங்களால், உன் பணிகளைச் செய்து புகழேணியின் உச்சியில் நிற்கும்போது அவர்கள் செய்து வந்த கடந்தகாலத் தொண்டுகளைக் கருத்தில் கொள்ளாமல் அடிக்கடி அவ் வரங்களை நீ மீளப் பெற்றுக்கொள்கிறாய்.

அப்படிச் செய்வதால் அவர்களை நீ நிலை தாழ்த்துவது மட்டுமல்லாமல், அவர்களின் பழைய நிலையினும் கீழான நிலைக்குக் கொண்டுபோகிறாய். பிறர் கண்களில் அவர்கள் தங்கள் முதன்மைச் சிறப்பு எல்லாவற்றையும் இழந்து, கீழ் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். செய்த சில தவறுகளுக்காக அவர்களை இப்படி நடத்துவது கொடுமையானது. அது மட்டுமன்று, நீ அவர்களைப் பகைவர் கையில் ஒப்புவிப்பது அதனினும் கொடியது. அப்படி ஒப்படைத்து, அவர்களின் பிணங்களை எதிரிகள், நாய் நரிகளுககும், பறவைகளுக்கும் உணவாக எறிவது அதனினும் கொடிது. நன்றிகெட்ட மக்களால் அவர்கள் ஒதுககப்படுகிறார்கள். இப்படிப்பட்ட கொடுமைகளை அவர்கள் அனுபவிப்பதைவிட, வறுமையையும் நோயையும் பெற்று முதுமை அடையா இளம் பருவத்திலேயே ஊனமுற்றுத் தொல்லையடைவது நல்லது.

உண்மையில் உனது முறை அல்லது முறையின்மை முடிவு இரண்டுமே துயருக்குரியது.

கடவுளே! உனக்காகப் பாடுபட்டவர்களை நீ இப்படி நடத்தாதே! ஒரு காலத்தில் அவர்கள் உன் உண்மை ஊழியர்களாய்ப் பெரும் பணியாற்றினர்களே! இந்த வேண்டு கோளை வீணாக்காதே! ஏனெனில் நீ ஏற்கெனவே அவனைக் (சிம்சோனை) கடுமையாகத் தண்டித்துவிட்டாய். நான் வேண்டுவதெல்லாம் அவனது இரங்க நிலையை நீ சற்று நோக்கு. இந்த அல்லலிலிருந்து அவனை அமைதி அடையச் செய். இறப்பில் அவனது துயரங்கள் முற்றுப்பெறட்டும். இதை உன்னால் செய்யமுடியும். அவ்வண்ணம் செய்யவே நாங்கள் உன்னை வேண்டுகிறோம். சிம்சோனுக்கு நீ இறப்பைக் கொடு.

ஆ! அங்கே வருவது யார்? (தீலியாள் வருவதைப் பார்த்து) அவள் நிலத்தில் வாழும் ஓர் உயிரினமா? அல்லது நீர்வாழ்வினளா? பெண்போல் தோன்றுகிறதே. ஆரவள்? அலங்காரத்துடன் மனத்துக்குகந்த தோற்றத்தில் வருகிறாள். கடலில் கப்பல் மிதந்துவருவதைபபோல் அவள் நம்மை நோக்கி நகர்ந்து வருகிறாள். சாவன் தீவுக்குச் செல்லும் தர்சூசு கப்பலைப்போல் அவள் தோன்றுகிறாள். காற்றில் விரிந்த பாய்களுடனும், படபடக்கும் கொடிகளுடனும் கப்பல் அசைந்து வருவதுபோல், மினுக்கு நடையுடனும், அழகிய ஆடை அணிகளுடனும் அவள் வருகிறாள். அவளைச் சுற்றி வெறி மணம் வீசுகிறது. பருவமடைந்த பணிப் பெண்கள் தொடர அவள் வருகிறாள். திருமணமான செலவச் செழிப்புமிக்க பெலித்திய பெண்போல் காணப் படுகிறாள். இதோ! அவள் அருகில் வந்துவிட்டாள். இப் போது அவளை நன்றாகப் பார்க்கமுடிகிறது. ஐயமின்றி அது உன் மனைவி தீலியாள்தான்.

**சிம்சோன்:** அவள் என் மனைவி அல்லள். என்னைக் காட்டிக்கொடுத்தவள். அவளை என் பக்கத்தில் வரவிடா தீர்கள்.

**குழு ஆள்:** எனினும் அவள் வருகிறாள். உன்னைப் பார்த்தவண்ணமாய் இதோ! நிற்கிறாள். பனியால் நனைந்த மலர்போல், பனித்த கண்களுடன் தலைகவிழ்ந்து நிற்கிறாள். உன்னோடு பேசவிருக்கிறாள். கண்ணீரில் கரைந்த சொற்களுடன், கண்ணீரால் முன்றானை நனைய நிற்கிறாள். உன்னோடு பேச முனைகிறாள்.

**தீலியாள்:** ஓ, சிம்சோனே! ஐயுற்ற உள்ளத்தோடும், மனவுறுதி இன்றியும் உன்னைக் காண வந்திருக்கிறேன். எனது வருகை உனக்கு வெறுப்பூட்டுமோ என அஞ்சுகிறேன். என் மீது உனக்குள்ள வெறுப்பு முறையானதே. அதற்காக உன்னிடம் நான் மன்னிப்புக் கேட்கப்போவதில்லை. இருப்பினும், என் குற்றத்தைக் கண்ணீர் சிந்திச் சரிசெய்ய நினைக்கிறேன். எனது செயல் நான் எதிர்பார்க்காத தீங்கினை விளைவித்துவிட்டது. எனது மனமாற்றத்துக்குரிய மன்னிப்பு எனக்கு இங்கு உறுதியில்லை. எனினும், எனது மனமாற்றம் காலம் கடந்ததன்று என்று கூறமாட்டேன். கணவன் மனைவியை இணைக்கின்ற அச்சத்தை விஞ்சிய அன்புதான் இங்கே உன்னை மீண்டும் ஒருமுறை காணவும், உன் நிலையைத் தெரிந்துகொண்டு போகவும் வரச்செய்தது. என் ஆற்றலுக்குட்பட்ட முயற்சிகள் ஏதேனும் உன் அல்லலைக் குறைக்கவும், மன ஆறுதல் அடையவும் செய்யுமாயின், அதை என் முழு மனத்தோடு செய்ய முயல்வேன் காலம் தாழ்த்தி வந்தாலும் நான் எதிர்பார்க்காத அளவுக்குத் தீய செயலால் ஏற்பட்டிருக்கிற உனது துன்பத்தையும், துயரையும் முடிந்தவரை ஈடுசெய்ய முயல்வேன்.

**சிம்சோன்:** விலகிப்போ, வஞ்சகியே! கழுதைப்புலியே, விலகிப்போ. இவை உன கைவந்த கலைகள். கணவனை வஞ்சிக்கும் பொய்யான பெண்களின் இனமொழிகள் இப்படிப்பட்ட பொய்யான பெண்கள் உண்மையில் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்பதுபோல் கேட்பார்கள். மனமாற்றம் அடைந்ததுபோல் நடித்து மன்னிப்புக்கேட்பார்கள். அற்புத மாற்றம் அடைந்த பெண்ணாய் எதிர்காலத்தில் இருப்பதாக உறுதி கூறுவார்கள். அப்படிப்பட்ட பெண்கள் மனம்

மாற்றமுடையவர்கள் அல்லர். தங்கள் கணவர்களின் பொறுமையைக் காண்பதே அவர்களின் முதல் நோக்கம. எப்படிக் கவர்ச்சியாகத் தந்திரமாகத் தம் கணவர்களின் இயலாமை அல்லது நற்பண்பைத் தாக்குவது என்பதே அவர்களின் தலையாய நோக்கம். மீண்டும் கணவனின் கழுக்கத்தை மேலும் அறிந்து காட்டிக்கொடுக்கவே அவர்கள் முயல்வார்கள். மனம் வருந்தி மன்னிப்புக் கோருபவர்களை மன்னித்தல் வேண்டும் என்று சொல்லும் அறிவர்கள்கூட இப்படிப்பட்ட பெண்களால் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். மன்னிக்கப்பட்டுத் தங்கள் கணவர்களை மனத்தால் விரும்பி வந்த மனைவியர் நச்சுப் பாம்பாய்த் தம் கணவர்களுக்குத் தீங்கு விளைவித்துள்ளனர். அப்படிப்பட்ட நச்சு மனம் கொண்ட பெண்களின் பிடியிலிருந்து தப்பமுடியாமல் கணவன்மார் தொல்லைப்பட்டுள்ளனர். இப்படிப்பட்டவர்கள் தங்கள் வாழ்க்கையை வருங்கால மரபினர்க்கு ஒரு முன்னறிவிப்பாய் அமைத்துள்ளனர். எனது வாழ்வும்கூட எதிர்கால மரபுக்கு அப்படிப்பட்ட முன்னறிவிப்பாய் அமைந திருக்கிறது.

தீலியாள்: சிம்சோனே, கேள். மன்னிப்புக்கேட்டு, என் தவற்றின் கடுமையை நான் குறைக்க முயலவில்லை. என் குற்றங்கள் மிகைப்படுத்தப்படாமல் சீர் தூக்கப்படின் என்னை மன்னிக்கும் மனநிலை உங்களுக்கு ஏற்படலாம் அல்லது என் மீது வெறுப்பாகிலும் குறையலாம். எனது தவறு பொதுவாக ஒரு பெண்ணின் குறைபாட்டால் ஏற்படுவது. தங்கள் கணவர்களின் கழுக்கங்களை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் பொதுவாக எல்லாப் பெண்களுக்குமே உரியது தான். ஆனால் அதே பெண்மைக்குரிய குறை அதை வெளிப் படுத்தி விடுகிறது. இவ் விரண்டு குறைகளும் பெண்களுக்குப் பொதுவானவை. அது என்னிடத்திலும் இருக்கிறது. ஆகவே நான் குற்றவாளிதான். ஆயினும் எனது வற்புறுத் தலுக்கு இணங்கி உங்கள் வலிமையின் கழுக்கத்தையும் பாது காப்பின் கழுக்கத்தையும் வெளிப்படுத்தியது உங்கள் குறை அல்லவா? உங்கள் கழுக்கத்தை என்னிடம் வெளியிட்டதுன்

வழி அதனை நான் பிறர்க்கு வெளியிட நீங்களே எனக்கு வழி காட்டி. ஆனால் நீங்கள் உங்கள் கமுக்கத்தை உங்களுடைய மனைவியிடம் வெளியிட்டீர்கள். ஆனால் நானோ பகைவர்களுக்கு அதை வெளியிட்டுவிட்டேன். குறைபாடான இயல்புடைய பெண்ணிடம் நீங்கள் உங்கள் கமுக்கத்தை வெளியிட்டிருக்காது இருந்திருந்தால், நான் அதனை வெளியிட்டிருக்கமாட்டேன். நான் உங்களுக்குக் கொடியவளாகு முன்னே, நீங்களே உங்களுக்குக் கொடியனாகிவிட்டீர்கள். எண்ணிப்பார்த்தால் எனது குறை உங்கள் குறைபாட்டைப் போன்றதே. அவை ஒன்றோடொன்று தொடர்புடையவை. ஆகவே, நீங்களே குறைபாட்டோடு இருந்தீர்கள் என்ற எண்ணம் என் குறையை மன்னிக்கும்படி செய்யட்டும். எனவே உங்கள் குறைபாட்டையும் மக்கள் பரிவோடு ஆய்ந்து முறைசெய்வார்கள். நீங்கள் என்னிடம் கடுமையாக நடந்து கொள்ளாமல் இருந்தால் மக்களும் உங்களிடம் கடுமையாக முறைதீர்க்கமாட்டார்கள். என்னுடைய செயல்கள், அன்பினால் விளைந்தனவே அன்றி வெறுப்பினால் அல்ல என்று கருதுங்கள். அன்புள்ள நெஞ்சத்தைத் தடுமாறச் செய்யும் ஆற்றல் பொறாமைக்கு உண்டு. உங்களிடத்தில் எனக்கிருந்த அன்பு என்னைத் தடுமாறச் செய்துவிட்டது. உங்களிடம் கொண்ட அளவற்ற அன்பே நான் அப்படிச் செய்யும்படி என்னைத் தூண்டிவிட்டது. அன்பில் நீங்கள் நிலையாக இல்லை. திம்னாவில் நீங்கள் மணந்துகொண்ட உங்கள் முதல் மனைவியைவிட்டு சில நாள்களிலேயே பிரிந்து சென்றது போல் என்னைவிட்டும் நீங்கள் பிரிந்துவிடுவீர்களோ என ஐயப்பட்டேன். எப்படியேனும் என்னோடு உங்களை எப்போதும் வைத்துக்கொள்ள வேண்டும் என்று முயன்றேன். உங்கள் வலிமையின் கமுக்கத்தை வற்புறுத்தித் தெரிந்து வைத்துக்கொண்டு அதன்மூலம் உங்களை என்னோடு இணைத்துக்கொள்வதைவிட வேறு சிறந்த வழி எனக்குத் தோன்றவில்லை.

நீங்கள் வினவலாம், உங்கள் பகைவர்களிடம் ஏன் அந்த கமுக்கத்தை வெளியிட்டேன் என்று. நான் உங்களுக்குச்

சொல்வேன், அவர்கள் உங்களைக் கைதியாகத் தங்கள் மேற்பார்வையில் வைத்திருப்பதைத் தவிர வேறு எந்தத் தீங்கும் உங்களுக்குச் செய்யாதிருப்பதாக உறுதியளித்தார்கள். அந்த உறுதிமொழிகள் எனக்கு ஆதரவாயின. நீங்கள் உரிமையுடன் இருந்தால் பல இடர்களை ஏற்க நேரிடலாம். என்னைத் துயரத்தில் தவிக்க விட்டுவிட்டு நீங்கள் சென்று விடலாம் என்று எண்ணினேன். உங்கள் உடல் வலிமை உங்களிடமிருந்து எடுக்கப்பட்டுவிட்டால், மறச்செயல்களை நோக்கி வெளியே செல்லமாட்டீர்கள் என்று எண்ணினேன். உங்கள் அன்பை அதன்மூலம் இரவும் பகலும் துய்க்கலாம் என்று நினைத்தேன். அதன்பின் நீங்கள் என் அடிமையாய், நீங்கள் வெறுக்கின்ற பெலித்தியர்களின் அடிமையாய் இல்லாமல், எனது அன்பின் அடிமையாய் வாழ்வீர்கள் என்று நினைத்தேன். நீங்கள் என் விலைமதியா உடைமை. தொலை விடங்களுக்குச் சென்று தொல்லையான பணிகளில் உங்களைத் தோயச்செய்து உங்களை நான் இழக்க விரும்பவில்லை. வீட்டிலேயே உங்களை வைத்துக்கொள்வதின்மூலம் நான் பிரிவுத் துன்பமோ அச்சமோ இன்றி இருக்கலாம் என்று எண்ணினேன். மற்றவர்களுக்கு இந்தக் காரணங்கள் பொருந்தாதனவாக, மடமையாகத் தோன்றினாலும் எனது காதல் பார்வைக்கு அவை ஆழமாகப்பட்டன. நல்லெண்ணத்தோடு கூடிய காதல்கூடச் சிலவேளைகளில் கடுமைகளை ஏற்படுத்துவதுண்டு. ஆனால் அவை பரிவையும், மன்னிப்பையும் பெறுவதுண்டு. மற்றவர்களைப்போல் அல்லாமல், உங்கள் வலிமை உறுதியைப்போல் என்னிடத்தில் கடுமையாக இராதீர். நீங்கள் உடல் வலிமையில் மற்றவர்களை மிஞ்சியவர். இரக்கமற்ற தன்மையிலும் மற்றவர்களை விஞ்சிட முயல வேண்டா.

சிம்சோன்: உனது தண்புனற் பேச்சு எவ்வளவு தந்திரமுள்ளது. என் குறையைச் சுட்டிக்காட்டி எனக்குச் சினமூட்டவே, அவள் தன் குறையை ஒத்துக்கொள்கிறாள். மனம் வருந்தித் திருந்தியன்று; என்மீது வெறுப்புள்ளவளாகவே, அவள் இங்கே வந்திருப்பதாகத் தோன்றுகிறது.

உனது தவற்றுக்கு வழிகாட்டியாய் நான் முதலில் தவறு செய்தேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அது ஒரு கசப்பான உண்மையே, எனினும் ஏற்றுக்கொள்கிறேன். நீ என்னை ஏமாற்றுமுன், நானே என்னை ஏமாற்றிக்கொண்டேன். நான் என் தவற்றை மன்னிக்கவில்லை. மாறாக என்னுடைய தவற்றுக்காய் நான் என்னையே வெறுக்கிறேன். எனவே உனக்கு நான் தர நினைக்கும் மன்னிப்பு, எனக்கு நானே கொடுத்துக்கொண்ட மன்னிப்பைப்போல் கொடுமையாக நடுநிலைமையாய் இருக்கும். உனது மனமாற்றம் பொய்யாய் வஞ்சகமாய் இருப்பதால், எனக்கு நானே கொடுத்துக் கொண்ட இந்தக் கடுமையான மன்னிப்பு, இந்த உனது மன மாற்ற நாடகத்தைக் கைவிட்டு விடும்படி செய்துவிடும். நீ குறையுடையவள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். பெலித்தியர்களின் செம்பொன் உன் மனதைக் கட்டுப் படுத்தமுடியாமல் செய்துவிட்டது. அவ்வளவு குறையுடை யவள் நீ என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

குறைபாடே, மன்னிப்புக்குரிய காரணமாயின், கொலை காரர்கள், காட்டிக்கொடுப்பவர்கள், தங்கள் தந்தையரைக் கொல்பவர்கள், பொருந்தா உடலுறவு கொள்பவர்கள், புனிதமானவற்றை மாசுபடுத்துபவர்கள், அனைவருமே தங்கள் குறையேதான் தங்கள் தவறுதலுக்குக் காரணம் என்று கூறி மன்னிப்புக் கோரலாமே. எனவே குறைபாடு என்று மன்னிப்புக்காக நீ சொல்லும் காரணம் உனக்கு மாந்தனிடமிருந்து மட்டுமன்று, கடவுளிடமிருந்துகூட மன்னிப்பைப் பெற்றுத் தராது.

அன்பினால் என்னை நீ காட்டிக்கொடுத்தாய் என்பது உனது இரண்டாவது மொழி. அது காதல் அன்று, காமம். உனது காமப்பசியைப் போக்கவேண்டும் என்ற ஆசை. காதல் தனக்கு மாற்றாகக் காதலையே தேடும். வேறு எதை யும் நாடாது. அகற்றமுடியாத வெறுப்புக்குரிய உன்னை நான் விரும்புவேன் என்று எப்படி நீ நம்புகிறாய்?

என்னை நீ காட்டிக்கொடுத்தாய் என்பதை நான் அறிந்த பின்னும், உன்னை நான் வேட்பேன் என்று எப்படி நம்புகிறாய்?

வெட்கக்கேடான ஏதுக்களைச் சொல்லி வீணில் உன் தவற்றை மறைகக முயல்கிறாய். உன் வஞ்சகச் செயலை முறைப்படுத்த முயல்வதின்மூலம் உன் தவற்றை நீ தெளிவுபடுத்துகிறாய்.

தீலியாள்: ஆணோ பெண்ணோ, எவராயினும் குறைபாடு அவர்கள் செய்த தவற்றுக்கு மன்னிப்பளிக்கத்தக்க காரணம அல்ல என்று நீங்கள் நினைப்பதால், நான் அவர்கள் திட்டத்திற்கு இணங்குமுன் எப்படியெல்லாம் அதைச் செய்யுமாறு தூண்டபபட்டேன் என்றும், என்னென்ன வழிகளில் அவர்கள் முயன்றார்கள் என்பதையும், எனக்கு ஆசையூட்டி அடிபணியச்செய்ய அவர்கள் கையாண்ட வழிகளையும் உனக்குச் சொல்ல வாய்ப்பளி! என்னைக் கலக்கப் படுத்த அவர்கள் ஆற்றல்வாய்ந்த வழிகளைப் பின்பற்றினார் கள. செம்பொன்னுக்காக உங்களை நான் காட்டிக்கொடுக்க வில்லை. என் நாட்டின் அறவாணாகளும் இளவரசர்களும் என்னை அணுகினர். முதலில் இந்தப் பணியைச் செய்யும்படி வேண்டினர். பின் ஆணையிட்டனர், அச்சுறுத்தினர், சீற்ற மூட்டினர். பின் என் நாட்டிற்கும், என் மதத்திற்கும் நான் செய்யவேண்டிய கடமைகளைச் சுட்டிககாட்டி வேணடினர். எண்ணற்ற பெலிததியர்களைக் கொன்று குவித்த சிம்சோனை வீழ்த்துவதைவிடப் பெருமைக்கும், நற்புகழ்க்கும் சிறப்புக் கும் உரிய வேறு பணி இருக்கமுடியாது என்றுரைத்தனர். தங்கள் கடவுள் வருணனை இழிவுபடுததிய சிம்சோனைச் சிக்க வைக்க நான் அவர்களுக்கு உதவினால அது கடவுளுக்கு உகந்த தாகக் கடவுள் பார்வைக்குச் சிறந்த செயலாக இருக்கும் எனச் சொல்லி என்னைத் தூண்டினர். இந்த ஆற்றல் வாய்ந்த சொற்களை எதிர்ததுரைக்க, எதிர் நிற்க என்னிடம் ஆற்றலில்லை. உங்கள் பொருட்டு உங்கள்பால் நான் கொண்ட காதலால என்னுள் ஒரு பெரும் போராட்டமே ஏற்பட்டது. இறுதியில் எங்கும் எபபோதும் பேசப்பட்டு, நன்கு நிலை நாட்டப்பட்ட கொள்கையாகிய பொதுநலனுக்காகத் தன்னல த்தைத் துறக்கும் முடிவுக்கு வந்தேன். என் கடமை, உணமை, நற்குணம் அனைத்தும் உங்களைக் காட்டிக் கொடுக்கச் செய்தன.

சிம்சோன்: சுற்றி வளைத்துப் பேசிய உன் வீண் பேச்சு இறுதியில் மதத்தில் வந்து முடியும் என்று நான் முன்பே நினைத்தேன். அப்படியே முடிந்துவிட்டது. உனது மத வேண்டுகோள் ஓர் அப்பட்டமான இரண்டகம். ஆனால் நீ என்மீது கொண்டிருப்பதாகக் கூறிய அந்த உண்மை அன்பு, வேறு விதமாக உன்னைச் சிந்திக்கவும் செயல்படவும கற்பிக்கவில்லையா? நான் உன்னை உண்மையாய் விரும்பினேன். என் இசுரவேலின் இளம் பெண்களை நான் தேர்ந்தெடுக்கவில்லை. மாறாக, என் பகை இனத்துப் பெண்ணாகிய உன்னை என் மனைவியாய்த் தேர்ந்தெடுத்தேன். இவையெல்லாம் உனக்கு நன்கு தெரியும். உன்மீது கொண்ட காதலால் என் ஒளிவு மறைவு அனைத்தையும் உன்னிடம் நான் ஒப்படைத்ததினால் இந்த உண்மையையும் நீ நன்கறிவாய். வேறு எவ்வகை எண்ணத்திற்கும் இடமளிக்காமல உன் வற்புறுத்தலுக்கு இணங்கினேன். உனக்கு எதையும் மறுக்காத நான், இன்று எதிரியின் கைகளில் இத்தகைய இடர்ப்பாடான நிலையில் இருக்கிறேன். தொடக்கமுதலே பெலித்தியர்களின் பகையாகக் குறிக்கப்பட்ட என்னை ஏன், நீ கணவனாய்த் தெரிந்து கொண்டாய் என்பதை எனக்குச் சொல். எனக்கு மனைவியானவுடனேயே உன் பெற்றோர்களையும், நாட்டையும் நீ துறந்திருக்கவேண்டும். நான் அவர்களின் அடிமையல்லேன். அவர்கள் பாதுகாப்பில் உள்ளவனும் அல்லேன். நானே எனது உயிரின் ஆண்டை. நீ எனது ஆளுகைக்குட்பட்ட குடிமகள். அவர்களுடைய மகளல்லை. என் வாழ்வுக்கெதிராக, உன் உதவியோடு ஏதேனும் செய்ய விரும்பியிருந்தால், அது இயற்கை விதிக்கு முரணானது. நாட்டின் சட்டங்களுக்கும் அப்பாற்பட்டது. ஒரு மனைவி தன் கணவனுக்கு மட்டுமே பற்றுள்ளவளாக இருக்கவேண்டும். அவர்கள் உன் நாட்டு மக்களல்லர். அவர்களை, ஒருவனின் மனைவியை, அவளின் கணவனைக் காட்டிக்கொடுக்கும்படி வற்புறுத்திய மக்களை, கடமைத் தவறிய பற்றற்றவர்களாய் நடத்தியிருக்க வேண்டும். நீயோ அவர்களுக்கு இணங்கினாய். இது பகைமையினும் கீழான பண்பற்ற செயல். எங்கள் நாட்டிலே மேன்மையாகக் கருதப்படுகின்ற சட்டங்களை அவர்கள்

மீறிவிட்டனர். நீ அவர்களுக்கு இணங்கியிருக்கக் கூடாது. அடுத்து நீ உங்கள் மழைத் தெய்வத்தை மகிழ்ச்சிப்படுத்த இந்த வஞ்சகத்தை நீ புரிந்ததாய் மொழிந்தாய். கடவுளுக் கேற்ற வழிகளை விடுத்து, ஒவ்வாத கயமைப் பாதையில தன் எதிரிகளைத் தாக்க முயல்வது, உங்கள் தெய்வங்கள் கையாலாகாதவர்கள் எனக் காட்டுகின்றது. அத்தகைய செயல்கள் தெய்வத்தன்மைக்கு எதிரானவை. அவர்கள் கடவுள்கள் அல்லர். அத்தகைய கடவுள்களைக் கண்டு அஞ்சவோ அடங்கவோ தேவையில்லை. உனது மனமாற்ற நாடகமும், பொய்யான காரணங்களும் தோற்றுபோய் விட்டன. அவற்றின் பொருளற்ற வெற்றுத்தன்மை வெளிப் பட்டுவிட்டது. உனது குற்றத்தின் சாக்குப் போக்குகளும் அருவெருப்பும் வெறுத்துவிட்டன. இப்போது நீ மிகவும் கொடியவளாய்த் தோன்றுகிறாய்.

தீலியாள்: என்னதான் தருக்கினாலும் தருக்கில் ஆண், பெண்ணை வென்றுவிடுகிறான்.

சிம்சோன்: சொற்கள் இன்மையாலோ ஆர்வம் இன்மை யாலோ ஒரு பெண் தன் நோக்கத்தை இழந்துவிடலாம். ஆனால் நீ உன் வற்புறுத்தலினால் என்னைத் துன்புறுத்திய விதம் பெண்மையின் வாக்குத் திறமைக்கு ஒரு வலுவான சான்றாகும்.

தீலியாள்: நான் ஒரு முட்டாள். விளைவுகளைப் புரிந்து கொள்ளவில்லை. நான் பின்பற்றிய வழிகளிலும், எடுத்துக் கொண்ட முடிவிலும் நான் விரைவுற்றேன். சிம்சோனே! என்னை மன்னித்துவிடு. பிறரால் தவறாக வழிநடத்தப்பட்ட போது, நான் செய்த தவறுகளுக்காய் எப்படி ஈடுசெய்ய விழைகிறேன் என்பதைக்காட்ட எனக்கு ஒரு வாய்ப்பைக் கொடு. நடந்துபோனவற்றுக்காய்ப் பரபரப்படையாதே. உன்னுடன் இருந்து துன்புறுத்தும் துயர்களை ஆற்றும் மருந்தோ தீர்வோ இல்லை. நீங்கள் பார்வையிழந்திருப்பினும் வாழ்க்கையில் ஆறுதல் அடைய வேறு பல வழிகளுண்டு. உங்களின் மற்ற உறுப்புகள் வாழ்வைச் சுவைக்க முடியாத படி செயலிழந்துபோகவில்லை. இல்லற இன்பத்தைச் சுவைக்க

முடியும். வீட்டில் சொத்துடன் வாழமுடியும். புற வாழ்வில் கவலைகள், இக்கட்டுகள் நீங்கள் பார்வையின்றி யிருப்பதால் இனி ஏற்படா. பெலித்திய ஆண்டைகளிடம் சென்று பரிந்து பேசப்போகிறேன். அவர்கள் என் வேண்டுகோளுக்கு இசைவார்கள். இந்தச் சிறையிலிருந்து விடுவித்து, என்னோடு வாழ உங்களை அழைத்துச் செல்லமுடியும் என்று நம்புகிறேன். அங்கே இரட்டிப்பு அன்புடனும், பரிவுடனும் உங்களைக் காக்கமுடியும. அது ஒன்றே இப்போது எனக்கு மகிழ்வுதரும் பணியாக அமையும். என் இரட்டிப்பு அன்பி லும், அரவணைப்பிலும், காப்பிலும், என்பொருட்டுத் தாங்கள் இழந்த உங்கள் பார்வையின்மையை உணர மாட்டீர்கள்.

சிம்சோன்: இல்லை, இல்லை. என் இப்போதைய நிலை பற்றிக் கவலைப்படவேண்டா. அது முறையானது அன்று. நீயும் நானும் பிரிந்து வெகுகாலமாயிற்று. இனி இணைவதற்கு நேரமுமில்லை. பொருந்தமானதும் இல்லை. ஏற்கெனவே வீழ்ந்த வஞ்சக வலையில் விழிப்பின்றி மீண்டும் விழுவேன் என்று எண்ணவேண்டா. உன் கவர்ச்சியான வழிகளும், போதையூட்டும் இதழ்களும், இனிய மொழிகளும் இப்போது என்னை வெல்லமுடியா. என்னைப் பொறுத்தமட்டில் அவை கவர்ச்சியை இழந்துவிட்டன. பாம்பின் பண்பை நான் கற்றிருக்கிறேன். உனது மயக்கும் மொழிகளுக்கு என் செவி கள் மூடப்பட்டுவிட்டன. நான் இளமையோடு இருந்த போது, எல்லோரும் என் ஆண்மையைப் பாராட்டி, பயந்து, சிறப்பித்து நின்றபோது, என்னை நீ மட்டுமே வெறுத்தாய். நீ மட்டுமே என்னை மதியாமல் நிலைதாழ்த்தி, விற்றுவிட்டாய். உன்னால் பார்வையிழந்து ஆதரவற்ற குழந்தைபோல், எளிதாக ஏமாறச் செய்து, சினமூட்டி, ஒதுக்கப்பட்ட என்னை இப்போது மட்டும் எப்படி நடத்திவிடப் போகிறாய்? உன்மீது கொண்ட அளவற்ற ஆசையினால் வாழத்துடித்த உன்னையே முற்றும் நம்பியிருந்தேன் ஆனால் நீயோ என்னை அடிமையாய் மானக்கேடு செய்துவிட்டாய். மீண்டும் நான் எப்படி உன்னால் வஞ்சிக்கப்பட முடியும். ஏற்கெனவே என் சொற்

களையும், செயல்களையும் பெலித்தியர்களிடம் வெளியிட்டு, அவர்கள் என்னை எள்ளலாய்க் குத்தலாய்ப் பேசவும் செய்து விட்டாய். உன்னிடம் அடிமைபோல் வாழ்வதைவிட, இச் சிறை வாழ்வை உரிமை வாழ்வாய்க் கருதுகிறேன். உனது இல்லத்தில் இனி அடியெடுத்து வைக்கமாட்டேன்.

தீலியாள்: உங்கள் அருகில் வரவும், கைகளைத் தொடவும் வாய்ப்பளியுங்கள்.

சிம்சோன்: உன் உயிரின்மீது உனக்கு அக்கறையிருந்தால், என்னை நெருங்காதே! எனக்கு நீ இழைத்த கொடுமைகளின் நினைவு என் சீற்றத்தைத் திடீரென்று கிளறினால், உன்னைத் தும்பு தும்பாய்க் கிழித்தெறிந்துவிடுவேன். என்னை விட்டு விலகி நிற்கும்வரை உன் குற்றங்களை நான் மன்னிப்பேன். இந்த மன்னிப்போடு, என்னைவிட்டு விலகிப்போ. மதப்பற்றினால் நீ இழைத்த வஞ்சகச் செயலை நினைத்து வருந்து. அது உன் பெயரை நல்ல மனைவியர் பட்டியலிலே சேர்க்கும். கணவனைக் காட்டிக்கொடுத்த இழிசெயலால வாழ்வின் தொடக்கத்திலேயே நீ கைம்மை யாக்கப்பட்டாய். உனது வஞ்சகச் செயலால் உனக்குக் கிடைத்த நன்மைகளோடு, உன் கைம்மை நிலையை எண்ணி ஆறுதல் பெறு. இப்போது நீ போகலாம். விடை தருகிறேன்.

தீலியாள்: நீங்கள் ஆறுதல் அடையப்போவதில்லை. காற்றும் கடலும் ஒன்றோடொன்று மோதுவதாகத் தோன்றிடினும் அவை ஒன்றுடன் ஒன்று இணைகின்றன. ஆனால் உங்களிடத்தில எனது விண்ணப்பங்கள் பயனற்றுப் போய் விட்டன. காலப்போக்கில் காற்று கடலுடனும், கடல் கரையுடனும் இசைகின்றன. ஆனால் தாங்கள் இசைவதாய் இல்லை. உங்கள் சினம் புயல்போன்றது. அது தணிவதே இல்லை. நான்மட்டும் ஏன் என்னையே இழிவுபடுத்திக்கொள்ள வேண்டும்? இருவருக்கும் இடையே இசைவு ஏற்படுத்த முயன்று உங்களிடமிருந்து வெறுப்பைத்தவிர வேறொன்றையும் என்னால் பெறமுடியவில்லை. உங்களின் அமங்கலமான மொழிகளோடு விலகிச் செல்வதுதான், என் முயற்சியின் பயனாய் எனக்குக் கிடைத்த பரிசு. உங்களுடன் பங்கேற்பதை

நிறுத்திக்கொள்கிறேன். இனி நான் எனது செயலுக்காய் என்னை நானே ஒதுக்கித் தள்ளமாட்டேன். உரோமக் கடவுள் 'செனச்சு' போல் புகழுக்கு இரண்டு முகங்கள் உண்டு. ஒரு சமயத்தில் ஒரு நாட்டவரால் புகழப்படுகின்ற ஒரு செயல் மற்ற நாட்டவரால் இகழப்படுவது உண்டு ஒரே செயல் ஒரு பக்கத்தில் புகழ்ச்சியையும் மறு பக்கத்தில் இகழ்ச்சியையும் ஏற்படுத்துவதுண்டு புகழுககு இரண்டு இறக்கைகள் உண்டு. ஒன்று கறுப்பு. மற்றொன்று வெள்ளை. அந்த இரண்டு சிறகுகளால் புகழென்னும் பறவை உலகெலாம் சுற்றித் திரிய முடியும். எனது பெயர் ஒருவேளை யூதேயா நாட்டில் வாழும் இசுரவேல் மக்களிடமும் எபிரேயர் களிடமும், அவர்களின் மரபினர்களிடமும் இழிவாகப் பேசப் பட்டு நான் பழிக்கப்படலாம். எனது செயல் ஒரு பற்றுள்ள மனைவி தன் கணவனுக்குச் செய்யக்கூடாத பொருத்தமற்ற செயலாகக் கருதப்பட்டு நான் பழிக்கப் படலாம். ஆனால், எனது தாய்நாட்டின் எக்ரான், காசா, அசுடாடு ஆகிய இடங்களில் எனது பெயர் புகழப்படும். இல்லற வாழ்வையே நாட்டின் நலனுக்காய் அளித்த அற்புதப் பெண்மணியாய் ஈகச்சுடராய் நான் வாழ்த்தப்படுவேன். தன் நாட்டை அழிக்க முயன்ற கொடிய அரக்கனிடமிருந்து மீட்டுத் தன் இல்லற இன்பத்தை மறந்து, நாட்டைக் காத்த உயரிய பெண்மணி என்று எனது பெயர் சிறப்பு விழாக்களிலே புகழ்ந்து பாடப் படும. எனது நாட்டு மக்கள் ஒவ்வோர் ஆண்டும் மணமுள்ள பொருள்களோடும், மலர்களோடும் என் கல்லறைக்கு வந்து என்னைச் சிறப்பிப்பர். துயிலும் சிசராவின் கோயில்களில் ஆணியறைந்த 'செயல்' போல் நானும் புகழப்படுவேன், எனது நாட்டுப் பற்றுக்காய், எனக்குக் கொடுககப்பட்ட நன் கொடையையும், புகழையும் நுகர்வதைப் பெரிய பழியாய் எண்ணமாட்டேன். இதனை யார் வெறுத்தாலும், இதனால் யார் மானக்கேடு அடைந்தாலும், அவர்களை அவர்களின் விதிக்கு ஒப்படைத்துவிட்டு, என் விதியை ஏற்றுக் கொள்வேன்.

குழு ஆள்: அவள் சென்றுவிட்டாள். பாம்புபோல், தன் நச்சுப் பல்லினைக் காட்டிச் சென்றுவிட்டாள்.

**சிம்சோன்:** அவள் போகட்டும். அவள் தன்னை யாரென்று காட்டிவிட்டாள். என்னைத் தாழ்த்தவும், என் மடமையைப் பெருக்கவுமே கடவுள் அவளை அனுப்பியுள்ளார். எனது வாழ்வை, பாதுகாப்பை, பரம்பொருள் மறையை ஒரு நச்சுப் பாம்பிடம் வெளிப்படுத்தியதின் விளைவே இது.

**குழு ஆள்:** எழிலுள்ளவள் எனினும் இடருள்ளவள் வெறுத்தொதுக்கிய காதலை மீண்டும் பெறுகின்ற ஆற்றலுள்ளவள். அவள் வேண்டுகோள், கவர்ச்சி ஆகியவற்றை எளிதில் புறக்கணிக்க முடியாது.

**சிம்சோன்:** காதலர்களிடையே ஏற்படுகின்ற பிணக்கு முடிவில் இனிதாய்ப் புதிய உந்தாற்றலோடு காதலர்களை இணைக்கும். திருமண வாழ்வில் வஞ்சகமோ, ஒருவருக்கு இடரை விளைவிக்குமே அன்றி, இனிதாய் முடிவதில்லை.

**குழு ஆள்:** நற்பண்பு, அறிவு, ஆற்றல், வலிமை, அழகு, சிறப்பு இவற்றுள் எதுவாலும் பெண்ணின் காதலைப் பெறவோ, நிலைநிறுத்தவோ முடியாது. பெண்ணின் காதலைக் கணிப்பது கடினமானது. ஒருநாள் இல்லை பல நாள் முயன்றாலும் ஆடவரால் பெண்ணின் காதலின் கமுக்கத்தை அறிய முடியாது. அது நீங்கள் பெலித்தியர்களிடம் சொன்ன புதிர் போன்று புரியாத ஒன்று. மேலே கூறப்பட்ட இயல்புகளோ இயற்கையோ பெண்ணின் காதலைப்பெற வல்லதாயின் உமது பெலித்திய மனைவியர் திருமண வாழ்க்கை ஒப்பந்தத்தை இவ்வளவு எளிதில் உடைத்திருக்க மாட்டார்கள். உம்மோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது எவ்விதச் சிறப்பும் இல்லாத உம் நண்பரை உமக்கு மாற்றாக உம் முதல் மனைவி மணந்திருக்கமாட்டாள். உம் இரண்டாவது மனைவியும், உமது குடுமியை வஞ்சகத்தால் பிரித்திருக்க மாட்டாள். இந்த இழப்பு உமக்குப் பேரிழப்பாய் மாறி விட்டது. உள்ளழகு, நற்பண்பு, நல்மனம், நல்லெண்ணம் இவை இல்லாமையால்தான் பெண்களுக்குப் புற அழகு கொடுக்கப்பட்டதோ? ஒருவேளை ஆண்டவன் பெண்களைப் பரபரப்பில் அரைகுறையாய்ப் படைத்துவிட்டானோ? எனவேதான் நன்மைக்கும் தீமைக்கும் அவளால் வேறுபாடு காண

முடியவில்லைபோலும். எதையும் புரிந்துகொள்கின்ற திறன் அவளுக்கு இல்லை. எனவேதான் நல்லதைவிடத் தீயவைக்கே அவள் இணக்கம் காட்டுகின்முள். அவள் தன்னல அன்பு கொண்டவள். எனவேதான் அவள் அன்பு நிலையற்றதாய்க் காணப்படுகின்றது. அவள் எதையும் நீண்ட நாள் விரும்புவ தில்லை.

காரணம் எதுவாயினும், அறிவர்களுக்கும், நற்பண் பாளர்களுக்கும்கூட அவர்கள் தொடக்கத்தில் அழகுள்ளவர் களாய்க் கற்புள்ளவர்களாய்த் தோன்றுகிமுர்கள். அவர்கள் கறைபடாதவர்களாய்க் கன்னியாய், அடக்கமுடையவர் களாய், அறிவுள்ளவர்களாய் இனிமையும், இளகிய நெஞ்சு முள்ளவர்களாய் முதலில் தோன்றுகின்றனர். திருமணத் திற்குப் பிறகு இவற்றுக்கு எதிராய் மாறிக் குடும்பத்தின் மகிழ்ச்சியின்மைக்குக் காரணங்களாக ஆகிமுர்கள். திரு மணத்திற்குப்பின் தவிர்க்கமுடியாத தீங்காய் விளங்குகின்ற னர். கீழ்ப்படியாமை உடையவர்களாகிவிடுகின்றனர். பெண் தனது புற அழகால் ஆணை வீழ்த்தி முன்னேறவிடாமல் தடுத்துவிடுகிமுள். அவனை அழிவுக்கு இழுத்துச் செல்கிமுள். ஆடவன் அவளுக்கு அடிமையாகி, மானக்கேட்டுக்குரிய பல செயல்களைச் செய்துவிடுகிமுன். ஒரு கப்பல் தலைவன் எவ் வளவுதான் சிறந்தவனுய் இருந்தாலும் மீகாமன் சரியாக அமையாவிட்டால் அக் கப்பலை அழிவிலிருந்து காப்பாற்ற முடியாது. அதைப்போல் ஓர் ஆடவன் எவ்வளவுதான் சிறந் தவனுக இருந்தாலும், மனைவி சரியாக வாய்க்காவிட்டால், அவனுல் அவனது அழிவைத் தடுத்து நிறுத்தமுடியாது.

நல்ல மனைவி அமைவது அரிதே. நல்ல மனைவியை உடையவன் பேறுபெற்றவன். அவன் இனிய குடும்ப வாழ்வு நடத்துவான். அவனது வாழ்வில் அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் இடையூறு ஏற்படுவதில்லை. எதிர்ப்புகளையும் கலக்கங்களையும் தாண்டி வென்று நிற்கின்ற கடவுளால் ஏற் றுக்கொள்ளக்கூடியது. ஆகவேதான் கடவுள் ஆடவனுக்கு அவன் தன் மனைவியை அடக்கியாளும் வல்லாண்மையைக் கொடுத்துள்ளான். கணவன் தன் அதிகாரத்தை மனைவிக்கு

ஒருபோதும் விட்டுக்கொடுக்கக்கூடாது. அவள் சிரித்தாலும் சீறினாலும் சரி, அதிகாரம் ஆடவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவன் தன் மனைவியால் ஆற்றலிழந்து, அவளால் ஆளுகை செய்யப்பட்டு அழிந்துபோகக்கூடாது. இப்போது நான் இங்கிருந்து நகருவது நல்லது. ஏனெனில் இடர்ப்பாடு நம்மை அணுகுகிறது.

சிம்சோன்: நல்ல நாள்கள் தம்மோடு காற்றையும் மழையையும் கொண்டு வருகின்றன.

குழு ஆள்: ஆனால் இங்கே மற்றொரு புயல் அல்லவா நெருங்கிக்கொண்டிருக்கிறது.

சிம்சோன்: நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? தெளிவாகச் சொல்லுங்கள். புதிர் சொல்வதிலும் அதற்கான விடையினைப் பகர்வதிலும் நான் மகிழ்ந்திருந்த நாள்கள் என்னை விட்டுக் கடந்துபோய்விட்டன.

குழு ஆள்: மயக்கும் குரலினை எதிர்பார்க்காதே. தேன் மொழிகளுக்கு அஞ்சாதே. கடும் சொற்களுக்குரியோன் வந்துகொண்டிருக்கிறான். தோற்றத்திலிருந்து அது காத்தின் 'அரப்பா' என அறிகிறேன் அவன் செருக்குமிக்கவன். தசைமலை. அவன் வருகையின் நோக்கத்தைத் தீலியாள் வருகையின்போது என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. இவன் அமைதித் தூதனாக வருகிறானா அல்லது போர்ப் பரணி பாடி வருகிறானா என்று என்னால் ஊகிக்க முடியவில்லை. அவன் ஏன் இங்கு வருகிறான்? படையின்றி, ஆனால் சினத்தோடு வருகிறான்.

சிம்சோன்: அவன் அமைதிக்கு வருகிறானா அல்லனா என்பது எனக்குத் தேவையற்ற ஒன்று.

குழு ஆள்: நாம் விரைவில் அதை அறிந்துகொள்ளப் போகிறோம். இதோ இவ் வழியாக அவன் வருகிறான்.

அரப்பா: உனது நிலைமைக்காய் இந்த நண்பர்களைப் போல் இரக்கப்பட நான் வரவில்லை. இப்படிப்பட்ட அவல நிலை உனக்கு நேர்ந்திருக்கக்கூடாது. இது நான் உன்மீது

கொண்ட நட்பினுல் கூறுவதன்று. நான் காத்தின் அரப்பா. யோர்தான் ஆற்றுக்குக் கிழக்கே வாழ்ந்த கிரியாதைதம் (யோர்தான்) மரபினன். இப்போது நீ ஏதேனும் அறிய வேண்டுமானுல் முதலில் என்னை நீ அறிந்துகொள்ள வேண் டும். நான் உனது அரும் வல்லமையையும், அரிய செயல் களைப் பற்றியும் நன்கு கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனுல் நான் அவற்றை நம்பவில்லை. அப்படிப்பட்ட உன்னை, நேருக்கு நேர் ஓர் அரங்கிலோ வெளியிலோ கண்டு உன்னேடு அறைகூவல் விட்டுப் போரிட எனக்கு வாய்ப்பு கிடைக்க வில்லை. அப்படித் திசையெங்கும் புகழ் பரப்பி நின்ற ஒருவனை நான் இப்போது காண வந்திருக்கிறேன்.

உனது உலகளாவிய புகழுக்கும் உன் உடல் அமைப்புக் கும் ஏதேனும் தொடர்பு இருக்கின்றதா எனக் கணிக்க வந்திருக்கிறேன்.

**சிம்சோன்:** என் வலிமையைக் கணிப்பது கண்ணுல் அன்று; களத்தின் மோதலால் மட்டுமே அறிய முடியும்.

**அரப்பா:** நீ என்னை மற்போருக்கு அறைகூவல் விடு கிருயா? ஐயோ! இந்த விலங்கும், சடினமான மாவரைக் கும் பணியும் உன் வலிமையைக் குன்றச் செய்திருக்குமே. செத்த கழுதையின் தாடையெலும்பாலேயே ஆயிரக்கணக் காரைரை நீ கொன்ற அந்தக் களத்தில் நான் மட்டும் இருந் திருந்தால், எவ்வளவு பேறுடையதாக அது இருந்திருக்கும். உன்னை வேறு ஒரு படையை நாடி ஓடச்செய்திருப்பேன் அல்லது செத்துப்போன அந்தக் கழுதையின் பிணத்தருகே உன்னைக் கிடத்தியிருப்பேன். அப்படி நடந்திருப்பின் உன்னைப் பிணமாகவோ அல்லது அடிமையாகவோ ஆக்கிய பெருமை பாலத்தீனத்துக்கு ஒரு பெலித்தியனுல கிடைத்திருக்கும். இசுரவேல் இனத்தவனை வென்ற பெருமை எனக்குக் கிடைத் திருக்கும். உன்னேடு நான் மற்போரிட்டிருந்தால் உனது புகழை உன்னிடமிருந்து பறித்திருப்பேன். ஆனுல் அப் பெருமையை நான் இழந்துவிட்டேன். ஏனெனில் வலி குன்றிய நிலையில் இருக்கும் ஒரு குருடனேடு நான் இப்போது போரிடப்போவதில்லை.

சிம்சோன்: உன் வல்லமையைப் பற்றிப் பெருமை பாராட்டாதே! முன்பு நீ என்ன செய்திருப்பாயோ அதை இப்போதே செய். உன் வல்லமைகொண்டு செய்து பார்.

அரப்பா: நான் ஒரு குருடனோடு பொருவதை வெறுக்கிறேன். என்றால் நீ தீண்டப்படுமுன் நீ நன்ருகக் கழுவப் பட வேண்டும்.

சிம்சோன்: உன்தன் மதிப்பிற்குரிய ஆண்டைகளும், பெலித்தியர்களும் வஞ்சகத்தால் மட்டுமே என்னை மேற்கொண்டனர். படைக்கலமின்றித் தனிதது நின்ற என்னைப் படையுடன் கூடிய அவர்களால் எதிர்த்துப் போரிட அவர்கட்குத் திறனில்லை, தெம்புமில்லை. அவர்கள் என் மனைவியைக் கையூட்டில் வஞ்சிக்கும் வரை, என் இல்லத்தில், ஏன் என் தூக்கத்தில்கூட என்னை எதிர்க்கும் துணிவு அவர்கட்கு இல்லை. என் மனைவியே, மேலான திருமண ஒப்பந்தத்தை மீறி, என்னை வீழ்த்திக் காட்டிக்கொடுத்துவிட்டாள். இப்போதுகூட நாம் இருவரும் தனித்துப் போரிட ஓர் அரங்கம் தேர்ந்தெடுக்கப்படட்டும். ஏனெனில் நாம் போரிடும் இடம் அரங்கமாக இருந்தால் உன் பார்வையின் உதவி கொண்டு நீ என்னைவிட்டுத் தப்பி ஓட முடியாது. அப்படி நாற்புறமும் அடைக்கப்பட்ட அரங்கிலே உன் எல்லாவிதப் பெருமைக்குரிய பெரும் படைக்கலன்களுடனும், தலைக்கவிப்புடனும், வெண்கல ஆடையுடனும், மார்பு, கழுத்துக் கவிப்புடனும், தறித்தடி நீளம் கொண்ட ஈட்டியுடனும், ஏழுக்குக் கேடகத்துடனும் என்னுடன் வந்து மோதிப் பார். அப்படி அனைத்துப் போர்க்கலன்களோடும, கவிப்புடனும வரும் உன்னை எதிாத்து ஒரே ஓர் ஓக் மரத் தடியில் உன் கவிப்புகளைத் தாககுவேன். ஏனெனில் அப்படித் தாக்கும்போது அவை ஒரு மாபெரும் ஒலி உண்டாக்கும் அல்லவா? ஆனல உனது அனைததுப் படைக்கலன்களும் உன் தலையை என் கைக்குத் தப்புவிக்க இயலாது. நீ பெருமை பாராட்டும் கையிலே உன் தலை பாது காப்பாய் இருக்கும். உன்னல் மீண்டும் கையைப் பார்க்க முடியாது.

**அரப்பா:** மந்திரத்தால் பெற்ற மாபெரும் வல்லமை உன்னிடம் இருப்பதுபோல் எண்ணிப் போர்க்கலன்களையும், கவிப்புகளையும் பற்றித் தகுதி தாழ்த்தி இழிவாகப் பேசுகிறாய். அந்தக் கலன்களும் கவிப்புகளும் மாபெரும் வீரர்களுக்கு அணிகலனாய், இடர்காக்கும் அரணாய் அமைந்திருப்பதை அறியாது பேசுகிறாய். ஒரு மிகப் பெரிய வல்லமை உன் பிறபபின்போது உனது குடுமியில் இறைவனால் மறைத்து வைக்கப்பட்டிருப்பதைப்போல் பேசுகிறாய். முள்ளம பன்றி சிலிர்த்ததுபோல் உன் முடிகள் சிலிர்த்து நின்றாலும் வலிமை அங்கே இருக்க முடியாது

**சிம்சோன்:** மந்திரமோ அல்லது இறைவனால் ஒதுக்கப்பட்ட மாயமோ எதுவும் எனக்குத் தெரியாது. எனக்கு வலுவான இறை நம்பிககை உண்டு. அவர் எனக்கு இந்த வல்லமையை என் பிறப்பின்போதே தந்திருக்கிறார். எனது பலமாய், பாதுகாப்பாய்த் தரப்பட்டுள்ள அந்த ஆற்றலை நான் அவரின் வாக்குறுதியை மீறுது என் முடியை மழிக்காது இருந்தவரை என் உடலின் ஒவ்வோர் உறுப்பிலும், இணைப்பிலும், எலுமபிலும் ஆற்றல் பரவி கலந்திருக்கும். இதை நீ ஆய விரும்பினால், மழைக் கடவுள் உன்னால் தொழப்பட்டால் முதலில அவன் கோயிற்குச் சென்று அவனை உனக்கு உதவும் படி வேண்டிக்கொள். ஓர் இசுரவேலனின் வல்லமையை அழிக்க உன் தெய்வத்தின் உதவியைப் பெற்று வா. நான் உன் ஆண்டவனையே அறைகூவி அழைக்கிறேன். நீயே அவனது சார்பில் இருப்பதாகச் சொல்லபபடுகின்ற தெய்வீக ஆற்றலோடு வந்து மோதிப் பார். நமது போரில் நம் இருவரின் தெய்வங்களில் யார் ஆற்றல மிக்கவர் என்பதை மெய்ப்பிக் கட்டும. உன் வருணனா அல்லது இசுரவேலர்களின் தெய்வமா? யார் என்பதை மெய்ப்பிப்போம் வா.

**அரபபா:** உன் ஆண்டவர் ஆற்றல் மிக்கவரென்றும். அவர் உன் உதவிககு வருவாரென்றும் கனவு காணாதே. அவர் யாராக இருந்தாலும் உன்னிடத்தில் அவருக்கு அக்கறையில்லை. உன்னை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அவர் உன்னை உன் நாட்டவரிடமிருந்து பிரித்து எதிரிகளின்

கைக்கு ஒப்புவித்துவிட்டார். உன் எதிரிகள் உன் கண்களைப் பிடுங்கவும், உனக்கு விலங்கிடவும், உன்னைச் சிறையிலடைக்கவும் அவர் ஒப்பிவிட்டார். மற்றக் குற்றவாளிகளுடன் சிறையில் அடைக்கப்பட்டுக் கழுதைகளோடும் மற்ற அடிமைகளோடும மாவரைக்க வேண்டியவனுயிருக்கிருய். புகழ் மிக்க முடியின்றி நீ இந்தக் கீழான உடல் உழைப்பைத் தவிர வேறு எதற்கும் பயனற்றவனுய் இருக்கிருய். இப்படிப்பட்ட உன்னேடு ஒரு சிறந்த வீரன் போரிடுவது உகந்தது அன்று. உன்னை வாள்கொண்டு தாக்குவது அப்படிப்பட்ட வீரன் தன் புகழுக்குத் தானே இழுக்கு ஏற்படுத்திககொள்வதற்கு ஒப்பாகும். ஒரு முடிதிருததுபவன் கத்தி உன்னை அடிபணிய வைக்கப் போதுமானது.

சிமசோன்: இழிசொற்களை உன்னிடமிருந்து பெறுவது எனக்கு ஏற்றதுதான். இதனினும் கொடியது எனக்கு நேரிட வேண்டும். இத்தனைக் கொடுமைகளையும் கடவுள் முறையாகவே எனக்குத் தந்திருக்கிருர். எனினும் முடிவில் இறைவன் என்னை மன்னிப்பார் எனற நம்பிக்கையை நான் இழக்கவில்லை. அவரது காதுகள் எப்போதும் திறநதே இருக்கின்றன. பார்வையோ தீயோர்களின் மேலேயே உள்ளது. அவரின் இரக்கத்தை நான பெறுவேன். எனவே உன்னை மீண்டும் போட்டிககு அழைககிறேன். எதிரிடையின் மூலம் யாருடைய கடவுள் வல்லமை மிக்கவர் என்பதைத் தீர்மானிக்கலாம். உன் வருணனு அல்லது இசுரவேலாகள் வணங்கும் இறைவனு? யார் ஆற்றல் மிக்கவர் என்பதைத் தீர்மானிப்போம்,

அரப்பா: உன் எல்லாச் செயல்களிலும் உன்னைத் தேவன் காத்துக்கொள்வார் என்ற உனது நம்பிக்கை புதுமையாகவேயுள்ளது. நீ ஒரு கொலைகாரன், கிளர்ச்சிககாரன், கொள்ளைக்காரன்.

சிமசோன்: செருக்குள்ள அரக்கனே! உனது வீரம் சொல்லில உள்ளதேயன்றிச் செயலில் இல்லை. எப்படி நீ என்னைக் கொலைகாரனென்றும், கொள்ளைக்காரன் என்றும் காட்டுவாய்.

அரப்பா: உனது நாடு பெலித்தியர்களுக்கு அடிமைப்படவில்லையா? உன் அறச் சான்றோர்களே உன்னை அடிமைபோல் எங்களிடம் ஒப்புக்கொடுக்கவில்லையா? இது ஒன்றே நீ கொலைகாரன் கொள்ளைக்காரன் என்று காட்டப் போதுமே. அவர்கள், உன்னை ஒப்பந்தத்தை மீறுபவன் என்று எங்களிடம் கைதிபோல் ஒப்படைத்தனரே உனக்கு எந்தத் தீங்கும் செய்யாத அசுகலோன் ஊராரில் முப்பதுபேரைக் கொன்று அவர்களின் உடைமைகளை நீ கொள்ளையிடவில்லையா? நீ ஒப்பந்தத்தை மீறியதைக் கேள்விப்பட்டபோது, பெலித்தியர்கள் தங்கள் படையுடன் அங்கு உன்னை மட்டுமே தேடிச்சென்றனர். அவர்கள் அப்படிச் செல்லும்போது யாருக்கும் தீங்கு விளைவிக்கவில்லை. இசுரவேலரின் சொத்துகளைக் கொள்ளையிடவுமில்லை.

சிம்சோன்: பெலித்தியர்களிடையே ஒரு பெண்ணை என் மனைவியாகத் தேர்ந்தெடுத்தேன். அதுவே நான் அவர்களுக்குப் பகைவன் அல்லேன் என்பதை மெய்ப்பிக்கவில்லையா? எனது திருமண விருந்துகூட உங்கள் நகரத்திலதான் ஏற்பாடு செய்யப்பட்டது. இவையனைத்துமிருந்தும் உங்களில் சில தந்திரமான அரசியலாளர், நண்பாகள், விருந்தினர்கள் என்ற போர்வையில விருந்துக்கு அழைக்கப்பட்டனர். அவர்களில் முப்பது பேர் எனக்காககக காத்திருந்தனர். நான் போட்ட புதிரின் கமுக்கத்தை என் மனைவி என்னிடமிருந்து தெரிந்து அவர்களுக்குச் சொல்லவில்லையானல் 'உன்னைக் கொன்றுபோட்டு விடுவோம்' எனறு அவளை அச்சுறுத்தினர். அவர்களை நானெ என் எதிரிகளாய்க் கண்டபோது என் எதிரிகளைப்போலவே அவர்களைக் கொன்றேன், அவாகளின் ஆடைகளைப் பறித்தேன. சுருங்கக்கூறின், முள்ளை முள்ளால் எடுத்தேன். என் நாட்டு மக்கள் பெலித்தியர்களுக்கு அடிமைகள் என்று நீ சொன்ஞய். அவர்கள் வல்லந்தத்தால் எஙகளை அடிமையாக்கினர். வல்லந்தத்தை வல்லந்தததால் துரத்துவது தவறிலலை. நான் தனிததுச் செயல்படவில்லை. ஒப்பந்தததை உடைத்ததும், பகைச் செயல புரிந்ததும் தனி ஆள் செய்த கிளர்ச்சி அன்று. கடவுளின் கட்டளைப்

படி, அவருடைய அதிகாரத்துக்குட்பட்டுச் செயல்பட்டேன். என் நாட்டை விடுவிக்கப் போதுமான வலிமையை அவர் எனக்குத் தந்திருந்தார். அடிமையுணர்வுகொண்ட இசுர வேல் மக்கள் என்னைத் தங்களின் 'கடவுளால் அனுப்பப்பட்ட மீட்பன்' என்று ஏற்றுக்கொள்ளாமல் பகைவர்களிடம் என்னை ஒப்புக்கொடுத்தார்கள். அது அவர்கள் கடவுளின் பெருமைக்கு ஏற்படுத்திய களங்கம். அதன் பொருட்டே, இன்றுவரை அவர்கள் துன்பத்தில் உழன்று கொண்டிருக்கிறார்கள். நான் இசுரவேலர்களை மீட்கப் படைக்கப்பட்டேன். அது வானுலக ஆணை. தீலியாள மட்டும் என்னை வஞ்சிக்காவிட்டால், இன்று நான் பெலிஸ்தியர்களின் படைபலத்தையும் விஞ்சி வெற்றி பெற்றிருப்பேன். உங்கள் படைகளல்ல என்னை வீழ்த்தியது. எனது தவறே என் தோல்விக்குக் காரணம். உனது தந்திரமான இந்தப் பேச்சுகள் பயனற்றுப்போய்விட்டன. உன் எதிராளியாகிய நான், பார்வையின்மையால் குருடனுகிவிட்ட இந்த நிலையிலும் மூன்ருவது முறையாக உன்னைப் போருக்கு அறைகூவல் விடுக்கிறேன். உன்னிடம் போரிடுவது எனக்கு இழுக்கு.

**அரப்பா:** உன்னைப்போன்ற புறக்கணிக்கப்பட்ட, குற்றவாளிபோல் அடிமையாக்கப்பட்ட, சாத் தண்டனைக்கெனத் தள்ளப்பட்ட ஒருவனிடம் எந்த மதிப்புள்ள மாந்தனும் சண்டையிட விரும்பமாட்டான்.

**சிம்சோன்:** இதைச் சொல்லவா நீ இங்கு வந்தாய். வீண் புகழ்ச்சிக்காரனே, என் வலிமைபற்றி பேசவா வந்தாய். என் அருகில் வா. என் தோளின வலிமையை ஆய்ந்து பார்க்காமல் இங்கிருந்து போகாதே. என் கைகள் உன்னை நெருங்காமல் பார்த்துக்கொள்.

**அரப்பா:** ஓ! பேயே! இந்த இழி சொற்களை நான் கேட்க வேண்டுமா? இவ் இழி சொற்களுககுச் சாக்காட்டை நான் தரவில்லையே?

**சிம்சோன்:** என்னைக் கொல்வதினின்று உன்னை ஒருவரும் தடுக்கவில்லை. உன்னிடத்தில் நான் எதற்கும் அஞ்சவில்லை.

முன்னேக்கி வா. என் கால்கள் பிணைக்கப்பட்டிருப்பினும், கைகள் விடுபட்டே உள்ளன.

அரப்பா: இந்த இழி சொல்லுக்கு வேறுவிதமான தண்டனையே பொருத்தம்,

சிம்சோன்: மானங்கெட்ட கோழையே, போய் விடு. நான் விலங்கால் பிணைக்கப்பட்டிருப்பினும் உன்னை நோக்கி ஓடி வந்து, ஒரே அடியில் உன்னை வீழ்த்தி, மீண்டும் உன்னை மேலே தூக்கி, நிலத்தில் அறைந்து உள் மூளையை, முட்டிகளைச் சிதறடித்துவிடுவேன், போய் விடு.

அரப்பா: பொனிசியர்களின் போர்க் கடவுளாம் அசுட்ரோத்தின் பெயரால் உரைக்கிறேன். நீ, விரைவில் இந்த உனது பெருமைக்குரிய சொற்களுக்காய் அழப்போகிருய்.

குழு ஆள்: அரக்கன் அரப்பா, தொங்கிய தலையுடன், அகந்தை அழிந்தவனுய்த் தோல்வியான பார்வையுடன், ஆனல சினத்துடன் அகன்றுவிட்டான்.

சிம்சோன்: அவ் அரக்கனைக் கண்டோ அவனின் மைந்தர்களைக் கண்டோ நான் அஞ்சுவதில்லை. அவனுக்கு ஐந்து மைந்தர்கள் மாபெரும் வடிவினர் என்றும் அவர்களில் மூத்தவன் கோலியாத்து என்பதையும் நான் அறிவேன்.

குழு ஆள்: அரப்பா ஆண்டைகளிடம் சென்று உனக்குப் பகையாகப் பேசுவானென்று நான் அஞ்சுகிறேன். எப்படியும் நீ இதனினும் அதிக துன்பத்தை எதிர்நோக்கி இருக்கிருய்.

சிம்சோன்: இங்கு நடந்தவற்றை அவன் அங்குச் சென்று அறிவிக்க முடியும். ஆனல் நான அவனைப் போருக்கு அழைத்ததை அறிவிக்க மாட்டான். அது அவன் பெருமைக்கு இழுக்கு; பிறர் அவன் வீரத்தின் மீது ஐயம் கொள்ளவும் ஏதுவாக இருக்கும். மேலும் இன்னல்களை என்னல் தாங்கிக் கொள்ள இயலாது, மடிநது விடுவேன் என்ற எண்ணத்தில் அவர்கள் இதனினும் கொடிய இன்னல் விளைவிக்கத் துணிய மாட்டார்கள். நான் அவர்களுக்குப் பயனுள்ளவனுயிருக்கிறேன். பல மாந்தர் செய்கின்ற பணிகளை நான் ஒட்டு

மொத்தமாக ஒருவனைச் செய்துவிடுவதால், பெலித்திய ஆண்டைகளுக்குக் குறைந்த செலவில் மிகுபயன் ஈட்டித் தருகிறேன். எதுவரினும் வரட்டும். எனது கொடிய பகைவனே எனக்குச் சிறந்த நண்பனாகப் போகிறான். ஏனெனில், அவன் எனக்கு இறப்பு என்னும் தண்டனையைத் தந்து இந்தப் பரிவு நிலையிலிருந்து என்னை விடுவிக்கப் போகிறான். எனவே அரப்பா எனக்குக் கொண்டுவரப் போகும் மிகப் பெரிய தண்டனையாகிய இறப்பு எனக்குச் சிறந்த நண்பனாகப் போகிறது. என்னைக் கொல்ல முயல்பவர்கள் என்னுடைய அழிவுடன் அவர்களின் அழிவையும் தேடிக்கொள்கிறார்கள். அவர்கள் சாத் தண்டனை தருவது என்னை மேலும் துன்புறுத்தவே. ஆனால் அந்தச் சாவே எனது இக் கொடுமைக்கு ஒரு முற்றுப் புள்ளியிட்டு எனக்கு ஆறுதல் அளிக்கப்போகிறது.

குழு ஆள்: ஒடுக்கப்பட்ட நிலையில் நீண்ட காலம் துன்பங்களை நுகர்ந்த நேர்மையுள்ளம் கொண்ட மக்கள், தங்களை மீட்க முயலும் மீட்பவர்களுக்குப் பிறரால் மேற்கொள்ள முடியாத வல்லமையை இறைவன் கொடுக்கும் போது அதனைக் கண்டு மகிழ்ச்சியும், புத்துணர்ச்சியும் பெறுகிறார்கள். அம் மீட்பர் ஒடுக்குவாரை வீழ்ச்சியடையச் செய்கின்றார். ஒடுக்குவோரின் படைக்கலன்களைக் கண்டோ, போர் வீரர்களைக் கண்டோ சிறிதும் அக்கறை கொள்ளாது, வெகு விரைவில் அவர்களின் போர் முன்னேற்பாடுகளைத் தாக்கி, அழித்துத் தங்கள் உயரிய நோக்கத்தை நிறைவேற்றுகிறார்கள். எதிரிகள் அதனைக் கண்டு, அதிர்ச்சியும் குழப்பமும் அடைந்து தங்களின் பாதுகாப்பு ஆற்றலை இழந்து விடுகின்றனர்.

ஆனால் பொறுமை அறிவர்களின் தனிப் பண்பாகும். இடுக்கண் சான்றோர்களின் பொறுமைக்கு ஒரு கட்டளைக் கலலாகும் பொறுமையினால், பண்பாளன், தன்னையே விடுவித்துக் கொள்கிறான். அழிவிலிருந்து தன்னைக் காத்துக் கொள்கிறான். எதைக் கண்டும் அஞ்சாது நிற்கும் துணிவும், அறிவர்களின் பொறுமையும் சிம்சோனே, உன்னிடத்தில்

உள்ளன. பார்வையிழப்புக்கு முன்னும், பின்னும் இரண்டு நிலைகளிலும் இவ்விரு சீரிய பண்புகளை நீ கொண்டுள்ளாய். பார்வை இழப்புக்கு முன் ஒரு மறவன்போல் துணிந்து நின்ருய். இழப்புக்குப் பின் சான்ருேன்போல் பொறுமையாய்க் காணப்படுகிருய். வாழ்வில் பொறுமையால் மிகச் சிறந்த அருமைகளைப் படைத்த சான்ருேர் வரிசையில் நீயும் இடம்பெறுகிருய்.

வருணனுக்குப் புகழ்பாட இன்று விடுமுறை. எனினும் நீ ஒய்வின்றி இருக்கிருய். ஏனெனில் இன்று நீ உள்ளத்தால் ஒய்வின்றி உழன்றுகொண்டு இருக்கிருய். பணி நாள்களில் கைகளால் உழைப்பதைவிட இன்று உன் மன உளைச்சல் மிகுதியே. இருப்பினும் அதிகத் துன்பம் அடுத்து வர இருக்கிறது. யாரோ வேறு ஒரு மாந்தன் இப் பக்கமாய் வந்து கொண்டிருப்பதைக் காண்கிறேன். கைவண்ணம் மிக்க கோலோடும், தடியுடனும் வருகிருன். எவ்வளவு விரைவாக வர முடியுமோ அவ்வளவு விரைவாக வந்து கொண்டிருக் கிருன். அவன் ஏதோ ஒரு பரபரப்பான செய்தி கொண்டு வருபவனைப்போல காணப்படுகிருன். அவனுடைய ஆடையி லிருந்து அவன் ஒரு பொது மக்களின் அதிகாரிபோல் தோன்றுகிருன். இப்போது அவன் அண்மையில் வந்து விட்டான். நான் நினைக்கிறேன், செய்தி சுருக்கமானதாகவும் படு விரைவான ஒன்ருகவும் இருக்குமென்று.

அதிகாரி: யூதர்களே, நான் கைதி சிம்சோனைக் காண வந்திருக்கிறேன்.

குழு ஆள்: அதோ அங்கே இருக்கிருன். அவனுடைய விலங்குகள் அவனை அடையாளம் காட்டும்.

அதிகாரி: சிம்சோனே! வருணனைச் சிறப்பிக்கும் வண்ணம், தாங்கள் ஒரு விருந்தும் கேளிக்கையும் மிகச் சிறப்பாக இன்று நடத்துவதாக உன்னிடம் அறிவிக்கச் சொல்லி பெலித்திய ஆண்டைகள் என்னை உன்னிடம் அனுப்பியுள்ளனர். உனது மாபெரும் உடல் வலிமையால் அருஞ்செயல் புரிந்து அவர்களை நீ மகிழ்விக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ள

னர். உனது வலிமையின் மாட்சியைப் பலரும் காண விரும்பு கின்றனர். விரைந்து எழு. என்னோடு வா. முதலில் நான் உனக்கு உணவளிக்க வேண்டும். பின் உன்னை மினுக்கேற்றிச் சிறப்பாக உடுத்தி பெலித்திய ஆண்டைகளுக்கு இடையே, நல்ல தோற்றத்துடன் பொருத்தமான முறையில் நிறுத்த வேண்டும்.

சிம்சோன்: நான் ஓர் எபிரேயன் என்பதை நீ நன்கறி வாய். எனவே எங்கள் மதச் சட்டத்தால் ஒதுக்கப்பட்ட, அவர்களின் மதச் சடங்குகளிலே நான் கலந்துகொள்ள முடியாது.

அதிகாரி: இந்த உன் விடையால் அவர்கள் நிறைவடைய மாட்டார்கள் என்று நான் உனக்கு உறுதி கூறுகிறேன்.

சிம்சோன்: வாள் வீச்சாளர்களும், களரி ஆட்டக்காரர் களும், மல்லர்களும், குதிரை வல்லுனர்களும், வெற்றி வீரர் களும், மாறுவேட ஆட்டக்காரர்களும், கூத்தாகளும், கொம்மாளிகளும், பலகுரல் மன்னர்களும், அவர்களை மகிழ்விக்க அவர்களிடம் இல்லையா? அவர்களின் மாவரைகளும் எந்திரத்திலே உழைத்துச் சோர்ந்துபோன, அடிமை விலங்கை இழுத்து, இழுத்து வலுவிழந்துபோன என்னுடைய வலிமை யின் ஆற்றலகளையா அவர்கள் காண விரும்புகின்றனர்? என் பார்வையிழந்த நிலையில் அவர்களுகளு நான் எப்படி வேடிக்கை காட்டமுடியும் என்று எனக்குச் சொல்? அவர் களின் ஆணையை மறுத்தால், அதை வாய்ப்பாக வைத்து என்னை மேலும் துன்புறுத்த விரும்புகின்றனரோ? அல்லது என் வேதனையில் அவர்கள் வேடிக்கைகளைக் காண விழை கின்றனரோ? எனது திண்டாட்டத்தை அவர்கள் கொண்டாட விரும்புகின்றனரோ? போய் சொல், நான் வர மாட்டேன் என்று.

அதிகாரி: நீ, சொல்வதைச் சற்று எண்ணிச் சொல். இம்மொழி அவர்களைச் சினமுறுத்தும்.

சிம்சோன்: என்னை நினைத்துப் பார்க்கவா நீ சொல்கிறாய். ஆம், நான் நன்கு நினைத்துதான் சொல்கிறேன். உடலால்

அவர்களின் அடிமையாய் இருப்பதினுல் அவர்களின் பொருளற்ற ஆணைகளுக்கெல்லாம் பணிவேனென்று எண்ணி னர் போலும். அவர்கள் சீற்றத்தின் மிகக் கொடிய துயர்களை யெல்லாம் நான் ஏற்கெனவே பட்டுக்கொண்டிருக்கிறேன். துயரத்தால் நான் துவண்டுபோனேன். துன்பத்தால் உடைந்துபோனேன். இந்த நிலையிலும் அவர்களின் முன், என் வலிமையின் அருந்திறனுல், அவர்களை மகிழ்விக்க ஆணை யிடப்பட்டுள்ளேன். அவர்களுக்குச் சொல், நான் வர மாட்டேன் என்று.

அதிகாரி: என்னிடம் ஒப்படைக்கப்பட்ட செய்தியை உன்னிடம் விரைவில் சொல்ல நான் பணிக்கப்பட்டுள்ளேன். விரைந்து சொல். இதுதான் உறுதியான விடையா?

சிமசோன்: ஆம், போய் உடனே சொல், நான் வர மாட்டேன் என்று.

அதிகாரி: இவ் விடையில் ஏற்படப்போகும் விளைவுக் காய் நான் வருந்துகிறேன்.

சிம்சோன்: நீ வருந்தக் காரணமுண்டு.

குழு ஆள்: சிம்சோனே, வினை முற்றிவிட்டது. ஒன்று நீ அவர்களின் விருப்பத்திற்கு இணங்க வேண்டும் அல்லது அதன் பின்விளைவுகளை உன்னை நுகரச் செய்வார்கள். அதிகாரி சென்று விட்டான். அவன் உன் செய்தியை எப்படி மிகைப்படுத்திச் சொல்லப் போகிருனே? யார் அறிவார்? இதைவிட அதிகாரமிக்க ஆணையைப் பெலித்திய ஆண்டை களிடமிருந்து நீ பெறபபோகிருய் என்று நான் நினைக்கிறேன். அந்த ஆணை உன்னுல் பொறுத்துக்கொள்ள முடியாத அளவுக்கு அச்சுறுத்துதல் மிக்கதாய்க் காணப்படும்.

சிம்சோன்: அரும் கமுக்கத்தைக் காட்டிக்கொடுத்த பழியால் இழந்த அந்த வல்லமையை மீண்டும் என் வளரும் முடியில் உணர்கிறேன். அந்த வல்லமையை இப்படி இழி வான முறையில் பயன்படுத்தவா சொல்கிருய். மழைக் கடவுளை வழிபடுபவர்களை மகிழ்விக்க அப் புனித ஆற்றலைப் பயன்படுத்துவது மிகப் பெரிய இழிவு. சிலைகளைச் சிறப்பிக்கும்

பொருட்டு வெறுக்கத்தக்க இடத்தில் என் வலிமையின் ஆற்றலைக் காட்டுவதைவிட, ஒரு நசரேயனுக்கு வெறுக்கத் தக்க வேறு பணிகள் இருக்க முடியாது. அப்படிச் செய்வது இழிவானது, அருவருக்கத் தக்கது, பழிப்புக்குரியது, புனித மற்றது, தீங்கானது.

குழு ஆள்: இருப்பினும், அருவருக்கத்தக்க சில வழி பாட்டுக்காரர்களாகிய பெலித்தியர்களுக்கு இந்த வலிமை யால் தொண்டு செய்கிறுயே.

சிம்சோன்: சிலகளைச் சிறப்பிக்கவன்று, என்னைச் சிறைப் பிடித்து வைத்திருப்பவர்களிடமிருந்து எனது உணவை நேர்மையாய், நெறியாய்ப் பெற்று கொள்ளவே நான் என் வலிமையைப் பயன்படுத்துகிறேன். விருப்பின்றிச் செய்யும் பணி ஒருவனைப் பழிப்பிக்காது.

சிம்சோன்: 'விருப்பின்றிச் செய்யும் பணி ஒருவனைப் பழிப் பிக்காது' என்ற முதுமொழி ஒருவன் அப்படிப்பட்ட விருப்ப மில்லாச் செயலை உடல் வலுவின் கட்டாயத்தால் செய்யும் போதுதான் அது பொருந்தும். நான் வருணனின் கோயிலுக்கு மற்றவர்களால் இழுத்துச் செல்லப்படாவிட்டால், அப் பணியைச் செய்யும்படி கட்டாயப்படுத்தப்படவில்லை என்று தான் பொருள். நான் பெலித்திய ஆண்டைகளால் கட்டளை இடப்பட்டுள்ளேனே தவிர இன்னும் கட்டாயப்படுத்தப் படவில்லை. கட்டளை, கட்டாயமாகாது. ஏனெனில், கட்டளையை ஏற்றுக் கொள்வது அவனவனின் விருப்பத்தைப் பொருத்தது. நான் பெலித்திய ஆண்டைகளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, வருணனின் கோயிற்குச் சென்று, அவர்களை மகிழ்விப்பேனுகில், அப்படிச் செய்வது கட்டாயத்தின்கீழ் அன்று, என் விருப்பத்தின்படியேயாகும். அப்படிச் செயதால், மாந்தர்களுக்கு அஞ்சினல், கடவுளின் வெறுப்புக்கு ஆளாகும் தொல்லையை நானே உருவாக்கிக் கொணடதாக தான் பொருள். அது, கடவுளை விட மாந்தனுக்குச் சிறப்பு கொடுத்ததாகவேயாகும். கடவுளைப் புறக்கணித்து மாந்த னுக்குச் சிறப்பு அளிப்பது கடவுளின் சினத்தை மூட்டும். அப்படிச் செய்வேனுயின், அதற்காக நான் வருந்தித் திருந்தி

மன்னிப்பு கேட்காவிட்டால், நான் இறைவனால் மன்னிக்கப் பட மாட்டேன். வருணன் கோயிலில் நானோ அல்லது நீயோ சில காரணத்தை முன்னிட்டு முன்வருவதைக் கடவுள் மன் பாரானால், கடவுளின் விருப்பத்தை நீ ஐயம் கொள்ளக் கூடாது.

குழு ஆள்: நீ சொல்வது எனக்குப் புரியவில்லை.

சிமசோன்: துணிவாக இரு. சில அருஞ்செயல்களைச் செய்ய, உள்ளுணர்வு என்னைத் தூண்டுகிறதை நான் உணர் கிறேன் தூதனோடு, நான் கோயிற்குப் போவேன். எனக்கு இழிவு ஏற்படும் முறையிலோ அல்லது ஒரு நசரேயனின் உறுதி மொழிகளுக்கு இழிவு ஏற்படும் வகையிலோ நடந்து கொள்ள மாட்டேன். அடி மனத்தின் அறை கூவலுக்கு ஏதேனும் பொருளிருப்பின், இந்த நாள் சில மேன்மையான செயல் களால் குறிப்பிடத் தக்க நாளாகப் போகிறது. அல்லது இந் நாள் என் வாழ்வின் இறுதி நாளாகிவிடும்.

குழு ஆள்: நீ, தக்க நேரத்தில் முடிவெடுத்துள்ளாய். இதோ! தூதன் வருகிறான்.

அதிகாரி: சிம்சோனே, ஆண்டைகளிடமிருந்து இரண்டா வது செய்தியோடு வந்திருக்கிறேன். நீ, எங்கள் அடிமை, பிணையன், ஆலையில் பணிபுரியும் கூலிக்காரன். பின் எப்படி நீ பெலித்திய ஆண்டைகளின் கட்டளையை மீறமுடியும்? உன்னை உடனே அங்கு வரச்சொன்னார்கள்; எதிர்த்துப் பேச எத்துணைத் துணிச்சல்? உடனே வா. பாறையைவிட உறுதி யாய் இங்கேயே நீ அசையாமல் நின்றாலும், உன்னை அசைப்ப தற்கு எங்களிடத்தில வழிமுறைகள் உண்டு.

சிம்சோன்: அவர்களின் கைகளில் அதிகத் தொல்லை அடைய நான் அணியமாகிவிட்டேன். இந்தப் பெருந்தொல்லை அவர்கள் சிலரின் அழிவுக்கு அடிப்படையாக அமையும். நான் உங்களோடு வரத் தீர்மானித்துவிட்டேன். ஏனெனில் அவர் களுக்கு என்னால் சில நலன்கள் உண்டு. நான் வருவதாக முடிவு செய்து விட்டேன். வரவில்லையானால், அவர்கள் தங்கள் வீதி வழியாக என்னை ஒரு காட்டு விலங்கைப்போல்

இழுத்துச் செல்ல வாய்ப்புக் கிட்டிவிடும். வரம்பற்ற அதிகாரத்தால் அவர்கள் எனக்குக் கட்டளையிட்டுள்ளனர். அவர்கள் என் ஆண்டைகள், அவர்களை நான் மீற முடியாது. வாழ்வுக்காகத் தன் முடிவை மாற்றிக்கொள்பவன் யார்? (மாந்தர்களின் வழிகள் மாற்றத்திற்குரியன.) உங்களோடு நான் வருகிறேன் என்றாலும் இசுரவேல் மதத்தினால் புறக்கணிக்கப்பட்ட எந்த இழிவான கட்டளைக்கும் நான் இணங்க மாட்டேன் என்பது உறுதி.

அதிகாரி: என்னோடு வரத் தீர்மானம் செய்ததற்காய் உன்னைப் பாராட்டுகிறேன். இந்த விலங்குகளைக் களைந்து விடு. உனது கீழ்ப்படிதலால் பெலித்திய ஆண்டைகளை நீ வெற்றிகாண முடியும். உனக்கு அவர்கள் உதவுவார்கள். விடுதலைகூட செய்வார்கள்.

சிம்சோன்: (குழு ஆள்களிடம்) உடன்பிறவாத் தோழர்களே, நான் விடைபெறுகிறேன். நீங்களும் என்னோடு வர நான் விரும்பவில்லை. நண்பர்கள் சூழ என்னை அவர்கள் கண்டால் கொதிப்படைவார்கள். ஒரு காலத்தில் அவர்களின் எதிரியாயிருந்த என்னைக் கண்டு எவ்வளவு சினமுறுவார்களோ? நானறியேன். அன்று அவர்கட்கு நான் அச்சமூட்டுபவனாயிருந்தேன். குடித்து வெறித்து இருக்கிற இந்த வேளையிலே அவர்கள் என்னைக் கண்டால், அது அவர்களுக்குப் பெரும் பதற்றமூட்டும். குடி வெறியில் ஆண்டைகள் கொள்ளும் அடக்குமுறை உணர்வு அதிகம். அதைப் போலவே, விருந்து மயக்கத்தில் அறிவுரைஞர்கள் மதவெறி மிகுந்து காணப்படுவர். அவர்போல், விடுமுறை நாள்களில், பொதுமக்கள், முரடராகவும், வெறியராகவும் இருப்பார்கள். தணியாச் சினம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். என்றால் செய்யப்படும் செயல்கள் இசுரவேலர்களுக்கும், இசுரவேலர்களின் தெய்வத்திற்கும், என் நாட்டிற்கும், எனக்கும் இழிவையும் மானக்கேட்டையும் உண்டாக்கும் எதையும் நீங்கள் செவிமடுக்காதீர். இதுவே எனது வாழ்வின் இறுதி நிகழ்ச்சியாக இருக்குமோ? அல்லவோ? என்றால் இப்போது சொல்ல முடியாது.

குழு ஆள்: அதிகாரியுடன் செல். இறைவனைப் பணிய நீ எதைச் செய்தாலும், இசுரவேலரின் தெய்வம் உனக்குத் துணை நிற்பாராக. உன் செயல்கள் பிற இனத்தவர் இடையில் அவரின் புகழ் பரப்பட்டும். உன் பிறப்பின்போது பெரிய செயல்களை அறிவிக்க தேவதூதன் உன்னோடு இருப்பானாக. அந்தத் தேவன், தன் முன்னறிவிப்பை உன் தாய் வயல் வெளியில் இருந்தபோது அறிவித்துவிட்டு, தீத்தழலில் பறந்து மறைந்தான். இப்போது அவன் உனக்குத் தீக் கேடகமாயிருந்து உன்னைக் காப்பானாக. தான் பள்ளத்தாக்கில் நீ தங்கியிருந்தபோது உன்னிடம் வெளிப்பட்ட அதே வல்லமை இந்த நெருக்கடி நேரத்தில் உனக்கு உதவுவதாக. வேறு எவரிடத்திலும் காணப்படாத தனித்தன்மை கொண்டது அந்த வல்லமை. ஆ! இத்தனை விரைவுடன், இளமைத் துடிப்புடன் மனோவா எங்கிருந்து வருகிறார்? அவர் சற்று நேரத்துக்கு முன்பு இங்கிருந்ததைவிட விழிப்பாகவும் சுறுசுறுப்பாகவும் காணப்படுகிறார். அவர் தம் மகன் சிம்சோனைக் காண வருகிறாரா? அல்லது வேறு ஏதேனும மகிழ்ச்சியான செய்தி கொண்டு வருகிறாரா?

மனோவா: தோழர்களே, உங்களுக்கு அமைதி உண்டாவதாக நான் இங்கே வந்தது என் மகன் சிம்சோனைக் காண்பதற்கன்று. சிம்சோன் பெலித்திய ஆண்டைகளால் அழைக்கப்பட்டதை நான் அறிவேன். இப்போது அவன் அவர்கள்முன் அருஞ்செயல்கள் பலவற்றைச் செய்து காட்டிக்கொண்டிருப்பான். இங்கே வரும்போது இதை நான் கேள்விப்பட்டேன். இச் செய்தி நகரெங்கும் ஒலித்தது. மக்கள் திரளாய் அரங்கில் கூடிவிட்டனர். எனக்கு அங்குச் செல்ல ஆசையில்லை. ஏனெனில் அவன் அங்கு நம் தகுதிக்கு ஒவ்வாத செயல்களைச் செய்துகொண்டிருப்பான். என் மகனின் விடுதலை பற்றி நான் எத்துணை நம்பிக்கை வைத்திருந்தேன் என்பதை உங்களோடு பகிர்ந்துகொள்ளவே இங்கு வந்தேன்.

குழு ஆள்: அந்த நம்பிக்கையில் நாங்களும் பங்கு கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம். எங்களுக்கும் அதைப்

பற்றிச் சொல்லுங்கள். நாங்கள் அதைக் கேட்க அவாவுகிறோம்.

மனோவா: பெற்ற ஒரு பற்றினால் மகனின் விடுதலைக்காக ஒவ்வொரு பெலித்திய ஆண்டையிடமும் அவர்கள் வீடுகளிலும் காசாவின் வீதிகளிலும் கண்டு வேண்டுகோள் விடுத்தேன். என் மகனின் விடுதலைக்காகப் பணம் பெற்றுக்கொள்ளும்படி வேண்டினேன். சிலர் என் வேண்டுகோளைச் சற்றும் மனத்தில் கொள்ளவில்லை. அவர்கள் மிகவும் கொடியராக செருக்குள்ளவராகவும், தங்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் பழிதீர்த்துக்கொள்வதில் அக்கறையுள்ளவர்களாகவும் காணப்பட்டனர். இவர்களுள் வருணனை வழிபடும் தீவிர பக்தர்களும், சமய முதல்வர்களும் ஒரு பிரிவினர். இவர்களில் மற்றொரு பிரிவினர் பிற்போக்கினர், இவர்கள் பணத்தையே குறியாகக் கொண்டவர். பணத்துக்காக இவர்கள் தங்கள் கடவுளையும், நாட்டையும் விற்க அணியமானவர். மூன்றாவது வகை பெலித்திய ஆண்டைகளும் இருந்தனர். இவர்கள் மிகவும் நாகரிகம் பண்பாடு தெரிந்தவர்களாகவும், பணிவுள்ளவர்களாகவும் தங்கள் பகைவன் சிம்சோனைப் பழிவாங்கியது போதும் என்ற நிலையில் உள்ளவர்களாகவும், சிம்சோனின் இன்றைய நிலைக்காய்ப் பரிவுகாட்டுபவர்களாகவும் இருக்கின்றனர். எஞ்சிய பெலித்திய ஆண்டைகள் ஈட்டுத்தொகை வாங்கிக்கொண்டு சிம்சோனை விடுவிக்க மனமுள்ளவர்களாக இருக்கின்றனர். ஆ! அது என்ன இரைச்சல்? வானைப் பிளப்பது போலுள்ளதே.

குழு ஆள்: இது பெலித்தியப் பார்வையாளர்களின் பேரிரைச்சல்தான். ஒரு காலத்தில் தங்களை அச்சுறுத்திய பகைவன் சிம்சோனை அடிமையாய், பிணையாய், குருடனாய்க் கண்டு ஆரவாரம் செய்வதாயிருக்கும்; அல்லது அவன் செய்த அருஞ்செயல்களைக் கண்டு வியந்து எழுப்பிய கூவலாய் இருக்கலாம்.

மனோவா: நான் என் மகனின் விடுதலைக்காக ஈட்டுத் தொகை கொடுக்க அணியமாய் உள்ளேன். என்

னுடைய எல்லா உடைமைகளையும் கொடுக்க வேண்டுமாயினும் கொடுப்பேன். என் மகனைச் சிறையில் கைதியாய், அடிமையாய் வைத்துக்கொண்டு செல்வனாய் வாழ்வதை விட, என் இன மக்களிடையே ஏழையாய் வாழ்வதையே நான் விரும்புகிறேன். சிம்சோனின்றி, இவ் இடத்தை விட்டுச் செல்வதில்லை என்று தீர்மானித்துள்ளேன்.

குழு ஆள்: செல்வத்தைச் சேர்த்துவைப்பது தந்தையர்களின் வழக்கம். அவர்களின் இறப்பிற்குப்பின் மைந்தர்களுக்கு அது பயன்படுகின்றது. உங்களுடைய மகனுக்காய்ச் செல்வம் அனைத்தையும் இழக்க நீங்கள் தீர்மானித்து விட்டீர்கள். தங்கள் தந்தையர்களின் முதுமையில் மைந்தர்கள் அவர்களைக் காப்பது வழக்கம். இயல்பாய் முதுமையடைந்த நீங்கள், பார்வையிழப்பினால் உங்களைவிட முதுமையாய்த் தோன்றுகின்ற உங்கள் மகனைக் காக்கிறீர்கள்.

மனோவா: அவனுடைய பார்வையின்மையால் அவனைக் காப்பதற்கு நான் மிகவும் விருப்பம் கொள்வேன். வீட்டில் வைத்துக் காப்பதில் மிகுந்த மகிழ்ச்சி கொள்வேன். அவனுடைய முடியில் ஒரு நாட்டினுடைய முழு வன்மையும் அடங்கியிருந்தது. அத்தகைய தோள்களில் சுருள் சுருளாய்த் தொங்கிய முடியிலுள்ள வல்லமையைக்கொண்டு செய்த செயல்கள் அனைத்தும் என்னைச் சிறப்புறச் செய்கின்றன. கடவுளின் பணியில் சில மேன்மையான செயல்களைச் செய்ய மீண்டும சிம்சோனைக் கடவுள் பயன்படுத்தக்கூடாதா என்று ஏங்குகிறேன். கடவுள் அவனுக்கு இழந்துபோன ஆற்றலை மீண்டும் பெற ஒருபோதும் ஒப்புதல் தரமாட்டார். அந்த வல்லமையைக் கொடுப்பதனால் அவனைக் கடவுள் வீணாய் மடியன்போல் செயலிழந்திருக்கச் செய்யமாட்டார். சிம்சோன் தன் பார்வையையும் பலத்தையும் இழந்தாலும், கடவுள் அவனுடைய ஆற்றலை மட்டும் மீளவும் கொடுக்கிறார். எனவே மீண்டும் பார்வையைக் கடவுள் அவனுக்குக் கொடுக்கலாம்.

குழு ஆள்: உம் மகனின் விடுதலைபற்றிய உமது நம்பிக்கைகள் அடிப்படையற்றதாகவோ பயனற்றதாகவோ

இல்லை. உம் மகனின் விடுதலையினால் நீர் அடைய விரும்பும் மகிழ்ச்சி ஒரு தந்தைக்குரிய இயல்பேயாகும். ஒரு மகனின் விடுதலையிலும், உமது மகிழ்ச்சியிலும் உமக்கு அடுத்து நாங்கள் பங்கு பெறுவோம்.

மனோவா: நீங்கள் சிம்சோனின் நண்பர்கள் என்பதை அறிவேன். ஓ! அது என்ன நடுக்குறும் பேரொலி. முந்திய பேரோசையினும் மிகுதியாக இருக்கிறதே.

குழு ஆள்: நீங்கள் அதை ஏதோ பேரோசை என்கிறீர்கள். எனக்கோ அது உலகமே அழிக்கப்பட்டுத் துயரத்தால் முனகுவதைப்போல் இருக்கிறது. அந்த ஒலி கொடுமையான குருதி சிந்தலையும், இறப்பையும், அழிவையும் சுட்டிக் காட்டுவது போலுள்ளது.

மனோவா: ஏதோ சில கட்டடங்கள் இடிந்து விழுந்து அழிவை உண்டாக்குவதுபோன்ற பேரொலியாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். ஓ, அந்த இடியோசை தொடர்கிறதே. அவர்கள் என் மகனைக் கொன்றுவிட்டார்கள் என்று நினைக்கிறேன்,

குழு ஆள்: எனது எண்ணத்தில் உம் மகன் அவர்களைக் கொல்வதுபோல் தோன்றுகிறது. ஒரு தனி ஆள் இறப்பால் இப்படிப்பட்ட பேரிரைச்சல் ஏற்படாது.

மனோவா: இது ஒரு மாபெரும் அழிவாயிருக்க வேண்டும். இப்போது நாம் என்ன செய்யலாம்? இங்கு இருப்பதா? அல்லது ஓடிச்சென்று பார்க்கலாமா?

குழு ஆள்: நாம் எல்லோரும் இங்கேயே இணைந்து இருப்பது நல்லது. இல்லையெனில் நாமும் நம்மையறியாமல் அந்த இடரில் விழுந்துவிடுவோம். இது பெலித்தியர்களின் தலையின்மீது விழுந்த அழிவு. அவர்களிடமிருந்துதான் இந்த இரைச்சல் ஏற்படுகிறது. மாபெரும் அழிவில் சிக்கிக் கொண்ட அவர்கள் நமக்கு இடையூறு விளைவிப்பது கடினம். மற்றவர்களிடமிருந்து நமக்குக் கேடு நேரிடும் என்று அஞ்சத் தேவையில்லை. இசுரவேலர்களின் கடவுளுக்கு எதுவும் முடியாததன்று. ஒருவேளை இறைவன் சிம்சோனுக்கு

இழந்த பார்வையை வழங்கியிருந்தால், பெலித்தியர்களை ஏராளமாய்க் கொன்று குவித்து அவர்களின் பிணங்களின்மீது அவன் நடந்து வந்துகொண்டிருக்கலாம்.

**மனோவா:** சிம்சோன் தன் பகைவர்களைக் கொன்று குவிக்கிறான் என்ற எண்ணத்தினால் ஏற்படுகின்ற மகிழ்ச்சி மிக உறுதியாய்த் தோன்றுகின்றது.

**குழு ஆள்:** கடந்த காலத்தில் எவராலும் நம்ப முடியாத அளவுக்குக் கடவுள் தன் மக்களுக்குப் பல செயல்களைச் செய்துள்ளார். சிம்சோனுக்குப் பார்வையை மீண்டும் கொடுப்பதிலிருந்து அவரை எதனால் தடுக்க முடியும்?

**மனோவா:** கடவுள் எல்லாவற்றையும் செய்ய வல்லவராயிருக்கிறார் என்பதை நான் அறிவேன். ஆனால் சிம்சோனுக்கு ஏதேனும் செய்வார் என்பது சற்றும் நம்பற்குரியதாயில்லை. கடவுள் சிம்சோனுக்குப் பார்வையை மீண்டும் கொடுப்பார் என்ற நம்பிக்கை, நமமை அப்படி எண்ணச் செய்கிறது. விரைவில் நமக்குத் தகவல்கள் கிடைக்கும். இங்குச் சற்று நேரம் காத்திருப்போம்.

**குழு ஆள்:** நல்ல தகவலைவிடக் கேடான செய்தியே விரைவில் வரவிருக்கிறது. ஏனெனில் கெட்டச் செய்தி நல்ல செய்தியைவிட விரைந்து பரவும். நமது ஆவலைத் தணிக்க, ஒரு எபிரேயன் நம்மை நோக்கி விரைந்து வருவதை நான் காண்கிறேன். அவனும் ஒரு இசுரவேலனாய் இருப்பான் என்று ஊகிக்கிறேன்.

**தூதன்:** நான் எங்கே ஓடுவேன்? எவ் வழியில் பறப்பேன்? நான் இறுதியாகக் கண்ட அந்த அச்சந்தரும் காட்சி என் புறக்கண் விட்டு அகன்றாலும் மனக்கண்ணில் தெளிவாய்த் தெரிகிறதே! அதை என்னால் மறக்க முடியவில்லையே. என் உணர்வுகள், நினைவுகள் எனக்கில்லாவிட்டாலும் கடவுள் எப்படியோ என்னை இப் பக்கமாய் வழிநடத்திக்கொண்டு வந்திருக்கிறார். மதிப்பிற்குரிய மனோவாவே, என் நாட்டினரே, நிகழ்ச்சி நடந்த இடத்திற்குச் சற்றுத் தொலைவி

விருந்தாலும் அதைப்பற்றி அறியும் ஆவலுடன் இருப்பீர்கள் என்பதை நான் அறிவேன்.

மனோவா: அந்த நேர்ச்சி பேரொலி எழுப்பிற்று. அது எங்கும் கேட்டது. உனது வருகைக்குமுன், நாங்கள் கேட்ட அந்த உணர்ச்சிக் கூக்குரல், ஏதோ எதிர்பாரா நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்பதை எங்களுக்கு அறிவுறுத்தியது. ஆனால் என்ன என்பதை நாங்கள் இன்னும் அறியோம். முன்னுரை தேவையில்லை. செய்தியை அறிய நாங்கள் ஆவலோடு இருக்கிறோம்.

தூதன்: பேரழிவால் சிதறிப்போன என் சிந்தையைச் சீர்செய்யவும் என்னைச் சற்று நிலைப்படுத்திக்கொள்ளவும் விடுங்கள். அப்போதுதான் நான் சொல்வது இன்னதென்று உங்களால் புரிந்துகொள்ள முடியும்.

மனோவா: முதல் தகவலைக் கொடு. விளக்கங்களைப் பின்னர் சொல்.

தூதன்: காசா அழியவில்லை. ஆனால் எல்லாப் பெலித்தியர்களும் தங்கள் முடிவைக் கண்டுவிட்டனர். நொடிப் பொழுதில் அனைவரும் மடிந்தனர்.

மனோவா: இது இரக்கத்திற்குரியது. ஆனால் பகைவரின் பட்டணம் அழிந்ததால் இசுரவேலர்களுக்கு எதுவுமில்லை.

தூதன்: மாந்த இனத்தவர்க்காய் முதலில் துக்கப்படு. பெருந்துயரம் உனக்குக் காத்திருக்கிறது.

மனோவா: அழிவு யாரால் ஏற்பட்டது?

தூதன்: சிம்சோனால்.

மனோவா: இது என் துன்பத்தைக் குறைக்கிறது. துன்பம் மகிழ்ச்சியாய் மாறுகிறது.

தூதன்: ஆ, மனோவா, செய்தியைச் சொல்லத் தயங்குகிறேன். தீய செய்திகள் விரைந்து சொல்லப்படுமாயின் அது உன் மனத்தைப் பெரிதும் தாக்கும். உள்ளத்தை உடைக்கும். நீ ஏலவே முதுமை அடைந்துமிருக்கிறாய்.

மனோவா: காலம் கழித்துச் செய்தியை அறிவது கவலையைப் பெருக்கும். ஆம், செய்தியைச் சொல்.

தூதன்: துயரச் செய்தியைச் சுருக்கமாய்க் கேள், சிம்சோன் மடிந்துபோனான்.

மனோவா: உண்மையாகவா. இது எனக்கு மிகவும் துயரமான செய்திதான். அவனை விடுவிக்க நான் கொண்டிருந்த நம்பிக்கையெல்லாம் சிதைந்துவிட்டன. இறப்பு அவனை விடுவித்துவிட்டது. இறப்பே நம் அனைவருக்கும் நிலையான விடுதலை தருகிறது. இறப்பு அவனைப் பெலிஸ்தியர்களின் சிறையிலிருந்து மட்டுமன்று, அவன் உடலில் சிறைபட்டுக்கிடந்த உயிரையும் ஈட்டுத்தொகை தந்து மீட்டுக் கொண்டது. ஒரு பெண் கருவுற்றபோது, குறிப்பிட்ட காலம் முடிந்தபின், குழந்தையைப் பெற்றெடுப்போம் என்ற நம்பிக்கையில் மகிழ்ச்சி பெறுகிறாள். ஆனால் அந்தக் கருவே குறித்த காலத்திற்குமுன் முதிராததாய் வெளிப்படின் துயர் அடைகிறாள். அதைப்போன்றே ஈட்டுத்தொகை தந்து என் மகனை மீட்டுக்கொள்வேன் என்ற நம்பிக்கையில் மகிழ்ந்திருந்தேன். ஆனால் அவனோ மாய்ந்துபோனான். அதன் விளைவால் என் நம்பிக்கை நிறைவேறவில்லை. பெலிஸ்தியர்களிடமிருந்து என் மகனை விடுவித்து நான் அடையவிருந்த மகிழ்ச்சியை அடையாமலே போய்விட்டேன். குளிர்கால மூடுபனி முழுமையாய் விலகுமுன்னே வெளிவந்த இளவேனில் முதல் மொட்டு மலருமுன் வாடி விழுவதைப் போல், முழுமையாய் நுகருமுன்னே என் மகிழ்ச்சி துண்டிக்கப்பட்டது. இருப்பினும் என் மகனின் மறைவுக்காய் நான் மனம்விட்டு அழுமுன் அவன் எப்படி மடிந்தான் எனச் சொல். ஏனெனில் ஒருவனின் இறப்பு அவன் வாழ்க்கை புகழ்ச்சிக்குரியதா இகழ்ச்சிக்குரியதா என்பதைத் தீர்மானிப்பதால், அவன் எப்படி மடிந்தான் என்று எனக்குச் சொல். அனைவரின் அழிவுக்கும் அவன் காரணமாயிருந்தான் என்று நீ சொன்னாய் அப்படியெனில் அவனைக் கொன்றவன் யார்? அவனுக்குச்

சாக்காட்டை உண்டாக்கிய அந்தப் புகழ்மிக்க கை யாருடைய கை?

தூதன்: பகைவரின் கைகளில் அவன் மாயவில்லை.

மனோவா: ஆண்டைகளைக் கொன்ற களைப்பு மேலீட்டால் மடிந்தானா? அல்லது வேறு வழிகளில் மடிந்தானா? அருள்கூர்ந்து அதை எனக்குச் சொல்.

தூதன்: அவன் தன் கைகளாலேயே மடிந்தான்.

மனோவா: அப்படியானால் தற்கொலை செய்துகொண்டிருக்கிறான். தற்கொலை செய்துகொள்ள அவனைத் தூண்டியது எது? பகைவர் இடையில் தன்னையே அவன் வெறுத்துவிட்டானா?

தூதன்: எதிரிகளின் இறப்புத் தவிர்க்கமுடியாதது ஒன்றாயிருந்தது. அதைப்போலவே அவனின் இறப்பும் தவிர்க்கமுடியாத ஒன்றாயிற்று. அவனுடைய அருஞ்செயல்களைப் பார்க்க அவர்கள் குழுமியிருந்த பேரரங்கை அவர்கள் மீதும் தன்மீதும் இடிந்து விழும்படிச் செய்துவிட்டான்.

மனோவா: சிம்சோனே, இறுதியில் நீ அளவற்ற ஆற்றலோடு இருந்திருக்கிறாய், இறந்திருக்கிறாய். பிறர் கற்பனை செய்யமுடியாத வகையில, அஞ்சத்தக்க முறையில் உனக்குக் கேடு செய்தவர்களைப் பழிவாங்கியிருக்கிறாய். ஆனால் இன்னும் அந் நிகழ்ச்சி பற்றி என் குழப்பம் தீரவில்லை. நீ உன் கண்களால் கண்ட காட்சியைப் பற்றி இன்னும் சற்று தெளிவாகச் சொல்!

தூதன்: வாய்ப்புச் சூழ்நிலை என்னை வைகறையிலேயே பட்டணத்துக்கு வரச் செய்துவிட்டது. வாயிலில நுழையும் போதே நடக்க இருந்த செயல்கள்பற்றி வீதியெங்கும் எக்காளம் தொனிக்கக் கேட்டேன். சிமசோன் தன் வலலமையைக் காட்டும் வகையில அருஞ்செயல்கள் செய்து காட்டப் போகிறான் என்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடனேயே, பட்டணத்தில் என் மற்ற பணிகளை முடித்துக்கொண்டேன். அவனின் அடிமை நிலைக்காக வருந்தினேன். அவனின் அருஞ்செயல் காட்சிகளைக் காணுமல் செல்ல என் மனம் விரும்ப

வில்லை. அரங்கம் மிகப் பெரியதாய் அறைவட்ட வடிவில் அமைந்திருந்தது. இரண்டே இரண்டு தூண்கள் மட்டுமே மண்டபத்தின் மகத்தான வளைவுகளைத் தாங்கி நின்றன. காட்சியைக் காண, அவரவர் தகுதிக்குத்தக்க இருக்கைகளைக் கொண்ட சிறிய சிறிய அறைகள் இருந்தன. பொது மக்கள் செயற்பாடுகளை நின்றவண்ணம் கண்டு களிக்க மறு பக்கத்தில் திறந்த வெளியிருந்தது. இங்கு மதிற் சுவர் இல்லை. மக்கள் மேம்பலகைகளில் உட்கார்ந்துகொண்டும், மேடைகளில் நின்றுகொண்டும் பார்த்தனர். நானும் பிறர் கவனிக்காதவண்ணம் கூட்டத்திலிருந்து சற்று விலகி நின்று கொண்டேன்.

செயல்கள் தொடர்ந்தன. மக்களிடையே மகிழ்ச்சி பொங்கியது. நண்பகல நெருங்கியது, வருணனுக்கு இட்ட பலிகள் அவர்கள் உள்ளத்தை மகிழ்ச்சியால் நிரப்பியது. மதுவும, விருந்தும் அவாகள் மதியை மயக்கின. அவர்கள் வீர விளையாட்டுகளில் ஈடுபட்டனர். உடனே சிம்சோன் பொதுத தொண்டன் உடையில் கொண்டுவரப்பட்டான். அவன் முன்னே, முழவு முழங்க, குழலிசையோடு இசை வல்லோர் அணிவகுத்து வந்தனர். சிம்சோனின் இருமருங்கும், படைக்கலம் தாஙகிய காவலர்கள், வில்லாளர், குண்டு வீச்சாளர்கள், குதிரை வீரர்கள் புடைசூழ, படை தாங்கியோர் முன்னும் பினனும் வர சிமசோன் அழைத்து வரப் பட்டான். சிம்சோனைக் கண்ட மக்கள் விண்ணதிர முழக்க மிட்டனர். தங்களின் மிகப் பெரிய பகைவன் சிம்சோனைத் தங்கள் அடிமையாய்த் தந்தமைக்காய், அவர்கள் தங்கள் மழைத் தெய்வத்தைப் புகழ்ந்தனர். சிம்சோன் அமைதியாக ஆனல் அச்சமின்றித் தான் செல்லவேண்டிய இடத்திற்குச் சென்றன. குருடனுயிருந்தும், மாந்த ஆற்றலுக்கு அப்பாற் பட்ட அற்புதங்களைச் செய்து காட்டினன். தொடக்கத்தில் மக்களால் நம்பமுடியாதவண்ணம், இமைப்பொழுதில், எவ்விதத் தயக்கமுமின்றி, அருஞ்செயல் பல புரிந்தான். அவனை எதிர் நிற்க எவனுக்கும் துணிவில்லை. இறுதியில், ஓர் இடைவேளையின் போது அவனை அவ்விரண்டு தூண்

களுக்கு இடையில் நிறுத்தினர். கடின உழைப்பால் களைப் படைந்திருந்த சிம்சோன் இரண்டு தூண்களையும் தொட்டுச் சாய்ந்தவண்ணம் தன்னைச் சற்று இளைப்பாற விடுமாறு தன் வழிகாட்டியைக் கேட்டுக்கொண்டான். இந்த இரண்டு தூண்கள்தாம் மண்டபத்தைத் தாங்கி நின்றன. வழி காட்டி இதில் ஏதும் தீங்கு இருப்பதாக நினைக்கவில்லை. எனவே வழிகாட்டி சிம்சோனைத் தூண்களுக்கு அருகில் கொண்டுவிட்டான். சிம்சோன் தன் கைகளால் தூண்களைத் தொட்டுப் பார்த்தபோது ஒரு பக்கமாகத்தான் தலையைச் சாய்த்தான். பின்னர் இறைவனைத் தொழுவதுபோல் உறுதி யான எண்ணத்துடன் நின்றான். பின் தலைநிமிர்ந்து 'இது வரை ஓ! பெலித்திய ஆண்டைகளே, நீங்கள் கட்டளையிட்ட படி செயல்களைச் செய்தேன். அனைத்துச் செயல்களையும் வியந்து ஆர்வத்துடனும், மகிழ்ச்சியுடனும் கண்டீர்கள். இப்போது, என் விருப்பம்போல், என் உடல் வலிமைக்கு எடுத்துக்காட்டாய் மற்றொரு செயலை உங்கள் விழிகளுக்கு விருந்தாய்ப் படைக்கப்போகிறேன்' என்று சொல்லிய வண்ணம் தன் வலிமையெல்லாம் ஒன்றுதிரட்டிப் பெருங் கடலாலும், பேய்க் காற்றாலும் நடுங்கும் மலைபோல், குனிந்து, அச்சந்தரும் முறையில் அந்த இரு மாபெரும் தூண்களையும் அசைத்தான். தூண்கள் வீழ்ந்தன. தொடர்ந்து வரிசை வரிசையாய்க் களிப்பில் அமர்ந்திருந்த பெலித்திய ஆண்டை கள்மீதும், பெண்கள்மீதும், சுற்றத்தார்மீதும், சமயக் கணக் கர்மீதும் அரங்கம் இடிந்து விழுந்தது. இந் நகர மக்கள் மட்டு மல்லர், பெலித்தியர்களின் பிற பட்டணங்களிலிருந்தும் வேடிக்கை பார்க்கக் குழுமியவர்கள் அனைவரும் மடிந்தனர். அவர்கள் இடையிலே நின்றுகொண்டிருந்த சிம்சோனும் அந்த முடிவைத் தவிர்க்கமுடியவில்லை. அரங்கிற்கு வெளியே நின்ற மக்கள் மட்டுமே தப்பினர்.

குழு ஆள்: இறுதியில் சிம்சோன் பழிதீர்த்துக் கொண் டான். பெரு விலைகொடுத்து அதைச் செய்துள்ளான். ஆனாலும் அவன் செயல் புகழுக்குரியது. தன் வாழ்வை ஈத்து வந்த இசுரவேலர்களுக்கு விடுதலை அளித்துள்ளான்.

இருந்தும், இறந்தும் அவன் தன் பிறப்பின் நோக்கத்தை நிறைவேற்றிவிட்டான். தூதனின் முன்னறிவிப்பினை மெய்ப்பித்துவிட்டான். அவனது இறப்பு அவன் வலிந்து பெற்றதில்லை. தானாகவே தேவையின் விளைவாயிற்று. ஏனெனில் அவனால் அழிக்கப்படவேண்டிய பெலித்தியர்கள் இடையில் நின்றான். உயிரோடு அவன் இருந்தபோது கொன்ற பெலித்தியர்களைவிட, அவன் சாவில் அவனால் கொல்லப்பட்டோர் ஏராளம்.

(குழு நண்பர்கள் இப்போது இரண்டாகப் பிரிந்து, ஒரு பிரிவினர் முன்னும், மற்றவர்கள் அவர்கள் பின்னும் சென்றனர்.)

முதல் அணி: பெலித்தியர்கள் குடித்தும் வெறித்தும் இருந்தபோது, அளவுக்கதிகமாக உண்டு, மகிழ்ச்சியாக இருந்தபோது, வருணனுக்கு அவர்கள் புகழ்பாடிக் கொண்டிருந்தபோது, உள்ளம் களிப்பால் நிரம்பி வழிந்தபோது, சிம்சோன் அவர்களுக்கு அழிவைக் கொண்டு வந்தான். குடிவெறி கொண்ட பெலித்தியர்களிடையே இறைவன் பிததுள்ள ஆவிகளை உலவ விட்டுவிட்ட ன். எனவே தான் அவர்கள் தங்கள் பித்தினால் தங்கள் காலனாக உண்டாக்கப்பட்ட சிம்சோனைத் தங்கள் இடையில் அழைத்து வேடிக்கை காட்டக் கட்டளையிட்டனர். அவர்கள் தங்கள் கேளிக்கைப் பொருளாகச் சிம்சோனை அழைத்தனர். அது அவர்கள் தங்கள் அழிவையே அறியாமல் அழைத்ததுபோல் ஆகிவிட்டது. கடவுளின் சினம் யார்மீது விழுகிறதோ அவர்கள் முட்டாள்களாக மாறித் தங்கள் அழிவைத் தாங்களே வலிந்து அழைத்துவிடுகின்றனர். அப்படிப்பட்ட நேரத்தில் அவர்கள், தங்களின் உணர்வை, அறிவை இழந்துவிடுகின்றனர்.

இரண்டாம் அணி: சிம்சோன் குருடன் என்று எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டான். ஆற்றலிழந்தவனாய் அனைவராலும் கருதப்பட்டான். ஆனாலும், காசா மண்டபத்திலே, சாம்பரின் ஊடே கனன்றுகொண்டிருக்கும் நெருப்பு, காற்றுப்பட்டவுடன் குப்பென்று பற்றி எரிவதுபோல், ஏதோ ஓர்

உள்ளுணர்வால் உந்தப்பட்டு, சிம்சோனிடம் மறைந்திருந்த வல்லமை வெளிப்பட்டது. பண்ணைகளிலுள்ள பறவைகளின் கூடுகளையும் மற்றும் ஒய்விடங்களையும் மாலையில் வந்து அழிக்கும் அரவுப்புள்போல் வரிசை வரிசையாய் உட்கார்ந்திருந்த பெலித்தியர்களைச் சிம்சோன் அழித்துவிட்டான். கூடுகளில் இளைப்பாறிக் கொண்டிருக்கும் பறவைகளைக் கழுகு எதிர் பாராத வகையில் தாக்கி அழிப்பதுபோல், சிம்சோன் பெலித்தியர்களை அழித்துவிட்டான். அரேபியக் காடுகளிலே தங்களையே எரித்துக்கொண்டு சாம்பலாகிவிடுகின்ற தீப் பறவைகள் (போனிககு), சாம்பலிலிருந்து மீண்டும் இளமையோடு உயிர்த்தெழுவதைப் போன்று மறைந்த சிம்சோனின் வலிமை மீண்டும் புத்தம் புதிய பொலிவுடனும் வலுவுடனும் வெளிப்பட்டுள்ளது. அங்ஙனம் வெளிப்பட்டுத் தனது பிறப்பின் நோக்கத்தை நிறைவேற்றியுள்ளது. முதுமையடைந்த தீப்பறவை மடிவதைப்போல் சிம்சோனின் உடல் அழிந்துவிட்டது. ஆனால் அவ் வழிவிலிருந்து அவனின் புகழுடம்பு தோன்றி என்றும் வாழும்.

மனோவா: இப்போது கண்ணீர் சிந்தவோ கவலைப் படவோ ஏதுமில்லை. சிம்சோன் சிம்சோனாகவே நடந்து கொண்டான். கடவுள் அவனிடம் எதிர்பார்த்தபடியே கடவுளின் அருள்பெற்ற ஊழியனாகவே நடந்துகொண்டான். அவனது வாழ்வு துணிவு நிறைந்தது. அந்த வாழ்வு தனக்குத் தீங்கு விளைத்தவர்களைப் பழிவாங்குவதில் முடிந்தது. ஆண்டுகள் பலவாய் அழுது புலம்பும்வண்ணம் பெலித்தியர்களை அவன் பழிவாங்கிவிட்டான். பெலித்தியர்களும், அவர்களின் நகரங்களும் இசுரவேலர்களிடம் ஆற்றலிழந்து காணப்படுகின்றன. இசுரவேலர்கள் தங்கள் எதிரிகளிடமிருந்து விடுவிககப்பட்டனர். அவர்கள் இனி ஒன்று கூடி இந்த வியப்பை நன்கு பயன்படுத்திக்கொள்ளட்டும். அவன் தனக்கும், எனக்கும் அழியாப் புகழை ஈட்டிக்கொண்டான். இவையெல்லாம், தன் குடும்பத்திற்கோ, மதத்திற்கோ எவ்வித இழுக்கும் ஏற்படாவண்ணம் செய்துமுடித்தான். கடவுள் சிம்சோனைக் கைவிட்டுவிட்டதாக நினைத்

தார்கள். ஆனால் அப்படி இல்லை என்பதை இப்போது அவர்கள் உணர்வர். கடவுள் அவனுக்கு இறுதிவரை துணைநின்று உதவியிருக்கிறார். இனி அழுவதற்கோ, துன்பப்படவோ ஏதுமில்லை. அவனுடைய செயல்களில் குறைபாடுடையவையோ வெறுப்புக்குரியவையோ எவையுமில்லை. அவனுடைய செயல்களில் இழிவுக்குரியவைபோாக பழிக்குரியவையோ எவையுமில்லை. அவன் எதைச் செய்தாலும், செம்மையாகச் செய்தான். நல் நோக்கத்திற்காய்ச் செய்தான். இதைவிடச் சிறந்த இறப்பு வேறு எதுவுமில்லை. எனவே அவன் மறைவுக்காய் நாம் வருந்தத் தேவையில்லை. மாறாக மகிழ்ச்சியும், மனநிறைவும் கொள்வோம். நாம் சென்று அவனது பெலித்தியர்களின் குருதிக் கறைபடிந்த உடலைக் காண்போம். ஏனங்களில் ஓடைகளிலிருந்து புனித நீர் கொண்டு வந்து அக் கறைகளைக் கழுவுவோம். இதனிடையே என் இனப் பிறப்புகள் அனைவரையும் அவன் உடலை எடுக்க எவ்வளவு விரைவாக அழைக்கமுடியுமோ அவ்வளவு விரைவாக அழைத்து வருகிறேன். நம்மைத் தடுக்கும் நிலையில் நம் எதிரிகள் இல்லை. அமைதியாகத் துயருடை உடுத்து இறுதி ஊர்வலத்துக்கு அணியமாவோம். சிம்சோனின் உடலை அவன் இல்லத்திற்கு எடுத்துச்செல்வோம். அங்கே அவனுக்கு நான் ஒரு நினைவுச்சின்னம் எழுப்புவேன். அதைச்சுற்றி என்றும் வாடாத பசுமையான மணம் கமழும் பூச்செடிகளை நட்டுவைப்பேன். அவனது கல்லறையில் அவன் புகழ் பரப்பும் வண்ணம் அவன் வென்ற வெற்றிச் சின்னங்களை வைப்பேன். இனிய பாக்களில் அவன் புகழைக் கல்லில் பொறித்துவைப்பேன். பார்க்கின்ற வருங்கால மரபினர், அவனது வீர நினைவுகளால், ஈடு இணையற்ற செயல்களால் புதிய உந்தாற்றல் அடைவர். கற்புள்ள கன்னியர்கள் நல்ல நாள்களில் அவன் கல்லறைக்குச் சென்று மலர்வளையம் வைத்து வணங்குவர். அவர்கள் சிம்சோனின் தவறான முறையில் வாழ்க்கைத் துணைவியர்களைத் தேர்ந்தெடுத்த ஒன்றிற்காக மட்டுமே கண்ணீர் சிந்துவர். அந்தத் தவறே அவனது பார்வையின்மைக்கும், அடிமைக்கும் காரணம் என எண்ணிக் கலங்குவர்.

குழு ஆள்: எல்லாம் நன்மைக்கே. கடவுளின் திட்டத்தை நாம் அவ்வப்போது ஐயப்படுவதும், முடிவில் அவை நலமாகவே முடிகின்றன. சில நேரங்களில் கடவுள் நம்மை வெறுப்பதுபோல் தோன்றும். ஆனால் அவர் மீண்டும் எதிர்பாராத வகையில் நமக்கு நன்மை செய்வார். சிம்சோனின் வாழ்வில் அதை அவர் நமக்குச் செய்து காட்டியுள்ளார்.

சிம்சோனின் எதிரிகளெல்லாம் இப்போது கவலையில் ஆழ்ந்துள்ளனர். சிம்சோனைத் தடுக்கும் ஆற்றல் எவருக்கும் இல்லாது போயிற்று. இப்போது நடந்த இந்த நிகழ்ச்சிமூலம் கடவுளின் ஊழியக்காரர்கள் புதிய பட்டறிவையும், மெய்ம்மையையும் பெற்றுள்ளனர். அவர்கள் இப்போது அமைதியோடும் மனநிறைவோடும் வீட்டுக்குச் செல்லலாம்.